# பக்தியோகம்

SRI RAMAKRISHNA MATH

ஸ்வாமி விவேகாநந்தர்

ஸ்வாமி விவேகாநந்தர்

அருளிய

# பக்தியோகம்

மே. கி. தாதாசாரியரால்

மொழிபெயர்க்கப்பட்டது

மூன்றாம் பதிப்பு

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

சென்னை

*All rights reserved.*] [விலை அணா **10**

PRINTED AT THE
KESARI PRINTING WORKS, MADRAS.

# முகவுரை

முற்காலத்தில் நமது முன்னோர்களான மஹரிஷிகள், தவப்பெருமையினாலும் அறிவின் வன்மையினாலும் கடவுளினது சொரூபத்தையும் ஜகத்தின் இயல்பையும் நன்றாக அறிந்து, அவைகளை உலகத்தாரும் அறியும்பொருட்டு வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் வெளியிட்டார்கள். இவ்வாறு பலவிடங்களில் சிதறியிருக்கின்ற அர்த்தங்களைத் திரட்டி, வேதவ்யாஸ பகவான் "ப்ரம்மஸூத்ரத்தில்" சுருக்கிச் சொல்லினர். பின்பு சங்கராசார்யர், ராமானுஜாசார்யர், மத்வாசார்யர் ஆகிய மூன்று உலகாசிரியர்களும் ப்ரம்மஸூத்திரத்திற்கு விரிவான பாஷ்யங்களை எழுதி அத்வைதம் விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்கிற மூன்று மதங்களை ஸ்தாபித்தார்கள். இப்படி நல்ல க்ரந்தங்களினால் குதர்க்கங்களுக்கு இடந்தாாமல் வெளியிட்டு, அதிவாதங்கள் சேரவொண்ணாதபடி அணைகளைக் கட்டியிருக்கவும், பிற்காலத்தில் நமது இந்தியச் சிறுவர்கள் இங்கிலீஷ் படிப்பிலேயே ஆழ்ந்து, ஸம்ஸ்கிருதத்தின் சுவையை மறந்து, ஸம்ப்ரதாயமாக வருகிற அர்த்தங்களின் வாஸனையையே துறந்து, வெளி மதத்தினர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டு மதிமயங்கி, தொன்றுதொட்டு வழங்கிவரும் ஆசாரங்களிலும், நூல்களிலும், ஆசார்யர்களிடத்தும் மதிப்புக் குறைந்து, வேதாந்த

மதமானது முழுவதும் பிழையென்று எண்ணி, புதிய மதங்களைக் கற்பித்தும், அன்னிய மதங்களில் புகுந்தும் குழப்பத்தை உண்டாக்கினார்கள். இத்தருணத்தில், ஆங்கிலேய நூல்களில் நிறைந்த ஞானத்தைப் பெற்று, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருடைய பாத மலர்களைப் பணிந்த வைபவத்தினால் மெஞ்ஞான போதத்தை உணர்ந்த ஸ்வாமி விவேகாநந்தர் என்னும் பெரியோர் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளித்தேசங்களில் இவ்வேதாந்த மதத்தைப் புகழ்ந்து பல பிரசங்கங்களைச் செய்து, அவர்களுக்கு இந்த மதத்தில் கௌரவத்தையும், நம்மவர்களுக்கு ஊக்கத்தையும், அவாவையும் விளைவித்தார். இந்த நற்செய்கைக்காக இன்னும் இவர்பால் நன்றியறிவும், குருபக்தியும் மிகுந்திருக்கின்றனவென்பது பெரும் பாலருக்கும் தெரிந்த விஷயமே.

இவ்வாறு இவர் செய்த உபந்யாஸங்கள் வெகுவாய் ஆங்கிலேய பாஷையிலேயே இருக்கிறபடியால், தென்னிந்தியாவில் அந்தப் பாஷையை அறியாதவர்கள் அவைகளை அறிந்துகொள்ள வழி இல்லை. இங்கு இங்கிலீஷ் தெரியாதவர்களே அதிகமாகையினாலும், இந்திய ஜனங்கள் எல்லோரும் இவரது உபந்யாஸங்களைப் படித்து நல்லறிவை அடையவேண்டியது மிகவும் அவசியமானதினாலும், இவ்வுபந்யாஸங்களைத் திராவிட பாஷைகளில் மொழி பெயர்த்தல் நலமென்று எண்ணி, முதலில் தமிழில் மொழி பெயர்க்கும்படி தமிழ், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலேய பாஷைகளில் விற்பன்னரும், பகவத்பக்தி மிகுந்தவருமான, எனது நண்பர்,

மே. கி. தாதாசாரியர், பீ. ஏ. அவரை நான் கேட்டுக் கொண்டேன். அவரும், அதைச் சரியென்று ஆமோதித்து முதலில், ஸ்வாமி விவேகாநந்தர் அமெரிக்கா கண்டத்தில் செய்த "பக்தியோகம்" என்கிற அற்புத உபந்யாஸத்தை, சாமானியர்களும் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதினார். நாங்களும் அதை ஓர் புத்தக ரூபமாக வெளியிடலாயினோம்.

கங்கை யாற்றின் வெள்ளம் போல கம்பீரமாய் ஓடுகின்ற ஸ்வாமி விவேகாநந்தரின் ஆங்கிலப் பிரசங்கங்களுடைய நடையை, வேறு பாஷையில் மொழிபெயர்ப்பது எளிதன்று. இப்புத்தகத்தை படிப்பவர்கள், இதன் குணத்தையும், மொழி பெயர்த்தவருடைய கல்வித் திறமையையும் நன்றாக அறிவார்கள். வேதாந்த நூல்களைத் திராவிட பாஷைகளில் பிரசுரம் செய்ய இதுவே இம்மடத்தாருடைய முதல் முயற்சி. அனைவரும் இப்புத்தகத்தை வாசித்துப் பயனை அடைவார்கள் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை. } சர்வாநந்தா.

## மூன்றும் பதிப்பு

இம்மூன்றும் பதிப்பை அச்சிட்டு வெளியிடப் பொருளுதவி செய்த குண்டூர் Chief Goods Clerk, ம-ள-ள-ஸ்ரீ K. வேலாயுத முதலியார் அவர்களுக்கு மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மயிலாப்பூர்,
20-5-1928. } யதீசுவராநந்தா.

## ச்வேதாச்வதர உபநிஷத்


உலகெலாந்தானேயாகி ஒடுங்கலி லீசனுகி
அலகிலாவறிவாயாண்டும் அமர்ந்துறை யமலனுகி
உலகங்களீரேழ்தம்மை யொழிவிலா தென்றுங்காத்தே
உலகினுக்கிறையாயென்றும் ஒப்பிலா வொருவனுனேன்.

பிரமனைப்படைத்து முன்னம் பெருமறை யவனுக்கீந்தோன்
இருளறுமான்மஞான வெழிற்சுடர் விளங்க நின்ருேன்
மருளுறுபிறவி நீக்கு மனமுடை யடியே னன்னேன்
திருவடிசரணதாகத் தினந்தோறும் பணிகின்றேனே.

[VI. 17-18.]

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்கம் |
| பக்தியின் சொரூபம் .... .... | 1 |
| கடவுள் .... .... | 7 |
| ஆத்மானுபவமே பக்தியோகத்தின் நோக்கம் .... | 13 |
| ஆசார்யன் அவசியம் .... .... | 16 |
| ஆசார்ய சிஷ்ய லக்ஷணம் .... .... | 19 |
| கடவுளின் அவதாரமும், லோகாசார்யரும் .... | 27 |
| மந்திரம்: பிரணவமும், சப்தமும், ஞானமும் .... | 31 |
| பிரதீகோபாசனையும், பிம்பாராதனமும் .... | 36 |
| இஷ்ட நிஷ்டை .... .... | 40 |
| வகையும் கருவியும் .... .... | 44 |
| **பராபக்தி** | |
| வைராக்கியம் அல்லது துறவு .... .... | 55 |
| பக்தனுக்கு வைராக்கியம் அன்பினாலேயே பிறக்கிறது .... .... | 60 |
| பக்தியோகத்தின் எளிமையும், அதன் இரகசியமும் | 66 |
| பக்தி பிரகாசிக்கும் பிரகாரங்கள் ... .... | 69 |
| பராபக்தியும், அதன் மூலமாய்த் தோன்றும் ஆத்ம ஸமர்ப்பணமும் .... .... | 72 |
| பராபக்தியும் பரமஞானமும் ஒன்றே .... .... | 78 |
| பக்தியின் த்ரிகோணம் .... .... | 80 |
| பக்திக்கு இலக்காகும் ஈசன் தனக்குத்தானே அத்தாட்சி .... .... | 86 |
| மானிடர் தெய்வபக்தியை வர்ணிக்கும் வகைகள் | 89 |
| நிகமனம் .... .... | 99 |



ஸ்வாமி விவேகாநந்தர்

# பக்தியோகம்

## பக்தியின் சொரூபம்

பக்தியோகமாவது நிரம்பிய விசுவாசத்துடன் ஈசுவரனை அடையும் பொருட்டுச் செய்யும் முயற்சியாம். ஈசுவரன்பால் தோன்றும் அளவற்ற அன்பே பக்தி. அந்த அன்பு ஒருவனிடத்தில் விளங்குமானால் அவன் ஒன்றையும் வெறுப்பதில்லை. எப்பொழுதும் களிப்புற்றிருப்பான். இந்தப் பக்தியை லௌகிக லாபத்தோடு சம்பந்திக்கலாகாது. ஏனெனில், உலகத்தில் பற்றுள்ள வரையில் அவ்வித பக்தி விளைவது அரிது. கர்மம், யோகம் இவைகளைக் காட்டிலும் பக்தி பெரிது. இவையிரண்டும் ஒரு பயனை நாடியே செய்யப்படுகின்றன. பக்தியோ தானே உபாயமும் பயனுமாம்.

இந்தப் பக்தியை நமது முன்னோர்கள் மிகவும் புகழ்ந்திருக்கிறார்கள். பக்தியைக் குறித்து எழுதியிருக்கும் நாரத சாண்டில்ய மஹரிஷிகள் தவிர, ஞான மார்க்கத்தையே விரிவாய்க் கொண்டாடும் வேதாந்த ஸூத்திர பாஷ்யகாரர்களும் பக்தியின் பெருமையை

வியந்து கூறுகிறார்கள். ஆராயின், ஞானமார்க்கத்திற்கும் பக்தி மார்க்கத்திற்கும் அவ்வளவு பேதமில்லை. இரண்டும் ஒரே மையத்தில் கூடுகின்றன. அவ்வாறே ராஜயோகமும் மோக்ஷத்தைக் கருதிச் செய்தால் அந்தத் தலத்திற்குக் கொணர்ந்து விடுகிறது. பக்தி தான் மோக்ஷத்தை அடைய எளிதும் ஏற்றதுமான வழி. ஆனால் ஆரம்பத்தில் அது கேவலம் மூடபக்தியாய்த் தோன்றுகிறது. ஒருவன் தனக்கிஷ்டமான வஸ்துவினிடம் வைக்கும் வாஞ்சையினால் இதர வஸ்துக்களைச் சாதாரணமாய் நிந்திப்பான். எந்த மதத்திலும் எந்தத் தேசத்திலும் பரிபக்குவமாகாத மனமுள்ளவர்கள் பிற தேவதைகளைத் துவேஷித்தே தம்மிஷ்ட தெய்வத்தினிடத்தில் பக்தியைச் செலுத்துகிறார்கள். தன் தெய்வத்தை மிக்க அன்புடன் வணங்கும் சுபாவமுள்ள ஒருவன் இதர தெய்வங்களைக் கண்ணால் காணவும் காதால் கேட்கவும் கூடச் சகியாமல் இருப்பதற்கு இதுதான் காரணம். மேற்கூறிய பக்தி, பிறர் வஞ்சியாவண்ணம் எஜமானனுடைய பொருள்களைப்பாதுகாக்கும் நாயினது இயற்கையறிவினை ஒக்கும். ஆனால் நாயினறிவு மனிதன் அறிவைவிட ஒரே வழிச் சிறந்தது. நாய் தன் எஜமானனை எந்த உடுப்போடு வந்தாலும் தவறாமல் அறியும். மூடபக்தனோ கொஞ்சமேனும் விவேகமின்றித் தன் மதத்தையே மேன்மையாக நினைத்துப் பிறர் மொழியிலுள்ள உண்மையை உணரான். தன் மதத்தவர்களிடத்தில் அன்பும் நேர்மையும் கொண்டவன் பிற மதத்தினர்களுக்கு இடுக்கண் செய்யவும் துணிவான்.

இவ்வித அபாயம் பக்தியின் ஆரம்பத்தில் அதாவது கௌணபக்தியில்தான் உண்டு. பக்தி முதிர்ந்தால் துவேஷத்திற்கே இடங்கொடாது. இவ்வித முதிர்ந்த பக்தி நிறைந்திருக்குமவனே அனுராகசாகரனான ஈசுவரனை அறிந்தவன். அவனிடத்தில் துவேஷமே நாடாது. இப்பிரபஞ்சத்தில் எல்லா நற்குணங்களும் ஒவ்வொருவருக்கும் அமைதல் அரிது. எவனிடத்தில் ஞானம், யோகம், பக்தி இம்மூன்றும் ஒருங்கு பொருந்தி இருக்கின்றனவோ அவனே உயர்ந்த நடக்கையுள்ளவனென்பது நமக்கு அனுபவ ஸித்தம். பக்ஷிகள் பறப்பதற்கு இரண்டு சிறகுகளும் ஒருவாலும் இன்றியமையாதவைபோல மனிதன் உஜ்ஜீவிக்க ஞானம்,பக்தி என்கிற இரண்டு சிறகுகளும் யோக மென்கிற நடுநிலையும் வேண்டும். இம்மூன்றுவிதமான மார்க்கங்களையும் சமரசமாக அனுசரிக்கச் சக்தி யற்றவர்களுக்குப் பக்திமாத்திரமே தகுந்த உபாயம். ஞானமும் கருமமும் அவசியங்களேயாயினும், ஈசுவரனிடத்தில் கரைகாணுக் காதலை விளைவிப்பதோடு அவைகளின் உதவி முடிகின்றது.

ஞானிக்கும் பக்தனுக்கும் அதிக வேற்றுமை கிடையாது. ஞானி பக்தியை மோக்ஷத்திற்குக் கருவியாகக் கருதுகிறான். பக்தனுக்குப் பக்திதான் கருவியும் காரியமுமாம். இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கும் பேதம் ஒன்றுமில்லை. பக்தி உபாயமாகும் போது கீழ்ப்பட்ட உபாஸனாரூபமாகத் தோன்றுகிறது. கடவுளையறிந்த பின்பு உண்டாகும் அன்புக்கும் அதற்கும் அதிக பேதமில்லை. ஆகையால், ஞானியும் பக்த

னும் அவனவன் தன்தன் வழியையே பெரிதாகக் கொண்டாடுகிருனே யொழியப் பரமபக்தி உண்டாகும் போது பரிபூரணஞானம் தானே தோன்றுமென்பதை மறந்துவிடுகிருன்.

இவ்வாலோசனையைக்கொண்டு இனி இவ்விஷயத்தைப்பற்றின சிற்சில வேதாந்த சூத்திர விவரணங்களைச் சற்று விசாரிப்போம். "ஆவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத்" என்கிற சூத்திரத்தை விவரிக்கும்போது சங்கரபகவத்பாதர், "உலகத்தில் குருவையே தெய்வமாகக்கொண்டு அவர் வழிச்செல்வானைப்பார்த்து அவன் குருவை உபாஸிக்கிருன் என்று சொல்லுகிருர்கள். அப்படியே பதிவிரதையானவள் வெளியிற் சென்ற கணவனை நினைத்துக்கொண்டிருக்கிருள் என்று பேசுகிருர்கள். இங்கு அதிக அன்புடனே கணவனை நினைக்கிருள் என்பதுகருத்து" என்று எழுதியிருக்கிருர்.

பகவத் ராமாநுஜாசாரியார் எழுதுவதாவது :—
" தியானமாவது இடைவிடாமல் தைலதாரைபோல் ஓடும் ஸ்மரணம். இவ்விதமான ஸ்மரணம் கடவுளைப் பற்றி இருக்குமாகில் எல்லாப் பந்தங்களும் நீங்கும். இக்கருத்தைக் கொண்டுதான் சுருதிகள் தியானத்திஞல் மோக்ஷம் அடையலாம் என்று முறையிடுகின்றன. 'அப்பாலும் இப்பாலும் இருக்கும் பரம்பொருளைக் கண்டால் ஹ்ருதய பந்தங்கள் நீங்கும்; சந்தேகங்கள் போம்; சகலவினைப்பயனும் நீங்கும்' என்கிற சுருதியில்போலத் தியானத்தை ஸாக்ஷாத்காரத்திற்குச் சமமாகச் சொல்வார்கள். (அண்டையில் இருப்பவனைக் காணலாம். தூரத்தில் இருப்பவனை மனத்திஞல்

தான் அறியலாம். ஆயினும் சுருதிகளில் நாம் கிட்ட விருப்பவனையும் எட்டி இருப்பவனையும் காணவேண்டும் என்றதனால் மனத்தினால் நினைப்பதும் நேரில் காண்பதும் ஒன்றென்று ஆகிறது.) முறைகள் அதிகமானால் தியானமே காட்சிக்கு ஒப்பாகும்................கேவலம் சாஸ்திரஞானத்தினாலும், மேதையினாலும், வேதப் பயிற்சியினாலும் ஆத்துமாவை அறியமுடியாதென்று சொல்லி, மேலும் அந்த ஆத்துமா எவனை விரும்புகிறதோ அவனே அதையறிகிறான் என்றும், சிரவணத்தினாலும் மனனத்தினாலும் நிதித்தியாஸனத்தினாலும் மட்டும் ஆத்துமாவை அடையமுடியாது, அந்த ஆத்துமா எவனை விரும்புகிறதோ அவனே அதையடைகிறான் என்றும் சுருதிகள் சொல்லுகின்றன................ ஈசுவரன், தன் அனுக்கிரகம் பெற்றவன் தன்னை அடையும் பொருட்டுத் தானே அனுகூலம் செய்கிறான். 'எவன் என்னை இடைவிடாது பிரீதியோடு பூசிக்கிறானோ அவனுக்கு என்னை அடையும் வழியை நான் காட்டுகிறேன்' என்று பகவான் சொல்லுகிறார். ஆதலால் யாவனொருவன் ஈசுவரனுக்கு உவப்பாயிருக்குமென்று அவனையே தியானிக்கிறானோ அவன் ஈசுவர கடாக்ஷம் பெற்றவன்; அவனே ஈசுவரனை அடைவான். இவ்விதத் தியானத்திற்குப் பக்தியென்று பெயர்."

பாதஞ்சல சூத்திரத்தில், "ஈசுவர ப்ரணிதானாத்வா" என்கிற சூத்திர பாஷ்யத்தில், போஜராஜரும், "ப்ரணிதானமாவது பயனைக்கருதாது பரம குருவினிடத்தில் பணிவிடைசெய்யும் தன்மை" என்று எழுதினார். வ்யாஸபகவானும், "ப்ரணிதானமாவது ஈசுவர

னது கிருபையையும் தன்னுடைய இஷ்ட பூர்த்தியை யும் அடைவிக்கக்கூடியதான ஒரு பக்தி விசேஷம்" என்றார். சாண்டில்யமகரிஷியின் மதப்படி, பக்தியாவது ஈசுவரனிடத்தில் வைக்கும் நிரதிசயமான அனுரக்தி (விசுவாசம்). பக்தியின் உண்மையான லக்ஷணத்தைப் பக்தசிரோமணியான ப்ரஹ்லாதர், மேல்வரும் பாசுரத்தில், "மூடர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் நீரிற்குமிழிபோல் தோன்றி மறையும் பொருள்களிடத்தில் எந்த அன்பைப் பாராட்டுகிறார்களோ, அந்த அன்பு உம்மை நினைக்கும்போது என்னைவிட்டு நழுவாமலிருக்க அருள்புரியவேண்டும் ஈசுவரா!" என்று தெரிவிக்கிறார். ஈசுவரனைத்தவிர மற்றப் பதார்த்தங்களிடத்தில் செய்யும் பிரீதி பக்தியாகாது. ஏனெனில், இராமானுஜாசாரியர் பாஷ்யத்தில் காட்டியிருப்பது போலப் பிரம்மன் முதல் புல் பரியந்தமுள்ள சராசர வஸ்துக்கள் எல்லாம் கருமத்தினலுண்டான ஜனன மரண பீடைக்கு உட்பட்டவை. அவைகளைத் தியானிப்பதால் மோக்ஷத்திற்குச்சாதனம் கிடைக்காது. சாண்டில்யர் சொன்ன லக்ஷணத்தில் வரும் "அனுரக்தி" என்னும் பதத்திற்கு ஸ்வப்நேசுவரர் என்பவர் அனு (பிறகு) ரக்தி (அன்பு) என்று பிரித்து, ஈசுவரனுடைய மகிமையை அறிந்த பின்பு செய்யும் அன்பு என்று அர்த்தம் பண்ணினர். இதனல் பக்தியென்பது இடைவிடாத தியான ரூபமென்றும், ஆரம்பத்தில் உபஸநா ரூபமாகவும், முடிவில் மேற்பட்ட விசுவாச ரூபமாகவும் பரிணமிக்கிறதென்றும் விளங்குகிறது.

---

# கடவுள்

அவர் யார்? இந்தப் பிரபஞ்சத்தின் சிருஷ்டி, ஸ்திதி, பிரளயம் இம்மூன்றும் எவர் அதீனமோ அவரே கடவுள். அவர் ஸர்வதேசகாலவியாபி, களங்க மற்றவர், பந்தமில்லாதவர், எல்லாம் வல்லவர், யாவும் உணர்ந்தவர், சகல ஜீவராசிகளிடத்திலும் அருளோடு கூடினவர், ஆசிரியர்க்கெல்லாமாசிரியர், இன்னதென்று உரைக்கமுடியாத காருண்ய பரிபூரணர்.

மேற்சொன்ன லக்ஷணங்கள் அனைத்தும் ஸகுணப் பிரஹ்மத்தைச் சொல்லுகின்றன. ஆனால் வேதாந்திகள் சொல்லும் ஸச்சிதானந்த கன மூர்த்தியான பிரஹ்மம் வேறு, பக்தர்கள் உபாஸிக்கும் தயாஸாகரனை ஈசுவரன் வேறா? அல்ல. இருவருமொருவரே. பக்தனுபாஸிக்கும் ஸகுணப்பிரஹ்மமும் அத்விதீயமான பரப்பிரஹ்மமும் ஒன்றேயாம். பரப்பிரஹ்ம மென்பது தியானத்திற்கும், கைங்கரியத்திற்கும் விஷயமாகாததலால் அந்தப் பிரஹ்ம ஸ்வரூபனும் மெய்யுணர்வுக்கெட்டினவனு மாயிருக்கிற ஸகுண ரூபியை பக்தன் உபாஸிக்கிறான்.

மண்ணே பலவித பாண்டங்களாவதுபோல, பரப்பிரஹ்மம் அநேக ரூபங்களாய்ப் புலப்படுகிறது. மண்ணும் பாண்டமும் தன்மையில் எவ்வாறு ஒன்றோ, அவ்வாறே பரப்பிரஹ்மத்திற்கும் ஸகுணப் பிரஹ்மத்திற்கும் இயற்கையில் ஒற்றுமை வேற்றுமை கிடையா. ஈசுவரரென்பவர் மனத்தினால் அறியக்கூடிய அகண்ட பிரஹ்மஸ்வரூபம்.

பிரஹ்ம ஸூத்திரம் நான்காவது அதிகரணத்தில் நான்காவது பாதத்தில் மஹரிஷி பாதராயணர், வீடு பெற்ற ஜீவனுக்கு அளவற்ற ஞானமும் சக்தியும் விளையுமென்றுசொல்லி, "ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணு தஸந்நிஹிதத்வாரீச" என்கிற சூத்திரத்தில் சிருஷ்டி, ஸ்திதி, பிரளயம் இம்மூன்று குணங்கள் தவிர மற்ற விஷயங்களில் ஜீவன் ஈசுவரனுக்கு நிகரென்று சொல்லுகிறுர். துவைதிகள் இந்த சூத்திரத்தைச் சுலபமாய் விவரிப்பார்கள். கடைப்பட்ட ஜீவாத்மாவுக்கு ஈசுவரனுக்குரிய சக்தியும் சுதந்திரமும் வருவது அஸாத்தியமேயன்ரே ?

ராமானுஜர் பின்வருமாறு கூறுகிறுர். "ஈசுவரனுக்கே உரிய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார சக்திகள் முக்தி பெற்ற ஜீவனுக்குப் பிறக்குமா, அல்லது பிரஹ்மத்தை நேரிற்காண்பதில் மாத்திரமா இவன் வைபவம்? என்கிற சந்தேகம் இவ்விடத்தில் உண்டாகிறது. முக்தன் பரம ஸாம்யம் பெறுகிறுன் என்று சொல்லுகிற சுருதிகளை ஆதாரமாகக்கொண்டு ஜகத்தையாளும் திறமை முக்தனுக்கு உண்டென்று நாம் சற்று ஒத்துக்கொள்வோம். 'குற்றமற்ற ஜீவன் பரம ஸாம்யம் பெறுவான்,'' 'அவன் இஷ்டங்கள் யாவும் கைகூடும்' என்று சுருதிகள் சொல்லுகின்றன. ஜகத்தையாளும் திறமை கிடைக்காவிடில் பரம ஸாம்யம் வருமென்பதும் எல்லா வாஞ்சையும் கைகூடுமென்பதும் சரியாகா. ஆகையால் கீழ்ச்சொன்ன சுருதிகளால் ஜகத்தையாளும் வல்லமையும் முக்தனுக்கு வரும் என்பது பலிக்கிறது. இது சரியன்று. ஜகத்தை ஆளுவது என்

றால், ஜகத்திலுள்ள சகல சராசர வஸ்துக்களேயும் நாம ரூபங்களேயும் நடத்துவது. இது மாயை நீங்கி பிரஹ்மத்தை நேரில் அனுபவிக்கும் முக்தனுக்குக் கிடையாதென்பது பிரஹ்மத்தின் லக்ஷணத்தைக் கூறும் சூத்திரத்திலேயே விளங்குகிறது. எல்லா ஜீவன்களும் எதனிடத்தினின்று தோன்றி, எதனுல் வளர்ந்து,எதனுள் சேருகின்றனவோ அதுவே பிரஹ்மம். இந்தக்குணம் முக்தனுக்கும் உண்டாகில் பிரஹ்மத்தின் அஸாதாரண குணமாகச் சொன்னது பிழையாம். லக்ஷண வாக்கியத்தில் அஸாதாரண குணங்களேத்தான் சொல்வார்கள்.'' அடுத்த சூத்திரத்தை விவரிக்கும் போது, "பரம ஸாம்யம் வருமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லும் சுருதிகள் இருக்குங்கால் இந்த ஸித்தாந்தம் சரியல்லவென்று சொல்வதும் தவறு. ஏனெனில், இந்தச் சுருதிகளெல்லாம் ஸாமான்ய தேவதைகளோடு விளங்கும் முக்தனேப்பற்றிச் சொன்னவை'' என்று சொல்லுகிறார். ராமாநுஜரின் மதத்திலும் துவைதக் கொள்கை கலந்திருப்பதால் ஜீவாத்ம பரமாத்ம பேதத்தைத் தெளிவாய்க் காட்டுவது சுலபமாயிற்று.

அத்வைத ப்ரவர்த்தகரான சங்கராசாரியர் மதத்தை மேலே சொல்வோம். அவருடைய மதத்திலும் துவைத சித்தாந்தத்தில் கூறியபடி ஜீவன் பெறுங்குணங்களே முழுவதும் அங்கீகரித்துப் பரம ஸாம்யம் அடைவது எவ்வாறென்பது நிரூபிக்கப் படுகிறது. வீடுபெற்ற பின்னும், பிரஹ்மத்தினின்றும் பிரிந்து நிற்கும் ஆத்மாக்கள் ஸகுணப் பிரஹ்மத்தை அனுபவிப்பார்கள். இவ்வாத்மாக்களேப் பற்றித்தான்

மேல்வரும் பாகவத சுலோகம் சொன்னது. அதன் பொருள்:—

"ராஜனே! ஆத்மானுபவத்திலேயே மகிழ்ந்து பற்று அழிந்த முனிவர்களும், அவ்வீசுவரனிடத்தில் பயனைக் கருதாது பக்தியைச் செய்கிறார்கள். அவ்வளவு மகா குணம் பொருந்தியவன் ஈசுவரன்."

பிரகிருதியில் லயித்துப் பரிசுத்தர்களாய் மறு ஜன்மத்தில் தேவர்களாகப் பிறப்பார்கள் என்று சாங்கியர் வர்ணிக்கும் ஆன்மாக்களும் இவையே. இவைகள் எப்போதும் கடவுளுக்கு நிகராகா. கர்த்தாவென்றும் கருமமென்றும், ஞானமென்றும் ஞானியென்றும், விஷயமென்றும், நீ, நான், அவன் என்றும் கூறும் விவகாரமேயில்லாத நிலையை அடைந்த ஜீவர்களோ மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத பதத்தை நாடினவர்கள். இப்பதத்தை இதுவல்ல இதுவல்லவென்று மறுத்துச் சுருதிகள் கூறுகின்றனவேயொழிய இன்னதென்று வெளிப்படையாய் உரைக்கவில்லை. இந்நிலையை நாடாத ஜீவனுக்கு, சித்து, அசித்து, ஈசுவர ரூபமான பிரஹ்மத்தின் அனுபவமே உண்டாகும். பிரஹ்லாதன் பக்தி மிகுதியினால் தன்னை மறந்தபொழுது ஜகத்தென்றும், ஜகத்காரணமென்றும் அறிவு அவனுக்குத் தோன்றவில்லை. சற்று அந்நிலை குலைந்து தன்னறிவு வந்தவுடனே சுற்றித் தோன்றும் பிரபஞ்சத்தையும் அப்பிரபஞ்சத்தையாளும் சகல கல்யாண குணாகரனை கடவுளையும் நினைந்தான். அவ்வாறே, கோபியரும் கண்ணனிடம் வைத்த ஆர்வத்தினால் தங்களை மறந்து தாங்களே கண்ணனாகக் கருதி அகங்கரைந்து ஆடினார்

கள். சற்றுப்பொறுத்து, கண்ணனைத் தெய்வமென நினைத்த காலையில், பீதாம்பரதாரியாய் மந்தஹாஸ முகத்தோடு வனமாலையணிந்து கோடிமன்மத ரூபியானவாஸுதேவர் அவர்கள் எதிரில் தோன்றினார்.

இவ்விஷயத்தைப்பற்றிச் சங்கரர் என்ன சொல்லுகிறாரென்று பார்ப்போம்.

"சகுணப் பிரஹ்மத்தை உபாஸித்து ஸாரூப்யம் பெற்ற ஜீவாத்மாவின் விபவம் பூரணமா? அன்றா? என்கிற கேள்வி பிறக்க, 'வீடு பெறுவார்', 'தேவர்கள் அவரைப் பணிவார்', 'எல்லாவுலகிலும் அவர் வேண்டுகோள் நிறைவேறுகிறது' என்று சுருதிகள் இருப்பதால் அவ்வாத்மாக்களுக்குப் பரிபூரண விபவமென்றே கொள்ளவேண்டுமென்று பூர்வபக்ஷிகள் சொல்வார்கள். இதற்குப் பரிகாரமாய், "ஜகத்தையாளும் திறமை தவிர" என்று மஹரிஷி சூத்திரத்தைச் சொன்னார். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைத் தவிர மற்ற அணிமாதி சக்திகளை முக்தர்கள் பெறுகிறார்கள். ஜகத்தையாளும் தன்மையோ ஈசுவரனுக்கே உள்ளது. ஏனெனில், சிருஷ்டியைப்பற்றின சுருதிகள் எல்லாம் அவனை மாத்திரம் கூறுகின்றனவே யல்லது முக்தனைக் குறிப்பதில்லை. அன்றியும் சிருஷ்டிகர்த்தாவைச் சொல்லும் பொழுது, பரிபூரணன் என்னும் விசேஷணமும் வருகிறது. ஈசுவரனை அறிந்த பிறகு அணிமாதி சக்திகள் விளைகின்றனவென்று சொல்லி யிருப்பதால் முக்தனுடைய சக்திகள் யாவும் அளவுள்ளவை. ஆதலால் ஜகத்தை ஆளுவது என்னும் குணத்தில்அமையா. மேலும், அநேக முக்தர்கள் இருப்பதாலும், ஒவ்

வொருவரும் தனித்தனி கருத்துள்ளவர்க ளாகையா லும், ஒருவன் ஆக்க நினைக்கும்போது மற்றொருவன் அழிக்க நினைக்கவும் நேரும். இவ்விதக் குழப்பம் வாராதபடி ஸகல ஜீவர்களும் ஒருவர் ஆளுகைக்குள் இருப்பது அவசியம். ஆதலால், ஈசுவரனை பரமாத் மாவுக்கு முக்தர்கள் அடங்கினவர்களென்றே கொள்ள வேண்டும்.''

ஸகுணப் பிரஹ்மத்தைக் குறித்தே பக்தி செய்ய முடியும். அவ்யக்தவஸ்துவைத் தேடுவோர்க்குப் பக்தி ஊன்றுவது அரிது. உருவமும் குணமும் இல்லாத பொருளை மனத்தினால் எவ்வாறு நினைக்க முடியும் என்பது உண்மையே. ஆயினும், நாம் காணும் வஸ்துக் களிலும் இவ்வாறேயன்றோ? புறத்தே தோன்றும் பொருளைக் கண்டறிய மனிதனுக்கு அறிவு மாத்திரம் போதாதென்றும், அவ்வறிவுதானும் வேண்டிய கருவி களில் ஒன்றென்றும் வெகு காலத்திற்கு முன்னமே கபிலர் தீர்மானித்திருக்கிறார். நம் உடல் முதல் கட வுள் வரையில் உள்ளபொருள்களை நம் அறிவுடன் ஏதோ வேறொன்று கலந்து நிற்பதினால்தான் காண்கி றோம். நாம் உண்மையென்று கருதுவன யாவும் இவ் வகையே. அவருடைய உருவமின்னதென்று தெரி யாததனால் ஈசுவரனென்று தனியாக ஒன்றுமில்லை என் பதும் பிழை. பிரபஞ்சத்தில் காணும் வஸ்துக்கள் உண்மையாதல் போலக் கடவுளும் உண்மையே.

---

# ஆத்மானுபவமே பக்தியோகத்தின் நோக்கம்

மேலே விவரித்த விசாரங்கள் மனதை உறுதியாக்க மட்டும் பக்தனுக்கு அவசியம். அதற்குமேல் அவைகள் உதவா. அவன் சாரும்வழியிலோ சீக்கிரத்தில் களங்கமும் ஐயமும் நிறைந்த நிலையைத் தாண்டி அனுபவம் பெறுகிறான். கடவுளது அருளால் சடிதியிலே சாரமில்லாத வழக்கையும் மொழிச்சாதுரியத்தையும் ஒழித்து, அஞ்ஞான இருள் நீங்கி, மாசறு காட்சிகண்டு ஆனந்தமுறுகிறான். அவன் இனி தர்க்கிப்பதில்லை, ஆப்த வசனமென்றும் நம்புவதில்லை; தானே உணருகிறான். அவனுக்கு விகல்பம் தோன்றுவதில்லை. மெய்யுணர்வால் அறிகிறான். இப்படிக் கடவுளை நேரிற் காண்பதுவும், உணர்வதுவும், அனுபவிப்பதுவும், அவரைப் பற்றி வாதிப்பதைவிடப் பெரியனவல்லவா? மோக்ஷத்தைக் காட்டிலும் இப்பதவி மேல் என்று கொள்ளும் பக்தர்கள் அநேகர் உளர். இதுவே பெரும் பயன் அன்றோ? ஐஹிக சுகம் தரும் பொருள்கள் தாம் பயன் பட்டவையென்று சாதிக்கும் ஜனங்கள் பலர் இவ்வுலகில் இருக்கிறார்கள். மதம், தெய்வம், ஆத்மா ஒன்றையும் அவர்கள் மதிப்பதில்லை. ஏனெனில், இவைகளால் அவர்களுக்குப் பொருளோ இன்பமோ கூடுவதில்லை. இத்திறத்தாருக்குப் பசியையும் ஐம்பொறி வேட்கையையும் ஆற்றாத வஸ்துக்கள் பயனற்றவை. பொருள்களின் பிரயோஜனம் அவனவனது மனோதர்

மத்திற்குத் தக்கபடி நிற்கும். ஆகையால், புசிப்பது, குடிப்பது, மக்கட்பெறுவது, இறப்பது இவைகளைத் தவிர வேறு நினைவில்லாதவர்களுக்கு இந்திரிய ஸுகம் பெறுவதே லாபம் என்று தோன்றும். இச்சிற்றின்பத்தைக் காட்டிலும் மேம்பாடுடைய ஸுகம் உண்டென்று சிந்திக்கவும் கற்க அவர்கள் பல பிறப்பெடுக்கவேண்டும். இவ்வுலகத்தில் கிடைக்கும் நிலையற்ற இன்பத்தை விடச் சாசுவதமாக நிற்கும் ஆத்ம சுகம் உயர்ந்ததென்றும், புலன்களால் அடையும் சுகம் சிறுவர் விளையாட்டென்றும் நிச்சயித்த பெரியோர்கள், கடவுளும் அவர்பால் பக்தியும் தாம் இப்பிறப்பால் அடையும் பேறு என்று கருதுவார்கள். இம்மையிலே மூழ்கியிருக்கும் இக்காலத்திலும் கடவுளை நாடுவார் உண்டு.

முன் சொல்லியபடி பக்தியோகமானது ஆரம்பத்தில் கௌணமென்றும் கடையில் பரமமென்றும் இருவகைப்படும். கௌணபக்தி முதிரப் பலவகை உதவிகளும் வேண்டும். எல்லா மதத்திலும் ஈசுவரனைத் தேடுபவர்களுக்கு உபகாரமாய்க் கடவுள் அவதாரங்களைச் சொல்லும் உபாக்கியானங்கள் பலவுண்டு. உபாக்கியானங்களும் கிரியைகளும் வெகுவாய் எங்கு பரவுகின்றனவோ அங்குதான் மஹாபக்தர்களும் சுத்தர்களும் பிறக்கிறார்கள். மெல்ல மெல்லத் தளர்ந்தசைந்து கடவுளை நோக்கிச் சாரும் சிற்றறிவுகளுக்கு உறுதியான கைப்பிடி கொடுக்க வல்ல கருமம், கதை முதலிய மாண் பொருள்களை முழுதுமொழிக்கவும், ஆத்மஞானமாகிய மேன்மாடிக்கு அணைக்கம்பியை ஒடிக்கவும், வைதிக வாஞ்சையாகிற சிறிய பயிருக்குத் தக்க

தோர் எருத் தந்து செழிப்பை வளர்க்கும் துணைக்கரு விகளை ஓட்டவும் முயல்கின்ற சமயத்திரள்களிலோ, அர்த்தமில்லாத வெறும் வார்த்தைகளும், குதர்க்கங் களுமே மிகுந்து, சீர்திருத்துவோம், ஜனங்களுக்கு நன்மையைத் தேடுவோமென்கிற வீண் ஆடம்பரமே மிஞ்சி நிற்கும். இவ்வித மதத்தார்க்கும் லோகாயதர் களுக்கும் வித்தியாசம் யாதொன்றுமில்லை. இவர்கள் இப்பிறப்பிற்போலவே மறுபிறப்பிலும் பொருளின்பத் தையே விரும்புகிறார்கள். ஆதலால்தான், இவர்கள் இவ்வுலகில் ஜனங்களுக்கு உபயோகமாகக் குளம் வெட் டுதல் முதலிய தருமங்களைச் செய்வதே மானிட வாழ்க் கையின் பயன் என்கிறார்கள். அஞ்ஞானமும் மூர்க்க மும் நிறைந்த இத்தன்மையோர்கள் தங்கள் சுய நிறத்தை மறைக்காது வெளிப்படுத்தித் தங்களின மாகிய நாஸ்திகர்களோடு சேர்வார்களாகில் உலகத்திற்கு க்ஷேமம் விளையும். வீண்வழக்குப் பேசுவதைக் காட் டிலும் கொஞ்சம் ஸாத்விகம் உளதாகில் அதுவே மேல். இவ்வித ஆடம்பரம் செய்வார்களுள் உண்மையான ஸாத்விக முடைய மஹான் ஒருவரேனு மிருப்பது அருமை. அப்படி ஒருவரையாகிலும் காண்பியாவிடில் இவர்கள் வாயை மூடிக்கொண்டு, குழந்தைகள்போல, அறிந்துபேசும் நம்மஹரிஷிகளின் அடிபணிந்து தத்து வத்தை அறியட்டும்.

# ஆசார்யன் அவசியம்

ஒவ்வொரு ஜீவனும் கடைசியில் முக்தியை யடைவான். முற்பிறப்பில் நாம்செய்த வினைகளின் பயனாய் இப்பிறப்பை அடைகிறோம். இப்பிறப்பில் செய்யும் வினைகளுக்கு அனுகுணமாய் மறுஜன்மம் பெறுவோம். இப்படி நம்முடைய சுகத்திற்கு நாமே காரணமாயினும் வெளியினின்று உதவியும் அவசியம் வேண்டும். இவ்வுதவி வரும்பொழுது நற்குணங்கள் மேலிடும்; அவிச்சையை யழிக்கச் சக்தி அதிகரிக்கும்; கடைசியாகப் பற்று நீங்கி வைராக்கியம் பிறந்து மனிதன் ஸாத்விகனாவான்.

இவ்வித உதவி நூல்களோதுவதால் வருவதில்லை. ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனிடத்தினின்றே உபதேசம் பெறவேண்டும். ஆயுள்முழுதும் புத்தகம் படித்தும் சாஸ்திர ஞானம் கசடின்றிப் பெற்றும் வைராக்கியம் விருத்தி யடையாதே போம். ஞானத்திற்கும் வைராக்கியத்திற்கும் சம்பந்தமேயில்லை. வெகுவாய், படிப்பினால் புத்தி நுட்பமட்டுமே விளைந்து ஆத்மாவுக்கு எவ்வித உபகாரமும் கிடைப்பதில்லை. வேதாந்த விஷயங்களைச் செம்மையாய் விசாரிக்கவும் தர்க்கிக்கவும் திறமையுள்ளவர்களும், நடக்கையில் வைராக்கியத்தோடு இராமற் போவதற்கு இதுவே காரணம்.

எவன் இவ்வித உபதேசத்தைச்செய்கிறானோ அவனுக்கு ஆசார்யன் என்று பெயர். எவன் உபதேசத்தைப் பெறுகிறானோ அவன் சிஷ்யன். இவ்வுபதேசம்

பயன்பட ஆசிரியனுக்குப் போதிக்கத் திறமையும், சிஷ்யனுக்கு உபதேசம் பெறுவதற்குத் திறமையும் வேண்டும். விதையும் நல்லதாய் வயலும் உழுதிருந்தால் பயிர் செழித்துவளரும். ஞானோபதேசம் செய்யும் குரு வியக்கத்தக்க திறமையுள்ளவனும், அவன் சிஷ்யன் மேதாவியுமாயிருந்தால் பரிபூரண ஞானம் பலிக்கும். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் உண்மையான வேதாந்த ஞானம் பிறக்கும். மற்றவர்களெல்லாரும் கொஞ்ச கொஞ்ச குதூஹலத்தோடு அற்பஞானத்தைப்பெற்று திருப்தர்களாய் வேதாந்த சாஸ்திரத்தின் கரையிலேயே நிற்கிறார்கள். இதுவுமொருவாறு நன்மையே. சிறிது ஞானம் பெற்றவர்களுக்கு எப்பொழுதாகிலும் முழுது மறியவேண்டுமென்னும் ஆசையுண்டாகும். இவ்வாசையுண்டானவுடனே எங்கிருந்தாவது தகுந்த ஆசிரியர் தாமே வருவார்.

ஆனால் இவ்வழியில் மிக்க அபாயமுண்டு. சொற்ப காலம் தோன்றி மறையும் மகிழ்ச்சியை முதலில் நிரந்தரமானதென்றெண்ணிச் சிஷ்யனே பிறகு மாறலாம். இது நமக்கு அனுபவத்திலே தெரியும். அநேகந்தரம், வேண்டியவர்கள் நம்மை விட்டிறந்தபோது தீராத துக்கத்திலாழ்ந்து இப்பிரபஞ்சம் நம்பத்தக்கதல்லவென்னும் ஞானம் சிறிது உதித்து வைராக்கியமாயிருப்போம். கொஞ்சநாளைக்குள் இந்தப்புத்தி போய் முன் ஸ்திதியிலேயே நிற்போம். ஆதலால், ஆத்மஞானம் பெற முயன்றும் அது வராவிடில் முதலில் மனம் சுத்தமாய் அவ்வுபதேசத்தைப் பெறப் பக்குவமாயிற்றாவென்று நாம் பார்த்துக்கொள்ள வேண்

டும். சாதாரணமாய் மனம் பரிபக்குவமாகாமலே யிருக்கும்.

குருவைத் தேடுவதில் இன்னும் அதிக கஷ்ட முண்டு. அஞ்ஞானத்திலாழ்ந்திருந்தும் தமக்கு எல் லாந்தெரியுமென்னும் அகங்காரத்தினலே தாம் கெடு வதுமன்றிப் பல பெயர்கள் பிறருக்கு உபதேசம் செய்ய வும் புகுவார்கள்; குருடன் குருடனுக்கு வழிகாட்டி ஞற்போல், இருவரும் பள்ளத்தில் வீழ்வார்கள். இவ் விதப் போலியாசிரியர் உலகில் எங்குந்திரிவார். ஒவ் வொருவனும் போதிக்க விரும்புவான். பிச்சைக்குப் புகுவோன் பெருங்கொடையளிக்கக் கருதுவதுபோன் றது இப்போலியாசிரியர் உபதேசிக்கத் துணிவது.

# ஆசார்ய சிஷ்ய லக்ஷணம்

ஒருவர் ஆசிரியரென்று நாம் எப்படியறிவது? சூரியனைப் பார்க்க விளக்கு வேண்டுமோ? சூரியனுதித்தவுடனே, தானே நமக்குத் தெரிவதுபோலச் சிறந்த ஆசிரியர் நெருங்கும்பொழுது, அவர் உபதேசிக்கும் தத்துவங்கள் நம்மாத்மாவில் விளங்கும். உண்மையை நிலைநிறுத்த வேறொரு சான்றும் வேண்டுவதில்லை. அஃது இயற்கையொளியுடையது; ஒவ்வொருவருடைய அந்தக்கரணத்திலும் ஊடுருவி நிற்கும். அந்நிலையில் ஜகம் முழுதும் இதுவே சத்தியமென்று கதறும். சூரியனொளியைப்போல் விளங்கும் தத்துவமும் ஞானமுமுள்ள தேசிகர்களை ஜனங்கள் பெரும்பாலும் தெய்வமெனக் கொண்டாடுகிறார்கள். இன்னும் சிறிது தாழ்ந்தவரிடத்தும் உபதேசம் பெறலாம். எவரிடம் நாம் உபதேசம் பெற விரும்புகிறோமோ அவரது யோக்கியதையை அறிய நமக்கு அறிவு போதாததனால் மாணாக்கனுக்கு வேண்டுவனபோல ஆசிரியருக்கும் லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஞானம் பெற ஆவாவும், விடாமுயற்சியும், தூய மனமுடைமையும் மாணாக்கனுக்குரிய இலக்கணங்களில் முக்கியமானவை. அசுத்தமான ஜீவனுக்கு வைதிக சிரத்தையிராது. மனோவாக்குக்காயங்களில் தூய்மையுடையானே சாத்துவிகனாகவிருப்பான். கருதிய பொருள் கைகூடுமென்று வசனமிருப்பதால் ஞானம் பெறவேண்டுமென்னும் ஆவல் அவசியம். நாம் விரும்பாத வஸ்து நமக்குக் கிடைக்காது. வைதிகத்தில் ஊக்

கம் பிறப்பது இலகுவென்று சாதாரணமாக எண்ணு கிறோம். ஆனால் அது மெத்தக்கடினம். வைதிக கிரந்தங்களைப் படிப்பதினாலும், அவைகளைப்பற்றின உபந்யாஸங்களைக் கேட்பதினாலுமே மனத்தில் ஊக்கம் ஊன்றியிருக்குமென்று நம்பலாகாது. மனத்தில் தாமச குணத்தை நீக்கி சாத்துவிகத்தை நிலைநிறுத்த ஆஸ்தையும் போராட்டமும் வேண்டும். இப்பரிசுத்தம் ஏற்படுவதற்கு வெகு நாட்செல்லும். சிலவேளைகளில் அநேக ஜன்மங்களும் போதா. சில வேளைகளில் திடீரென்றும் வெற்றி பெறலாம். ஆனால், பொறுமையோடு யுகக்கணக்காய்க் காத்திருக்கவும் தயாராயிருக்க வேண்டும். இவ்வித ஊக்கத்தோடு முயலும் மாணாக்கனே வெற்றியையும் ஆத்மானுபவத்தையும் பெறுவான் என்பதற்கு ஐயமில்லை.

ஆசிரியனோ, மறைகளின் மெய்ப்பொருளையுணர்ந்தவனாயிருத்தல் வேண்டும். உலகத்தில் ஒவ்வொருவரும் தம் தம் மதத்திலுள்ள வேத நூல்களைப் படிக்கிறார்கள். ஆனால் இவர்கள் பெரும்பாலும் அந்நூல்களிலுள்ள இலக்கண இலக்கிய நயங்களை மட்டுமே பாராட்டுகிறார்கள். சொற்சுவை கற்பித்துக்கொண்டு அதனை விஸ்தாரப்படுத்துவதிலேயே திருப்தி பெறுகிறவர்களுக்குப் பொருட்சுவை எவ்வாறு பரிமளிக்கும்? வேதத்தின் மெய்ப்பொருளை அறிவதுதான் உண்மையான ஆசிரியரின் லக்ஷணம். "மறைகளின் சப்த ஜாலமோ அடர்ந்த மஹாரண்யம் போன்றது; அதில் சாதாரணமாய்ப் புத்தி மயங்கும்." அற்புதமாய் மொழிகளைத் தொடுப்பதும், நாநாவிதமான அணிகளிற் பேசு

வதும், வேத சாஸ்திரங்களின் தாற்பரியங்களைத் தெளிவாய் விவரிப்பதும், அவ்விஷயங்களைப்பற்றி நுட்பமாய் ஆராய்ச்சிசெய்வதும், புக்தியை (சந்தோஷத்தை)த் தருமே யல்லாது முக்தியை உண்டுபண்ணு. உலகந் தங்களை அதிபண்டிதரென்று மெச்சவேண்டுமென்கிற இச்சைகொண்டவர்களே இவ்விதவாடம்பரத்தோடு போதிக்கப் புகுவார்கள். உலகமுய்யும் பொருட்டு அவதரித்த சான்றோர்களோ இவ்வாறு பதங்களையும் எழுத்துக்களையும் ஒடித்து அர்த்தம் செய்ய வருந்துவதில்லை. தமது கொள்கைக் கொத்துவரும்படி பதங்களினர்த்தத்தையும் கருத்தையும் தெளிவிக்கச் சப்த ஜாலத்தில் பிரவேசிப்பதுமில்லை. அவர்கள் சொல்லவேண்டியதைச் சீராகச் சொல்லி முடிப்பார்கள். பிறர்களோ போதிக்கவேண்டுவது இன்னதென்றே தெரியாமல் பதங்களையும் அவைகளின் பகுதி விகுதியையும் பற்றி மாத்திரம் பயன் சிறிதுமின்றிப் பெரிய கிரந்தங்களை எழுதுவார்கள்.

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், இதைப் பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு கால், சிலர் ஒரு மாந்தோட்டத்திற் சென்று, அதிலுள்ள மரங்களின் இலைகளையும் கிளைகளையும் எண்ணுவதிலும், அவைகளின் நிறத்தையும் பரிமாணத்தையும் சோதிப்பதிலும், இவ்விஷயங்களைக்குறித்து யுக்தியாய்ப் பேசுவதிலும் ஊக்கமாயிருந்தார்கள். மற்றொருவன் இவைகளைப்பற்றி விசாரிக்காமல் அங்குள்ள கனியை அருந்தத் தொடங்கினான். இவன்தான் அவர்களைவிடப் புத்திசாலி. ஆதலால், கிளைகளையும் இலைகளையும்

எண்ணும் வேலை சாத்துவிகத்தை நாடும் நமக்கு வேண்டாம். அதற்கு இடம் வேறு. நம்முள்ளத்தில் பக்தி தழைக்க வேண்டுமானால், 'கண்ணன் அவதரித்தது மதுரையிலா? அல்லது கோகுலத்திலா? அவர் இவ்வுலகில் இன்ன இன்ன வேலையைச் செய்தார். அவர் இன்ன சகாப்தத்தில் இவ்வாண்டில் இந்தத் தினத்தில் கீதையை உபதேசித்தார்' என்னுமிவைபோன்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது அநாவசியம். அந்தக் கீதா சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் பக்தியையும் தர்மத்தையுமறிந்து செய்ய ஆவலே வேண்டும். அந்த நூலையும் அதை வெளியிட்ட ஆசார்யனையும் பற்றின மற்ற வரலாறுகள் தெரியவேண்டுவது கேவலம் புத்தக வித்வான்களுக்கே. அவர்களது ப்ரசண்ட வாதங்களுக்கு நமஸ்காரம் செய்து கனியை மட்டும் புசிக்கப் பயில்வோம்.

நாம் வரிக்கும் ஆசிரியன் மாசற்றவனாக இருக்க வேண்டும். "உபதேசிப்பவனது குணங்களையும் நடக்கையையும் பற்றி நமக்காவதென்ன? அவன் சொல்வது சரியாவென்றுபார்த்தால் போதாதா?" என்று வெகுவாய் ஆக்ஷேபிப்பார்கள். இது சரியன்று. கணிதம், சரகம் இவைபோன்ற சாமான்ய சாஸ்திரங்களைக் கற்பிக்கிறவன் எத்தன்மையனாயிருந்தாலும் இருக்கலாம். ஏனெனில் இந்நூல்களையறியக் கேவலம் புத்தி நுட்பமும் உலகப்பயிற்சியும்தான் வேண்டும். வைதிக சாஸ்திரங்களிலோ மனத்திற் களங்கமுள்ளவரையில் உண்மையான ஞானமுண்டாவது அசாத்தியம். ஸ்வயம் கல்மஷமுள்ளவன் பிறருக்கு என்ன வேதாந்தம்போதிப்

யான்? பிரஹ்ம ஞானத்தைத் தான் அடையவும் பிறர்க்கு உபதேசிக்கவும் ஒருவனுடைய மனமும் ஆத்மாவும் பரிசுத்தமாயிருந்தே தீரவேண்டும். கடவுள் காட்சியும் ஆமுஷ்மிக விஷயங்களினறிவும் பரிசுத்தமான ஜீவனிடத்தில் தான் விளையும். ஆதலால், பிரஹ்ம ஞானத்தை உபதேசிக்கும் ஆசிரியன் எத்தன்மையுள்ளவனென்று நாம் முதலிலறிந்துகொண்டு பிறகு அவன் சொல்வதை யாதரிக்கவேண்டும். முற்றிலும் பரிசுத்தனயிருந்தாலொழிய அவன் செய்யும் உபதேசம் பயன்படாது. மேலும் அவனிடத்தில் பிரஹ்ம தேஜஸும் சக்தியு மிருக்கவேண்டும். அவன் தன் சக்தியில் கொஞ்சம் சிஷ்யனுக்குக் கொடுத்து உதவிபுரிகிறான். சிஷ்யனிடத்தில் இயற்கையாகவே யுள்ள சக்தியைத் தூண்டிப் பெருக்குவதோடு, தானும் தன் தேஜஸில் ஓர் அம்சத்தைச் சிஷ்யனுட் செலுத்துவதே ஆசிரியன் செய்யும் உபகாரம். ஆதலால், ஆசிரியன் சுத்தனக இருக்கவேண்டும்.

மேலும், அவ்வாசிரியன் ஒருவிதப் பயனையும் எண்ணாது போதிக்கவேண்டும். பணத்திற்காகவோ, பெயருக்காகவோ, புகழுக்காகவோ அவன் கற்பிக்காமல் சிஷ்யனிடம் கருணையினல் மட்டும் உபதேசிக்க வேண்டும். பிரஹ்மதேஜஸென்பது விசுவாசத்தின் மூலமாகவே பரவுகின்றது. பொருள், புகழ் ஆகிய இவ்விதப் பற்றிருக்குமாயின் அவ்வன்பு வாராது. கடவுள் கருணாநிதி. அவரை அவ்வாறு அறிந்தவரே அவரையும் அவர் சொரூபத்தையும் அறிவிக்க வல்லவர். அவரையே தெய்வமாக உலகம் தொழும்.

கீழ்க்குறிக்கப்பட்ட குணங்கள் நாமடையும் ஆசிரியர்க்கு உளவாயின் நமக்கு அபாயமில்லை. இக்குணங்களில்லாதவரிடத்தில் உபதேசம் பெறுவது அபாயகரம். நன்மையைப் புகட்டாவிடினும் அவர் தீமையை விளைவிப்பார். ஆதலால், இவ்வித ஆபத்தினின்று ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ''எவன் நன்ருக வேதங்களை புணர்ந்து, களங்கமற்று, காமத்தை வென்றவனே அவனே ஈசுவரனை யறிந்தவன்.''

இதனுல் கண்டவரிடத்தும் பிரஹ்மஞானம் பெற முடியாதென்பது தெளிவாய் விளங்குகின்றது. 'அசையாக்கல்லிலும், ஓடுமருவியிலும், எல்லா வஸ்துவிலும் நன்மையை அறியலாம்' என்று மஹாகவி கூறியிருப்பது காவியத்தில் அழகான பொருளணியாய்த் தோன்றுமே யல்லாது முழுதும் அம்மொழி உண்மையாகாது. சற்றேனும் தத்துவத்தையுணராத ஒருவன் மற்ருெருவனுக்கு அதை உபதேசிக்க முடியாது. எவனுடைய இருதயகமலம் ஞானவொளியால் மலர்ச்சி யடைந்திருக்கிறதோ, அவனுக்கே கல்லும் அருவிகளும் போதனையைத் தரும். நல்ல ஆசாரியனது ஞானுபதேச ஒளியினுலேயே இருதய கமலம் மலர்வது. இவ்வித ஞானம் பிறந்த பின்னர்க் கல்லிலும், அருவியிலும், நக்ஷத்திரங்களிலும், சூரியசந்திரர்களிலும், ஈசுவர சிருஷ்டியிலுள்ள எல்லாப் பொருள்களிலும் மெய்ப் பொருள் தோன்றும். தத்துவத்தைச் சிறிதும் அறியாதவனுக்கு வெறுங்கல்லும் அருவியும்தாம் புலப்படும். கண்ணில்லாதவன் பொருட்காட்சி மண்டபத்

தில் எதைக்காண்பான்? அவனுக்குக் கண்தோன்றினால் அங்குள்ள வஸ்துக்களைக் கண்டு அவைகளாலறியக்கூடிய தத்துவத்தையும் அறிவான்.

சிஷ்யனுக்குக் கண் கொடுப்பவன் ஆசிரியன். பெற்றோனுக்கும் மக்கட்கும் எம்முறையோ அம்முறையே ஆசிரியனுக்கும் மாணக்கனுக்கும். ஆசாரியனிடத்தில் விசுவாசமும் தாழ்மையும் பக்தியுமில்லாவிடில் ஞானம் பிறவாது. இவ்வித ஆசார்ய சிஷ்ய பாவம் எங்கு பரிபூரணமாய் விளங்குகிறதோ அந்தத் தேசங்களில்தான் பெரியோர்களான லோக குருக்கள் அவதரிக்கிறார்கள். இம்முறை விளங்காத தேசங்களில் ஆசாரியன் சாமானிய உபாத்தியாயனுகவே யிருக்கிறான். ஆசாரியன், கற்பிப்பதற்காகச் சம்பளத்தில் நோக்கத்தோடும், மாணக்கன், உபாத்தியாயன் சொல்லும் வார்த்தைகளை மட்டும் கேட்கக் கருதியும், இப்படி இருவரும் படிப்பை முடித்துத் தம்தம் வழிச் செல்கிறார்கள். இவ்வித நிலையில் வைதிகம் என்பது அறியாத் தொகையாகிறது. அதைச்சொல்லவும் கேட்கவும் மனிதன் கிடையான். இத்தன்மையுள்ள ஜனங்களுக்கு மதமென்பது லௌகிகத்திலே அடங்கியிருக்கிறது. இவர்கள் வைதிகத்தில் ஆஸ்தையையும் திரவியத்தினுல் சம்பாதிக்கலாம் என்றே எண்ணுகிறார்கள். அது இவ்வாறு கிடைக்குமாயின் லகுவே!

மதமென்பது லௌகிக வைதிக ஞானங்களின் சிகரம். அதைப் பொருளினுலும் கல்வியினுலும் அடைய முடியாது. ஜகமெங்கும் சுற்றினுலும், இமயம், காகஸஸ், ஆல்ப்ஸ் முதலிய மலைகளின் உயரத்தை

அறிந்தாலும், சமுத்திரத்தின் ஆழத்தை அளந்தாலும், டிபெட் மாகாணத்தின் மூலை முடுக்குகளைச் சோதித்தாலும், கோபீ பாலைவனத்தில் திரிந்தாலும், மனமும் பக்குவமாய் ஆசிரியனும் தோன்றுவிடில் அம்மதஞானம் தெளியாது. ஈசுவராஞ்ஞையாலேயே தோன்றுகின்ற அவ்வாசிரியர் நெருங்கும்போது அவரைப் பாலன்போல் பணிந்து, குறையனைத்தையும் சங்கையின்றி விண்ணப்பஞ்செய்து, அவரது போதனையை உட்கொண்டு, அவரைக் கடவுளினவதாரமாய் நினைத்துப் பரிந்து நிற்கவேண்டும். இப்படி குருபக்தி செய்பவர்க்கு உண்மையறிவும், சாத்துவிகமும், தேஜஸும் ஈசுவரனருளால் உண்டாகின்றன.

# கடவுளின் அவதாரமும் லோகாசார்யரும்

“எங்கு கடவுள் நாமத்தை உச்சரிக்கிறார்களோ அத்தலம் பரிசுத்தமானது” என்று கூறப்பட்டிருத்தலால் கடவுளின் நாமங்களை ஜபிக்கும் பெரியோர்கள் இன்னும் மிக்க பரிசுத்தமானவர்களல்லரா? அறிவினொளியைச் செலுத்தும் இவர்களை நாம் மிக்க பக்தியோடும் விசுவாசத்தோடும் பணிய வேண்டும். இவ்வித ஆசிரியர்கள் இத்தரணியில் சிலர்தாம் சஞ்சரிக்கிறார்கள். அவர்கள் முழுதும் இன்றிப் பாழாகவில்லை. இவர்கள் இல்லாவிடின் உலகமும் நரகம் போலாகி வருத்தத்திற்கிடமாம். இவர்களே மானிடரில் உத்தமர்கள்; உத்தேசமின்றித் தயை புரிவார்கள்.

பகவான் கண்ணன், ஸ்ரீ பாகவதத்தில், ‘நான் யாவர்க்கும் குருமணி என்றறி’ என்று அருளிச் செய்தார். சாமான்ய குருக்களைக் காட்டிலும் கடவுளின் அவதாரங்கள் சிறந்த குருக்கள். ஸ்பரிச மாத்திரத்திலும், சங்கற்பமாத்திரத்திலும் இவ்வவதாரங்கள் ஞானோதயத்தை விளைவிக்கும். கடைப்பட்ட உயிர்களும் இவர்களின் அருளினால் யோகிகளாய்விடும். இவ்வவதாரங்கள்தாம் ஆசிரியர்களுக்குள் சிறந்த ஆசிரியர். அவரால் அன்றிக் கடவுளை நாம் காணமுடியாது. அவர்களைத்தாம் நாம் ஆராதிக்கவேண்டும்.

அவர்கள் மூலமாகவே கடவுளை நாம் உண்மையாக அறியக்கூடும். வேறுவிதமாய்க் காண முயன்ருல், அவரது தன்மையே யில்லாத ஏதோ வொரு பூதத்தை நினைத்துக்கொண்டு அதுவே அவரென்று நம்பி அஞ்ஞானத்தில் ஆழ்ந்துபோவோம். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோலாகும். மானிடத்தன்மை நமக்குள்ள வரையில் மனித உருவத்தில் கடவுளையும் நாம் அறியவல்லோம். மானிட இயல்பைக் கடந்து ஸாத்விகம் மேலிட்டு நாம் அவரை நேரில் தரிசிக்கும் காலமும் வரும். அக்காலம் வருமளவும் அவரை மனித அவதாரத்திலேதான் நாம் அனுபவிக்கக்கூடும். கடவுளைப்பற்றி வெகு யுக்திகளோடும் சாதுரியத்தோடும் பேசி, கடவுளே மனிதராயவதரிக்கிருரென்பது கட்டுக்கதை யென்று சொல்லலாம். அனுபவத்தை யோசித்துப் பார்த்தால் இந்த வாதம் சூனியமாய் முடியும். இவ்வித வாதம் பண்ணுவோனை, "உன் கருத்தில் கடவுள் யார்? அவர் ஸர்வசக்தர், ஸர்வவியாபி என்ருல் என்ன பொருள்?" என்று கேட்டால் விழிப்பான். அவன் இச்சொற்களின் பொருளையே அறியான். அவனுக்கும் கல்வியேயில்லாத மூடனுக்கும் வித்தியாசமில்லை. மூடன் மௌனமாய் ஒருவரையும் தொந்தரவு செய்ய மாட்டான்; இந்த வாயாடியோ வீண் குழப்பத்தை உண்டாக்குவான். மதமென்பது அனுபவத்தைப்பற்றினது. ஆனதினுல் இவ்விஷயத்தில் வீணை பேச்சுக்கும் இயற்கையனுபவத்திற்கும் அதிக தாராதரங்களைக் கற்பிக்கவேண்டும். ஆத்மாவினுள்ளே அறிவதுதான் மெய்யுணர்வு. உலக ஞானமும் பிரத்தியக்ஷ அனுபவமும் இதன் எதிரில் நிற்கமாட்டா.

ஒவ்வொருவனும் தன் தன் தன்மைக்கொத்தபடி கடவுளைத் தியானிக்கிறான். எருமைக்கடா ஈசுவரனை உபாஸிக்க விரும்புமானால் அது அவரைப் பெரிய எருமைக்கடாவாக அறியும். மீன், பெருமீனாகவே அறியும். அதுபோலவே மனிதனும் மனிதனாகத்தான் அறிய வேண்டும். இது கேவலம் யுக்திவாதமல்ல. பலவிதமான பாத்திரங்களைச் சமுத்திரத்தில் போட்டால் ஒவ்வொன்றும் அதனதனுருவத்திற்கும் அளவுக்கும் சரியான ஜலத்தை மொள்ளுவதுபோல, மனிதன், எருமைக்கடா, மச்சம் முதலிய நாநாவித ஜீவன்கள் ஈசுவரனைத் தம்தம் சக்திக்கும் தன்மைக்கும் தக்கபடி யறிகின்றன. ஆதலால், மனிதன் அவரைத் தன்னைப் போன்ற மனிதராகக் காண்கிறான். மற்றப்பிராணிகளும், கடவுளுண்டென்னும் அறிவு அவைகளுக்குத் தோன்றுமாயின், தங்கள் தங்கள் புத்திக்குத் தகுந்தபடிதான் அறியும்.

மானிட உருவத்திற் கடவுளைப் பணியாதவர்கள் இருவகுப்பினர் உண்டு; மதமேயில்லாத மூர்க்கரும், மனிதத்தன்மை முற்றுமொழித்துப் பரமஸாத்வீகம் பெற்ற பரமஹம்ஸரும்; இரண்டாமவருக்குப் பிரபஞ்சமனைத்தும் தம்ஜீவன்போல் தோற்றும். மதியீனனா மூர்க்கனும் ஞானியாகிய பரமஹம்ஸனும் கடவுளைத் தொழுவதில்லை. மூர்க்கன் அஞ்ஞானத்தினால் தொழான். ஜீவன்முக்தன், தனக்குள்ளேயே கடவுளை யறிந்தவனாதலால் வெளியிற் கடவுளைத் தேடுவதில்லை. இவ்விரண்டு இனத்தார்களுக்கும் மத்தியிலேயுள்ள சாதாரணர்கள் அவதாரங்களைப் பூசிக்க மாட்டோம்

என்று சொல்வாராகில், பாவம்! அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள், யோசனையின்றிப் பேசுகிறார்கள் என்று நினைக்கவேண்டும்.

மனிதருக்குள்ள குறைகளைத் தெரிந்த கடவுள் தம்மை இவர்கள் எளிதில் அறியட்டுமென்று மிக்க கருணையோடு மனுஷ்யாவதாரம் செய்கிறார். 'தருமந் தாழ்ந்து அதர்மம் மேலிட்டால் நான் அவதரிக்கிறேன்', 'அதர்மத்தை யொழித்துத் தருமத்தை நிலைநாட்டிச் சாதுக்களை ரக்ஷிக்க நான் ஒவ்வொரு யுகத்திலும் இப் பூமியில் அவதரிக்கிறேன்', 'மானிடவுருவம் தரித்த என்னை, மதியீனர்கள், உண்மையை அறியாமல் அவமதிக்கிறார்கள்' என்று கீதையில் பகவான் அவதாரத்தைப்பற்றிக் கூறினார். "பெருவெள்ளம் வரும்போது சிறிய ஓடைகளும், பள்ளங்களும் ஒருவித வருத்தமுமின்றி நிறைகின்றன. அதுபோல, பகவானுடைய அவதாரம் உலகில் தோன்றும்பொழுது ஒவ்வொரு பிராணியும் இயல்பாகவே சாத்துவிகத்தை அடைகிறது" என்று பகவான் ராமகிருஷ்ணர் அருளியமொழியை இங்கு நாம் நினைக்கவேண்டும்.

# மந்திரம் :

# பிரணவமும், சப்தமும், ஞானமும்

ஈசுவரனுடைய அவதாரங்களான மஹாபுருஷர் களைப்பற்றிக் கீழ் அதிகாரத்திற் சொன்னேம். இப் பொழுது சாமானிய ஜீவனுகப் பிறந்து சித்தியடைந்த குருக்களைப்பற்றி விசாரிப்போம். தியானத்தில் உச் சரிக்கவேண்டிய மந்திரங்களை உபதேசித்து அவை களின் மூலமாக இவர்கள் பிரஹ்மஞானத்தைச் சிஷ்ய னுக்குப் புகட்டுகிருர்கள். இம்மந்திரங்களாவன என்ன? பிரபஞ்சம் யாவும், நாமம், உருவம் ஆகிய இருவிதத் தோற்றமுள்ளவையென்று நம் சமயநூல்களில் சொல் லப்பட்டிருக்கின்றன. நாமரூபமின்றி எவ்வித அறி வும் எந்த அற்ப ஜீவனுடைய சித்தத்திலும் தோன் ருது. ஜகத் சிருஷ்டி முழுதும் இவ்வண்ணமே உள்ள தென்பது உறுதியாயின், நாமரூபத்தை முன்னிட்டே வையகத்தையும் படைத்திருக்கவேண்டும். 'ஒரு பிடி மண்ணின் தன்மையை அறிந்தால் மண்மயமான வஸ்துத் திரளனைத்தையு மறிவது' போல ஜீவகோடியி னுள் ஓர் அணுவின் சொரூபத்தை யறிந்தால் எல்லாப் பிரபஞ்சத்தினுடைய தன்மையையும் அறிந்ததாகும். உருவமென்பது வெளியில் தோன்றும் ஆவரணம். நாமமென்பது அப்பொருளினது தன்மையைத்தெளி விக்கும் ஸாராம்சம். ஜீவாத்மாவின்கண் சரீரம்தான்

வெளியிற்புலப்படும் உருவம். மனம் (அந்தக்கரணம்) அந்த ஜீவனுடைய இயற்கையைக் காட்டும் நாமம். பேசுந்திறமையுள்ள ஜீவன்களில் இவ்வந்தக் கரணத்தைப்பற்றியே சப்தங்கள் உண்டாகின்றன. அதாவது ஜீவனிடம், மஹத் என்னும் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் முதலில் ஒலிகளாகவும் பிறகு மொழி அல்லது வியாபாரமாகவும் வெளியார்க்குப் புலப்படுகின்றன.

அப்படியே பிரகிருதியிலும், ஜகத்திற்கு மஹத் ஸ்தானபூதரான ஹிரண்யகர்ப்பர் என்று விவகரிக்கப்படும் ப்ரம்மா முதலில் நாமமாக மாறிப் பிறகு பிரபஞ்சமாகத் தோன்றுகிறார். புறத்தே புலப்படும் சேதன கோடிகள் யாவும் இவ்வுருவ ஸ்தானம். இவைகளுக்கப்பால் அவ்யக்தமான பிரக்ருதி யென்னும் ஸ்போட மிருக்கிறது. இந்த அனாதியான ஸ்போடமென்பதுவே சகல ஞானத்திற்கும் நாமத்திற்கும் உபாதான காரணம். கடவுள்தாம் இந்தஸ்போட வுருவமாக மாறிப் பின்பு பிரபஞ்சமாகத் தோன்றுகிறார். ஸ்போடமென்னும் இப்பொருளை உணர்த்துவது பிரணவமென்னும் ஓங்காரம் ஒன்றே. சொல்லும் பொருளும் எப்பொழுதும் பிரியாதிருக்குமாதலால் இந்த அனாதியான ஸ்போடத்தையும் அதனை யுணர்த்தும் ஓங்காரத்தையும் பகுக்கமுடியாது. ஆனது பற்றி, பரமபாவனமாயும் எல்லாப்பெயர்களுக்கும் உருவங்களுக்கும் அன்னைபோன்ற உருவமுள்ளதாயு மிருக்கிற இந்த ஓங்கார மந்திரத்தினின்றே வையகம் பிறந்ததென்றும் எண்ணத்தகும். சொல்லும் பொரு

ளும் ஒன்றினென்று பிரிக்கக்கூடாதது தாயினும், ஒரே கருத்தைக் கொடுக்கும் அநேக சொற்கள் உளவாதலால் இந்த "ஓம்" என்கிற பதமொன்றே ஜகத்தின் உற்பத்திக்குக் காரணமான கடவுளின் சங்கற்பத்தைக் காட்டுகிறதென்று சொல்வது சரியல்லவென்று இங்கு ஆக்ஷேபிக்கலாம். இவ்வாக்ஷேபனைக்குப் பதில் என்னவெனில், இந்த ஓம் என்னும் ஒரு பதமே சகல கருத்தையும் சொல்லும். இதற்குச் சரியாக வேறு பதம் கிடையாது. ஸ்போடமென்பது சகல கருத்திற்கும் செய்யப்படுபொருளே யல்லாது வ்யக்தமாய் அறியக் கூடிய பொருளன்று. அதாவது ஒரு கருத்தினின்றும் மற்றொன்றைப் பகுத்துக்காட்டும் விசேஷ குணங்களை நீக்கினால், மிஞ்சியது ஸ்போட மென்பது. உரைக்க வொண்ணாத இந்த ஸ்போடத்தை இன்னதென்று சொல்லவரும் ஒவ்வொரு பதமும் ஏதோவொரு விசேஷ குணத்தோடே அதைக் குறிக்கு மாதலால், அதைக் கூடியவரையில் நிர்விசேஷமாய்க் காட்டி அதன் தன்மையையும் ஏறக்குறையச் சரியாகச் சொல்வது இந்த ஓங்காரமொன்றுதான். அகரம், உகரம், மகரம் ஆகிய இம்மூன்று எழுத்துக்களையும் சேர்த்து உச்சரித்தால் "ஓம்" என்கிற பதம் அமைகிறது. இம்மூன்று சப்தங்களிலே எல்லாச் சப்தங்களு மடங்கும். அகரமென்னும் சப்தம் எல்லாவற்றிலும் குறைந்த விசேஷணமுள்ளது. ஆதலால்தான், கண்ணன் கீதையில், 'எழுத்துக்களுள் அகரம் நான்' என்றார். மேலும் எழுத்துள்ள ஒலிகள் யாவும் நாவினடிமுதல் உதடுகளின் நுனிவரையிலுள்ள பிரதேசத்தினின்று உண்டாகின்றன. அகரம் தொண்

டையில் உண்டாகிறது. மகரம் உதடு பற்றுவதால் தோன்றுகிறது. உகரமென்பதை நாவினடியினின்று உதடுகளின் நுனிவரையில் சுவாசத்தை ஓட்டுவதனுல் உச்சரிக்கிறேம். ஆகையால், சகல எழுத்துக்களும் பிறக்கும் தலங்களனைத்தையும் தொட்டே இந்த ஓங்காரத்தை உச்சரிக்கவேண்டும். ஆனதால் தான், இது ஸ்போடத்தைக் காட்ட உரித்தான மந்திரம். ஸ்போடத்தினுல் எப்பொருளை உணர்கிறேமோ, அப்பொருளே ஓங்காரத்திற்கும்; பதமும் பொருளும் பிரியாததுபற்றி ஸ்போடமும் பிரணவமும் ஒன்றேயாம். ஸ்போடத்தைத்தான் நாத பிரஹ்ம மென்பார்கள். இது பிரத்தியக்ஷமாய்த் தோன்றும் பிரபஞ்சத்தின் உட்கருவி யானதாலும், கடவுளின் முதலுருவமானதாலும், பிரணவமே கடவுளின் தன்மையைக் காட்டும் சொல். அகண்ட சச்சிதானந்தமாயும், சின்மாத்திர ஸ்வரூபமாயு முள்ள பிரஹ்மத்தை எப்படி ஜீவராசிகள் தம்தம் விசேஷகுணங்களுக்கு ஒத்தபடி ஸகுண ரூபியாய் அறிகின்றனவோ, அவ்வண்ணமே கடவுளின் சரீரமாகிய இப்பிரபஞ்சத்தையும் அநேகவிதமாக அறிகின்றன. ஒவ்வொரு ஜீவனுக்கும் தன் தன்னிலுள்ள தத்துவங்களுக்கு அனுகுணமாய், கடவுளும் பிரபஞ்சமும் தோன்றும். ஆதலால் ஒரே கடவுள் பல ஜீவன்களால் பலவிதமான குணங்களை யுடையவராய்க் காணப்படுகிறர். ஒரு ஜீவன் அபிப்பிராயப்படி கடவுளுக்குள்ள குணங்களும், இன்னெருவன் தியானிக்கும் கடவுளின் குணங்களும் ஒன்றுக்கொன்று விரோதிக்கும். அதுபோல ஒரு பிரபஞ்சமே பலவிதமாய்ப் புலப்படும்.

அகண்டமான பிரஹ்மத்தைச் சொல்லும் பிரணவம் போல, கண்டமாய் உலகில் காணும் ஈசுவரனது உருவங்களைச் சொல்லும் மந்திரங்களுண்டு. ஞானதிருஷ்டியால் மஹரிஷிகள் கண்டெடுத்த இந்த மந்திரங்கள் கடவுளது தன்மையையும் பிரபஞ்சத்தின் சொரூபத்தையும் தெரிவிக்கின்றன. இம்மந்திரங்களை உச்சரித்து அவைகள் கூறும் கடவுளைத் தியானிப்பதால், அக்கடவுளின் தத்துவம் தோன்றும்.

———

# பிரதீகோபாசனையும், பிம்பாராதனமும்

பிரதீகத்தின் மூலமாய் பகவானை உபாஸிப்ப தென்றால் பிரஹ்மமில்லாத வஸ்துவினிடத்தில் பிரஹ்மமென்னும் புத்தியைச் செலுத்திப் பக்திசெய்வது. "'மனத்தைப் பிரஹ்மமாகப் பூஜைசெய்.' இது நம் முள்ளறிவது. 'ஆகாசம் பிரஹ்மம்.' இது வெளியில் தெரிவது. மனம் உள்ளே தோன்றும் பிரதீகம். ஆகாசம் வெளியில் புலப்படும் பிரதீகம். இவ்விரண்டையும் பிரஹ்மத்தின் பிரதிநிதியாக்கிப் பூஜிக்கலாம்" என்று ராமாநுஜர் சொல்லுகிறார். இவ்வாறே சங்கரரும், "'சூரியன் பிரஹ்மம், இது அதிகாரம்', 'எவன் நாமத்தை பிரஹ்மமென்று உபாஸிக்கிறானோ' என்னுமிது முதலான வாக்கியங்களினால் பிரதீகங்களை உபாஸிக்கலாமாவென்கிற சந்தேகம் தோன்றுகிறது" என்று சொல்லியிருக்கிறார். பிரதீகம் என்கிற பதத்திற்கு அருகில்செல்வது என்று பொருள். பிரதீகத்தை உபாஸிப்பதென்றால் பிரஹ்மத்தினின்றும் வேறானதும், ஒன்று அல்லது அதிக அம்சங்களில் பிரஹ்மத்தைப் போன்றதுமான பொருளைப் பூசிப்பது. சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் பிரதீகத்தைத் தவிர, வேறு சில புராணங்களிலும் தந்திரங்களிலும் காணப்படுகின்றன. ஆதலால், இப்பிரதீகோபாசனையில், பிதிரு யஜ்ஞம், தேவயஜ்ஞம் முதலியவைகளையும் சேர்க்கலாம்.

ஈசுவரனொருவனை உபாஸிப்பதே பக்தி. தேவர்கள், பிதிருக்கள் முதலிய வேறு எவர்களைத் தொழுவதும் பக்தியாகாது. தேவதைகளைக் குறித்துச் செய்யும் பூஜையெல்லாம் கருமங்களுள் அடங்கினவை. தேவர்களை யுபாஸிப்பதனுல் சுவர்க்கசுகம் முதலான சிற்றின்பம் கிடைக்குமே யல்லாது, ஈசுவரனிடத்தில் பக்தியோ, சம்சார பந்தங்களினின்றும் முக்தியோ வாராது. ஆதலால், பரமாத்மாவினிடத்தில் பக்தி தோன்றும் பொருட்டுப் பிரதீகோபாசனை செய்யப் புகுகையில் இந்தப் பிரதீகமே சகல சராசரங்களையும் நடத்தும் அந்தர்யாமியான பிரஹ்மமென்று மயங்குகிறவன் மோசம் போவான். பிரஹ்மத்தை அறியும் பொருட்டுப் பிரதீகத்தைப் பிரதிநிதியாக வைத்துப் பக்தி செய்பவனுக்கு உண்மையான பயன் ஸித்திக்கும். தேவதையையோ, இன்னும் வேறு பொருளையோ அதற்கியல்பான குணங்களைச் சிந்தித்து அதையே தெய்வமாகப் பூசிப்பது காம்ய கருமம். இந்த வித்தை ஏதோ ஒரு சிற்றின்பத்தைத் தரும். இந்த தேவதையையே பரமாத்மாவான பிரஹ்மமாகத் தியானித்தால் அது பிரஹ்மத்தை நேரில் தியானிப்பதற்குச் சமானமாம். இக்கருத்துடன் தான், சுருதிகளிலும், ஸ்மிருதிகளிலும், ஓர் அற்பதேவதையையோ, ரிஷியையோ கடவுளுக்குச் சமானமாகக் கொண்டாடித் தோத்திரம் செய்திருக்கிறுர்கள். நாமரூபம் ஒழிந்தால் எல்லாப் பொருளும் பிரஹ்மமல்லவா என்று அத்வைதியும், ஈசுவரன் எல்லாப் பொருளினுள்ளும் அந்தர்யாமியாய் விளங்கவில்லையா என்று விசிஷ்டாத்வைதியும்

இக்கருத்தைத் விவரிப்பார்கள். "ஆதித்தியர்கள் முதலான தேவர்களைத் தொழுவதினால் விளையும் பயனையும் கடவுள்தான் அளிக்கிறார். அவர் எல்லார்க்கும் அத்யக்ஷர். இவ்வண்ணமே பிரஹ்மம் பூஜைக்கிலக்காகிறது. பிரதிமைகளில் விஷ்ணுமுதலான தெய்வங்களை ஏற்றிடுவதுபோல், பிரதீகத்தில் பிரஹ்மத்தை ஆரோபிக்கிறோம்" என்று சங்கராசாரியர் சொல்லுகிறார்.

பிரதீகத்தைப்பற்றின வசனங்கள் யாவும் பிரதிமைக்கும் ஒக்கும். அதாவது பிரதிமையை அந்தந்தத் தேவதையாகமட்டும் தியானித்தால் அதுபக்தியாகாது; அதனால் மோக்ஷம் கிடைக்காது. அந்தப் பிரதிமையையே கடவுளாகத் தியானித்தால் பக்தியும் முக்தியும் விளையும். உலகில் வழங்கும் முக்கியமான மதங்களில் வேதாந்தி, புத்தன், கிறிஸ்துவன் ஆகிய இவர்களின் கொள்கையில் பிரதிமோபாசனை சாதாரணமாய்வழங்குகின்றது. மஹம்மதியர்களும், கிறிஸ்தவர்களுள் ப்ராடெஸ்டண்டு என்னும் ஒரு வகுப்பினரும்மட்டும் பிரதிமோபாசனையை அங்கீகரிப்பதில்லை. இவ்விருவரில், மஹம்மதியர்கள் தமது மதாபிமானிகளான முனிவர்களுடைய கல்லறைகளைத் தொழுவார்கள். ப்ராடெஸ்டண்டுகளோ விக்கிரகாராதனத்தை அடியோடு ஒழித்துத் தெய்வம் உண்டென்கிற நம்பிக்கையையும் நழுவவிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் ஆஸ்திகத்தினின்றும் விலகுகிறார்கள். தற்காலம் இவர்களுக்கும், நீதிநெறியைப் போதிக்க வரும் அகஸ்ட் காம்ப்டியினது சிஷ்யர்களான லோகாயதர்களுக்கும் வித்தியாசமில்லை. அன்றி

யும், கிறிஸ்துவ மதத்திலும் மஹம்மதிய் மதத்திலும் விக்கிரகாராதனங்கள் வழங்கியே வருகின்றன. ஆனால் இவைகள் ஈசுவர திருஷ்டி சௌகரியத்திற்காக வில்லாமல் அந்தப்பிம்பங்களே கடவுளென்று பாவித்துச் செய்யும் பூசைகள். இப்பூசைகள் கேவலம் கருமங்களாதலால் ஈசுவர பக்தியையும் முக்தியையும் தரமாட்டா. ஈசுவரனுடைய ஸ்வரூபத்தை நாடாது பிறவுருவங்களில் பக்திபண்ணி, விக்கிரகங்கள், ஆலயங்கள், சமாதிகள் முதலியவைகளைப் பணிவதுதான் கேவல விக்கிராராதனம். ஆயினும் இப்பூசையால் கெடுதியொன்றும் வாராது. இஃது ஒருகருமம்; தனக்கேற்ற பயனைத் தரும்.

---

# இஷ்ட நிஷ்டை

பக்திமார்க்கத்தை அவலம்பிக்கிறவன் கடவுளைப் பற்றிப் பல அபிப்பிராயங்களுள்ளனபோல அவரை அடையவும் பல வழிகள் உண்டென்று நன்கு யறிய வேண்டும். பலவாறகப் பரவியிருக்கும் மதங்களில் பல வாறகக் கூறப்பட்டனயாவும் உலகில் வேறுவேறாக விளையாடும் ஒரே கடவுளினது மஹிமையென்று அவ னறியவேண்டும். "உன்னைப் பல பெயரிட்டு அழைக் கிறார்கள். ஒவ்வொன்றினும் உனது சர்வசக்தி பிரகா சிக்கின்றது. இப்பெயர்களில் எதைக்குறித்துத்தொழு தாலும் அதன் மூலமாய் பக்தனை நீ அடைகிறாய். உனது நாமத்தை நினைக்கக் காலநியமமுமில்லை. இவ் வளவு கருணை உனக்கு இருக்கையிலும், உன்னிடத் தில் பக்தி தோன்றாதது எனது துரதிர்ஷ்டமே ஐய!" என்று சைதன்யர் புலம்புவார். இதுவுமல்லாது, அநேக மதங்களைப் பிரவிர்த்திக்கச் செய்திருக்கும் பெரியோர் களைப் பக்தன் இகழவாவது, பகைக்கவாவது கூடாது. அவர்களைப் பழிக்க உடன்படவும் கூடாது. கடவுள் பால் வரம்பற்ற அன்போடும், அன்னியர்களிடத்தில் மிக்க கருணையோடும், அவர்களைப் புகழு மியல்போடுங் கூடின மஹான்கள் இவ்வுலகில் அருமை. பெரும் பாலும் பிறர் மதத்திலுள்ள சாரத்தைப் புகழுந் தன் மையுள்ளவர்களுக்குத் தம்முடைய மதத்தில் பற்றுக் குறைந்து, மதமென்பது வெறும் சந்தேகமாக நின்று சீரழியும். இதய வைசால்ய மில்லாது தமதுமதத்தில் மட்டும் அளவற்ற பற்றுள்ளவர்களுக்கும் பிறர் மதங்

களைப் பழிக்கப் பழிக்கத் தமது மதத்தில் ஆக்கிரகம் ஊன்றுவதையும் கண்டிருக்கிறோம். தம்து மதத்தில் பற்று அதிகமா யிருப்பது போலப் பிறமதத்தவ ரிடத்திலும் நட்புகொள்ளும் பெரியோர்கள் உலகில் அநேகர் இருப்பாராக. ஆனால் இது அபூர்வம். இஷ்டநிஷ்டை, அதாவது தமக்கு உவந்த தெய்வத்தை ஆராதிப்பது என்னும் மார்க்கத்தை அனுசரிப்பா ராகில், ஒவ்வொருவருக்கும் தமது தெய்வத்தினிடம் பக்திகுன்றுது, பிறதெய்வங்களிடத்தில் நட்பும் சகஜ மாய் விளையும். ஒவ்வொரு மதத்திலும் ஏதோ ஒரு வழிதான் காட்டப்படுகின்றது. இவ்வேதாந்த மதமோ கடவுளை அடையப் பல மார்க்கங்களையும், பலவா றுய் விளக்கும் அவரது உருவங்களையும் வெளியிடு கிறது. கடவுளின் அம்சங்களான மஹறிஷிகள், உலகி னில் தாம் தாம் அடைந்த அனுபவங்களையும் சென்ற வழிகளையும் கூறி, ஒவ்வொரு ஜீவனும் மாயை வலையி னின்றும் விலகிச் சத்திய பூரணனும் ஆனந்தக் கடவு மான பரமாத்மாவினது பதத்தைச் சேர்ந்து சர்வசுதந் தரனுய் நித்தியானந்தத்துடன் வாழ்ந்து உய்ய உதவி புரிகிருர்கள்.

ஆனதால், பக்தியோகத்தை அனுஷ்டிப்பவன் பிறர் மார்க்கங்களைப் பகைக்கவும் மறுக்கவும் கூடாது. ஆயி னும் சிறிய செடியானது மரமாகும் வரையில் அதை வேலிபோட்டுக் காக்கவேண்டுவதுபோல, வைதிகபக்தி முதிரும் முன்னர் பல அபிப்பிராயங்களை உட்கொண்டு அதை அழிக்கக் கூடாது. மதத்திலும் உதார முள் ளவர்களென்று டம்பமடித்துப் பெரும்பாலார், வீண்

குதூகலத்தைத் தீர்க்கும்பொருட்டு, பல மதங்களை ஆதரிப்பார்கள். இவர்களுக்குப் புது விஷயங்களைக் கேட்பது கட்குடிபோல் ஒரு நோயாய்ப் பற்றிக்கொள் ளும். சிறிதுபொழுது வேடிக்கையாய் விளையாடும் பொருட்டுப் புது விஷயங்களை இவர்கள் கேட்கவிரும்பு வார்கள். ஒன்றைக் கேட்டானவுடன் மற்றொன்றில் தாவுவார்கள். அபினியுண்பவன்போல், ஒன்றைமாற்றி ஒன்றைப்படித்து மயங்குவார்கள். "சிப்பிப் புழுப் போல, ஸாரத்தை மட்டும் எடுக்கும் தன்மையுள்ள வேறு சிலருண்டு" என்று பகவான் ராமகிருஷ்ணபரம ஹம்ஸர் விளம்புவார். இப்புழுவானது கடலின் அடியி னின்று நீர்மேல்வந்து, சுவாதீ நக்ஷத்திரத்தில் ஆகாயத் தினின்றுவிழும் மழைத்துளிகளைச் சிப்பியில்வாங்கிஉட னே கடலடியிலுள்ள தன்னிருப்பிடம் சென்று, அம் மழைத்துளியை முத்தாக்கும்வரையில் அங்கேதங்கும்.

இதனால் இஷ்டநிஷ்டைப் போதிக்கப்பட்டது. ஆரம்பத்தில், 'ஏக நிஷ்டை' அதாவது ஒரே தெய்வத்தி னிடத்தில் அசஞ்சலமான விசுவாசம் அவசியம் வேண் டும். "ஜானகீ நாதனை ராகவனுக்கும், லக்ஷ்மீகாந்த னை பரமாத்மாவுக்கும் தன்மையில் பேதமில்லை யென்று எனக்குத்தெரியும். ஆயினும் செந்தாமரைக் கண்ணரான ராமர் ஒருவரே எனக்கு எல்லாப்பொரு ளும் ஆகிறார்" என்று அனுமானைப்போல உறுதியாய் நிற்கவேண்டும். அல்லது, "எல்லாவற்றிலும் ஸாரத் தையுட்கொள்; எல்லாரோடும்இரு; எல்லாநாமத்தையும் சொல்; எல்லாருக்கும் சரிசரி என்று சொல். உன்னு டைய கொள்கையை மாத்திரம் உறுதியாய் பிடித்துக்

கொள்" என்று துளசிதாஸர் கூறியவண்ணம் நடக்க வேண்டும். பிறகு இவ்விதையே ஆலமரத்தைப்போல் பெருமரமாய் நிரம்ப, எல்லாக் கொள்கையையும் ஆமோதிக்கும் நிலையை அடையலாம். இவ்வண்ணம் உண்மையான பக்தியைச் செய்பவன், தனது இஷ்ட தேவதையையே உலகில் பலர் பலவாறாகப் பணிகிறார்களென்று நினைப்பான்.

# வகையும், கருவியும்

பக்தியோகம் பலிக்க வகையையும் கருவியையும் பற்றி பகவத் ராமாநுஜர் வேதாந்த சூத்திரபாஷ்யத்தில் "விவேகம், காமக்குரோதாதி அரிஷட் வர்க்கங்களை வெல்வது, பயிற்சி, யாகாதிகருமங்கள், தூய்மையுடைமை, சக்தி, அதிக களிப்படையாமை ஆகிய இக்குணங்களால் பிரஹ்மத்தை யடையலாம்" என்கிறார். அவரது கருத்தில் விவேகமென்பது அசுத்தமான உணவினின்றும் சுத்தமான உணவைப் பகுத்தறியும் அறிவையும் குறிக்கும். உணவு அசுத்தமாவதற்கு மூன்று காரணங்கள் உண்டு :—

(1) இயல்பினாலேயே, அதாவது உள்ளிப் பூண்டு போன்றது.

(2) கெட்டவர்களி னிடமிருந்து வருவதனால்.

(3) அழுக்கு, மயிர், முதலிய அசுத்த பதார்த்தங்களின் சேர்க்கையால்.

"சுத்தமான உணவினால் சத்துவசுத்தி பிறக்கும். சத்துவ சுத்தியினால் ஞாபகசக்தி பலமாயிருக்கும்" என்கிற சாந்தோக்கிய உபநிஷத்தின் வசனத்தையும் இங்கு உதாகரிக்கிறார்.

பக்தியோகிகள் ஆஹார நியமத்தை வெகு முக்கியமாய்ப் பாராட்டியிருக்கிறார்கள். சிலர் இதையே பெரிதாகக் கொண்டாடி இத்துடன் நின்றாராகிலும் இதில் தத்துவமுண்டு. ஸத்வம் ரஜஸ், தமஸ் என்னும் இம்மூன்று குணங்களும் சமாசமாய்ப் பொருந்தி

யுண்டாகும் பொருள் பிரகிருதியென்றும், இவைகள் சிதறியிருக்கும் நிலையில் நிற்பது இப்பிரகிருதிக்குச் செயப்படுபொருள் என்றும் சாங்கியர்கள் கூறினார்கள். ஆதலால், ஸத்வம், ரஜஸ், தமஸ் இம்மூன்றும் கூடித் தான் ஒவ்வொரு சரீரமும் உண்டாகிறது. ஸத்வம் தலைமைப்பட்டிருக்கின் ஆஸ்திக புத்தியும் வைதிகத்தில் ஊக்கமும் அதிகரிக்கும். சரீரத்தைப் போஷிக்க நாம் உண்ணும் உணவுக்குத் தக்கபடி புத்திக்கு வளர்ச்சியோ குறைவோ பிறக்கிறது. ஆதலால், நாம் புசிக்கும் போஜனத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஆயினும் மற்றவைகளில்போல இவ்விஷயத்திலும் மத்தியில் வந்த சிஷ்யர்கள் ஆசார்யனுடைய கருத்தை யறியாது தவறுகிறார்கள்.

பார்க்குமிடத்து ஆஹாரநியமம் அவ்வளவு முக்கியமன்று. கீழ்க்குறித்த சாந்தோக்கிய வசனத்தையே சங்கரர் வேறுவிதமாய் விவரிக்கிறார். சாதாரணமாய் உணவு என்று பொருள் கொடுக்கும் "ஆஹாரம்" என்னும் பதத்திற்கு இவர் வேறுபொருள் கூறுகிறார். அதாவது :

"ஆஹாரமாவது உட்கொள்ளும் வஸ்து. இந்திரியங்களினால் மனத்தில் வாங்கும் அறிவை ஆத்மா அனுபவிக்கிறான். இப்படி இந்திரியங்களின் மூலமாய் வரும் அறிவைச் சுத்தப்படுத்துவதுதான் ஆஹார சுத்தி. ஆதலால், ஆஹாரசுத்தி யென்றால் ராகம், துவேஷம், மயக்கம் முதலியவைகளை ஒழித்து அறிவைப்பெறுவது என்று பொருள். இவ்வாறு ஆஹாரம்

சுத்தமானால் அறிவுயாவும் தங்கும் அந்தக்காரணத்தில் ஸத்வகுணம் சுத்திபெற்றுச் சாஸ்திரப் பயிற்சியினால் பெற்ற பிரஹ்மஞானம் புத்தியினின்று நழுவாது இடைவிடாத தியானத்தை விளைவிக்கும்.''

ஆஹாரபதத்திற்கு, சங்கரரும் ராமாநுஜரும் கொடுத்த பொருள்கள் விரோதிக்கும்போலக் காணப்பட்டாலும், இவ்விரண்டும் சரியான பொருள்களே; அவசியமானவைகளுமாம். ஸூக்ஷ்மசரீரத்தை சுவாதீனப் படுத்துவது, ஸ்தூலசரீரத்தை சுவாதீனப் படுத்துவதைக் காட்டிலும் உயர்ந்த காரியமே. ஆயினும் ஸ்தூலசரீரம் ஸ்வாதீனமாகாமல் ஸூக்ஷ்மசரீரம் சுவாதீனப்படாது. ஆதலால், ஆரம்பத்தில் உணவில் நியமங் கொள்ளுதல் அவசியம். ஆனால், மெய்ப்பொருளை அறியாமலும், சத்துவசுத்தி பெறவேண்டுமென்னும் எண்ணத்தையே துறந்தும், தமது மதத்திலடங்கிய கம்பீரமான தத்துவத்தைக் கொஞ்சமேனும் அறிய வகையுமின்றி மடைப்பள்ளியோடு வைதிகத்தை யொழிப்பவர்கள் கேவலம் அறுசுவைப் பிரஹ்மவாதிகள். இந்நடை ஞானமுமன்று, பக்தியுமன்று, கருமமுமன்று. இஃது ஒரு விதமான சித்தப்பிரமம். இதைப்பற்றினவர்கள் பிரஹ்ம லோகத்தை விடப் பித்த வைத்தியசாலையைச் சடுதியில் அடைவார்கள். ஆதலால், உண்ணும் உணவைப் பொறுக்குவதில் விவேகம் கொண்டால், அதன்மூலமாய்ப் புத்தியும், மனமும் சுத்தியடையும்; இந்த விவேகமின்றி இவைகளைப் பக்குவப்படுத்துவது மிக அரிது என்றும் பலிக்கிறது.

புலன்களை அடக்குவது நாமடைய வேண்டிய சக்திகளில் இரண்டாவது. இந்திரியங்களை விஷயங்களில் புகாமல் நிறுத்தி நம் எண்ணப்படி அவைகளை நடத்துவது வைதிக ஞானத்திற்கு அவசியமாய் வேண்டிய குணம்.

பிறகு நியமமும் வைராக்கியமும் வேண்டும். இக்குணங்களைத் தேடாமலும், புலன்களை அடக்குவது முதலான கஷ்டங்களைப் படாமலும் ஆத்மானுபவம் வாராது. மனம் எப்பொழுதும் பகவானையே நினைத்துக் கொண்டிருக்கவேண்டும். இப்படி மனத்தைச் செலுத்துவது முதலில் பிரயாசமாகவே யிருக்கும். அப்பியாசம் செய்யச்செய்யச் சக்தி மேலிடும். "ஓ குந்திபுத்திரனே! அப்பியாசத்தினலும் வைராக்கியத்தினலும் மனத்தை அடக்கலாம்" என்று பகவான் கீதையில் கூறுகிறர்.

பரமபக்தியைப் பெறுவதற்கு முக்கிய சாதனங்களான இந்தக் குணங்களை பக்தன் நன்கு பெருக்க வேண்டும். அவன் இகத்திலோ பரத்திலோ சுகானுபவத்தை மட்டும் தரவல்ல காமியகருமங்களைச் செய்யக்கூடாது. அவைகள் பந்தத்தை யுண்டாக்கிப் பரமாத்மாவை அடையத் தடைசெய்யும். நித்திய கருமங்களான பஞ்சமஹா யஜ்ஞங்களைத் தவிர யாக முதலிய மற்ற நைமித்திய கருமங்களை இவன் செய்ய வேண்டியதில்லை.

பக்தியென்னும் கட்டிடத்திற்குப் பரிசுத்திதான் அஸ்திவாரம். தேகத்தைச் சுத்தமாய் வைப்பதும், பரிசுத்தமான ஆஹாரத்தையுண்பதும் விசேஷமான

வேலைகளாயினும், உள்ளத்தில் தூய்மை விளையாவிடில் இவைகட்கு மதிப்பொன்றுமில்லை. சுத்திபுண்டாவதற்கு குணங்களை ராமாநுஜர் கணக்கிட்டிருக்கிறார். அவற்றுள் முக்கியமானவை சத்தியம் (மெய்ம்மொழிதல்); ஆர்ஜவம் (உள்ளும் புறமு மொத்திருத்தல்); தயை (பயனைக் கருதாது பிறர்க்குதவி செய்தல்); அஹிம்ஸை (மனத்தினாலும் வாக்கினாலும் செயலினாலும் பிறர்க்குத் துன்பம் செய்யாமை); அபித்யை (பிறர் பொருளை விரும்பாமை, வீண்எண்ணம் கொள்ளாமை, பிறர் செய்த தீங்கை நினையாமை). இவைகளுள் அஹிம்ஸை என்பது மிகவும் முக்கியமானது. பக்தன் எந்தப் பிராணிக்கும் தீங்கு நினைக்கக்கூடாது. சிலர் எண்ணுவதுபோல, மனிதருக்குத் தீங்கு செய்யக்கூடாதே யொழிய மிருகங்களை இம்சிக்கலா மென்பது பொருளன்று. இன்னும் வேறு சிலர் பூனை நாய்களை ரக்ஷிப்பார்கள்; சர்க்கரையினால் எறும்புக்கு உணவிடுவார்கள்; தம்மைப்போன்ற மனிதனுக்கு இடுக்கண் விளைவிப்பது பாவமில்லை யென்றெண்ணுவார்கள். இதுவும் சரியன்று. ஒவ்வொரு நல்லகருத்தையும் அநுஷ்டானத்தில் கெடுப்பது இவ்வுலகத்தில் வெகு சாதாரணம். எந்த நல்ல கருத்தையும் வாக்கியங்களிலுள்ளபடி எழுத்தளவும் பிசகாமற் செய்தால் அதுவே தீமையாய் விளையும். அது போலவே, அஹிம்ஸை என்னும் தருமத்தையும் அப்பியாசத்தில் கெடுத்துவிடுகிறார்கள். சில சந்நியாசிகள் தலையில் மொய்க்கும் பேன்கள் சாகுமே என்று ஸ்நானம் செய்யாமலிருப்பார்கள்; பிறருக்கு அசௌகரியத்தையும் நோயையும் விளைவிப்போமே என்று சிறி

தேனும் சிந்தியார்கள். இவ்வித சந்நியாசிகள் வேதத்தைப் பிரமாணமாய்க் கொள்ளும் மதத்தில் சேராதவர்கள் என்பதே நமது தேறுதலுக்குக் காரணமாகிறது.

முற்றிலும் பொறுமை ஒழிவது அஹிம்சைக்கு அடையாளம். மூடபக்தியினாலோ, குரு சொல்லுகிறாரென்றோ, எவனும் ஒரு நொடியில் உற்சாகத்தால் நற்செய்கையைச் செய்வான்; பெருங் கொடையையும் அளிப்பான். ஆயினும், எவன் முற்றிலும் பொறுமையை ஒழித்தவனோ அவனே பிராணிகளிடத்து மெய்யான அன்பு கொண்டவன். உலகில் பெரியோரெனப்படுவோர்கள் பெயர்க்கோ, புகழுக்கோ, அற்பப் பொருளுக்கோ, ஒருவர்மீதொருவர் மனஸ்தாபப்படுவதைக் காணலாம். இவ்விதம் பொறுமையுள்ளவரையில், ஒருவன் கீரையைப்புசித்து ஜீவித்தாலும் பயனில்லை. மாடு மாமிசம் தின்பதில்லை; ஆடும் தின்னாது. இதற்காக இவைகளை அஹிம்சையென்னும் குணம் பொருந்திய மகாயோகிகளென்று நினைக்கலாமோ? இவ்வாறே எந்த மூர்க்கனும் மாமிசம் தின்னாமலிருப்பான். இதனால் இவனுக்கும் கீழ்ச்சொன்ன ஜந்துக்களுக்கும் வேறுபாடில்லை. விதவைகளையும், திக்கற்ற குழந்தைகளையும் பணத்திற்காக வஞ்சித்து, எவ்வித அகாரியத்தையும் செய்யத்தயாராயிருப்பவன் மிருகத்தைக்காட்டிலும் தாழ்ந்தவன். இவன் புல்லைத்தின்று வயிறு வளர்த்தாலும் குணமில்லை. எக்காலத்திலும் இதரருக்குத் தீங்கு நினையாமல், சத்துருவுக்கு நல்லது வந்தாலும் சந்தோஷிக்கும் இயல்புள்ளவனே பக்தன். அவனே யோகி. அவனே யாவர்க்கும் குருவாவான்.

அவன் பன்றிமாமிசத்தை உண்டாலும் குற்றமில்லை. உள்ளத்தில் தூய்மையை உண்டாக்குவதே வெளியில் செய்யும் நடை, உடை, ஊண் முதலியவைகளினால் வரும் உதவி. இவைகளை ஓர் அணுவும் பிசகாமற் செய்ய அசாத்தியமானால், மனத்தினுள் பரிசுத்தியைச் சம்பாதிக்க முயல்வது மேல். வெளிப்பாவனைகளை மட்டும் விடாமற் பிடித்துக்கொண்டு, தத்துவார்த்தத்தை மறப்பவர்களுக்கோ விமோசனம் வாராது. வெளிப்பாவனைகளெல்லாம் அந்தரங்க ஒழுக்கத்தை உள்ளபடி உரைக்கவேண்டும். அப்படி யில்லாவிடில் அவைகளை இரக்கமின்றி நசுக்கவேண்டும்.

அடுத்தபடி பக்தியோகத்திற்கு வேண்டிய குணம் அநவஸாதம்; அதாவது (பின் வாங்காமை) பலம். 'பலஹீனனால் ஆத்மாவை அடையமுடியாது' என்று சுருதி சொல்லுகிறது. தேகபலம், புத்திபலம், மனோபலம் எல்லாம் இங்கு குறிக்கப்படுகின்றன. 'பலசாலிகளும், வருத்தம் பொறுப்பார்களுமே' தகுந்த சிஷ்யர்கள். அங்கம் தளர்ந்தவர்களாலும், சிறுவர்களாலும், சக்தியற்றவர்களாலும் என்ன செய்யமுடியும்? யோகாப்பியாசத்தினால் தேகத்திற்கும் புத்திக்கும் உண்டாகும் கஷ்டங்களை இவர்கள் பொறுக்காமல் சின்னபின்னமாய் விழுவார்கள். நல்ல யுவாக்களும், சரீரக்கட்டோடு பலசாலிகளுமாயிருப்பவர்களே வெற்றி பெறுவார்கள். ஆகையால், உடல் வன்மை அவசியம் வேண்டும். இந்திரியங்களை அடக்கச்செய்யும் தவத்தின் வருத்தத்தைப் பலமுள்ள சரீரந்தான் தாங்கும். மிகவும் சக்தியில்லாதவர்கள் யோகாப்பியாசத்தில் புகுந்தால், ஆற்றொணுக்

கொடுநோய் சம்பவித்து, அவர்கள் மனமும், புத்தியும் தளர்ந்து விடும். வைதிக பக்தியை உண்டாக்குவதற்குச் சரீரத்தைப் பலஹீனமாக்குவது மருந்தன்று.

மனோபலமற்றவர்களுக்கும் ஆத்மஞானம் பிறவாது. பக்தி மார்க்கத்தில் செல்பவனுக்கு மனத்தில் உற்சாகம் பூரணமாய் இருக்கவேண்டும். ஒருவரோடும் பேசாமல், வாயடைத்து, சிரிப்பென்பதே தோன்றாமல், தாடை யொட்டிச் சுடுமுகத்தோடு இருப்பவருக்கே வைதிக பக்தி நிறைந்திருக்கும் என்று பெரும்பாலும் ஜனங்கள் நம்புவார்கள். இப்படிப்பட்டவர்களை வைத்தியனிடம் அனுப்பிச் சிகிச்சை செய்ய வேண்டும். இவர்கள் ஒருபோதும் யோகிக ளாகமாட்டார்கள். மனத்தில் உற்சாகமுள்ளவன்தான் விடாமுயற்சி செய்வான். திடமான மனமுள்ளவனே இடையூறுகள் எத்தனை வந்தாலும், சட்டைசெய்யாமல் வென்று செல்வான். மாயைவலையினின்றும் மீள்வதாகிய இந்த வெகு கடினமான வேலையை மனத்தில் அளவற்ற திடமுள்ளவனே செய்து முடிக்கவல்லவன்.

ஆயினும் அதிக சந்தோஷ முறுவதும் தவறு. அதிக சந்தோஷம் பிறந்தால் நிதானித்து யோசிக்க முடியாது; மனத்தின் பலத்தையும் வீணாக்கும். மனம் உறுதியாக ஆக, அதிக உற்சாகம் முதலிய அபிமானங்களுக்கு இடங்கொடாது. அதிக விசனம் எவ்வளவு கெடுதியோ, அவ்வளவு கெடுதியே அதிக சந்தோஷமும். சுகம், துக்கம் இரண்டையும் சமமாய்ப் பாவித்து

மனத்தை எப்போதும் ஒரே நிலையில் நிறுத்தினால் பிரஹ்மஞானம் தெளிவாய் விளங்கும்.

இவ்வித உபாயங்களை அனுசரித்தால், ஒருவனுக்கு ஈச்வரனிடத்தில் விசுவாசமும், அவரைத்தொழ வேண்டு மென்கிற அறிவும் பிறக்கிறது. இதற்குத் தான் கௌணபக்தி என்று பெயர்.

# பராபக்தி

# வைராக்கியம் அல்லது துறவு

இது வரையில், கௌண பக்தியின் தன்மையை யும், அதைச் சம்பாதிக்கும் பொருட்டு வேண்டிய குணங்களையும் பற்றிப் பேசினோம். இனிப் பராபக் தியை அறியப் புகுவாம். இந்தத் தசையை அடைவ தற்குக் கடைசியாய் வேண்டிய பயிற்சியைப்பற்றி முன் விவகரிப்போம். இவ்விதப் பயிற்சிகள் யாவும் ஆத்மா வைப் பரிசுத்தமாக்கத்தான் உதவுகின்றன. நாமோச் சாரணம், யாகாதி கருமங்கள், பிரதீகோபாசனை முத லியவை ஆத்மாவைப் புனிதமாக்குகின்றன. இப்பரி சுத்தியை உண்டாக்க இவைகளைவிட உயர்ந்த உபகர ணம் ஒன்று உண்டு; அதாவது வைராக்கியம் அல்லது துறவு. எல்லா யோகங்களிலும் இத்துறவு அவசிய மானது. இதைக் கண்டு பலரும் பயப்படுவார்கள். ஆயினும், இஃதின்றி எள்ளளவேனும் ஸாத்விகம் நிலை யாது. ஸாத்விக ஞானத்திற்கு இதுவே முதல்பதம்; இதுவே மூலகாரணம். எப்பொழுது மனிதன், இவ் வுலகிலுள்ள வஸ்துக்களினின்றும் விலகி, தத்து வத்தை அறிய முயல்கிறானோ, எப்பொழுது உலக வாழ்க்கையில் ஆழ்ந்து கட்டுண்டஜீவன் இவ்வாறு சம்சாரத்தில் உழல்வதால், தனக்கு நாசமே பலிப்ப தன்றி, உயர்ந்து உஜ்ஜீவிக்க வீரகில்லாததைக் கண்டு, இப்பிரபஞ்சத்தில் தோன்றும் பொருள்களிலுள்ள பற்றை அறுக்கிறானோ, அப்பொழுது அவனுக்கு வைராக்கியம் பிறக்கும். அது முதலே மெய்யான

ஸாத்விகமும் விளையும். கர்மயோகி, தான் செய்யும் கருமங்களின் பயனைக் கருதாமலிருப்பதே வைராக்கியம் என்பான். தான் செய்யும் காரியங்களினுல் உண்டாகும் பயன் தனக்கு வரவேண்டுமென்கிற ஆசை அவனுக்குத் தகாது. இகத்திலோ, பரத்திலோ லாபத்தை விரும்பக்கூடாது. ராஜயோகியின் மதத்திலோ பிரகிருதி ஆத்மாவிற்குப் போக்கியவஸ்து; ஆத்மா இதை அனுபவிப்பதனுலே, தான் வேறு என்றும், அசித்தானப் பிரகிருதி வேறென்றும் அறிகிறது; தனக்கு இயல்பாயுள்ளது சிதானந்த உருவம்; ஜடமான பிரகிருதியோடு தனக்கு ஏற்பட்டிருக்கும் சேர்க்கை ஏதோ கொஞ்ச காலமே உள்ளது என்று நன்ருய் அறியவேண்டும். ராஜயோகி, லோகானுபவத்தினுலேயே வைராக்கியத்தைப் பெறுகிருன். ஞானயோகிக்கு வைராக்கியம் விளைவது வெகு கடினம். இவன் ஆரம்ப முதல் பிரபஞ்சத்தில் தோன்றும் பொருள்கள் அனைத்தும் பொய் என்று அறிய வேண்டும். பிரபஞ்சத்தில் பலவாருகப் புலப்படுவன வெல்லாம் ஆத்மாவின் விகாரமென்றும், எல்லா அறிவும், அனுபவமும் தன்னுள்ளே உதிக்கின்றனவே யொழிய, வெளியில் உண்டாவதில்லை என்றும் இவன் அறியவேண்டும். ஆதலால், இவன் கேவலம் அறிவின் உறுதியினுலே பிரபஞ்சத்தினின்றும் விலகி, அதைப் பொய்யென்று ஒழித்துத், தான் மட்டும் தனியாய் நிற்க முயல்கிருன். இவர்களைவிடப் பக்தியோகிக்கு விளையும் வைராக்கியம் இயல்பானது. இவன் ஒன்றையும் வருத்தத்துடன் வெறுக்க வேண்டாம்; ஒன்றையும் துறக்கவும் வேண்டாம்.

இவனுக்கு வைராக்கியம், வெகு சுலபமாயும், சிறிதே னும் சிரமமில்லாமலும் வருகிறது. இவ்வித விரக்தியின் ஆபாசங்களை நாம் தினந்தோறும் காண்கிறோம். ஒரு வன் ஒருத்தியை விரும்புகிறான். சில நாள் கழித்து, வேறொருத்தியைப் பிடித்துக்கொண்டு, இவளைத் தள்ளி விடுகிறான். கொஞ்சம் கொஞ்சமாய் மூத்தவள் இவன் மனத்தினின்றும் நழுவி விடுகிறாள். அவள் இல்லாத குறையே இவனுக்குத் தோன்றுகிறதில்லை. அப் படியே ஒரு ஸ்திரீ ஒருவனை விரும்புகிறாள். பின்பு வேறொருவனிடம் செல்கிறாள். முதல்வனைக் கொஞ்ச காலத்திற்குள் அடியோடு மறந்து விடுகிறாள்.

முதலில் ஒரு மனிதன், தான் பிறந்த நகரில் விசு வாசம் கொள்கிறான். பிறகு அவனுக்குத் தனதுதேசத் தில் அன்பு உண்டாகிறது. தன் நகரில் முன்னிருந்த வரம்பிலாப் பிரீதியும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து மறைகிறது. பிறகு அவனுக்கே உலகம் முழுதிலும் அன்புபிறக்கிறது. அப்பொழுது உன்மத்த மான தேசாபிமானமும் ஒருவிதக் கடுமையின்றிக் குன்றுகிறது.

படிப்பில்லாத மூடன் இந்திரிய ஸுகத்தையே பெரிதாக எண்ணுகிறான். அவனே படிக்கப் படிக்கப், புத்தி விகாசத்தினால் அனுபவிக்கும் ஆனந்தத்தை மெச்சி அதிலே ஆழ்ந்து விடுகிறான். முன் இந்திரிய ஸுகத்தில் இருந்த அன்பு தொலைகிறது. நாயும், ஓநா யும் எவ்வளவு ஆவலோடு இரையைத் தின்கின்றனவோ, அவ்வளவு பிரீதி எந்த மனிதனுக்கும் தனது உணவில் உண்டாகாது. படிப்பினாலும், ஞானத்தினாலும் மனித

னுக்கு வரும் ஆனந்தத்தை நாய் அனுபவிக்குமா? கேவல சரீர சுகம் கீழ்ப்பட்ட மிருக ஜாதியில் வெகுவாய்க்காணப்படும். அம்மிருகமே குணங்களில் உயர்ந்தால், கஷ்டப்பட்ட இன்பங்களில் அவ்வளவு ஊற்றமுண்டாவதில்லை. மனுஷ்ய வர்க்கத்திலும், மிருகத் தன்மை எவனிடத்தில் அதிகமாய்க் காணப்படுகிறதோ, அவனிடத்தில் சரீர சுகங்களில் பிரீதி அதிகமாய்க் காணப்படும். புத்தி அதிகரித்தால், படிப்பு முதலிய உயர்ந்த விஷயங்களில் பிரீதி விளைகிறது. அப்படியே வெறும் படிப்பில் ஊறும் நிலையைக் கடந்து, சாத்துவிகத்தையும், பிரஹ்மதேஜஸையும் அவன் பெறுவானாகில், இந்திரியங்களினாலும், படிப்பினாலும் வரும் இன்பத்தைவிட அனேக மடங்கு அதிகமான பேரின்பத்தை அனுபவிக்கிறான். பதினாறு கலைகளுடன் பரிபூரணமாய்ச் சந்திரன் பிரகாசிக்கும்போது நக்ஷத்திரங்கள் கோடி ஒன்றாய்க் கூடியும், மங்கிப்போகின்றன. சூரியனுதயமானால் அச்சந்திரனே களையற்றுப் போகிறது. அவ்வாறே பக்திக்கு அங்கமான வைராக்கியம், ஒன்றிலும் துவேஷ புத்தியைச் செலுத்துவதினால் வருகிறதில்லை. பேரொளியில் சிறு காந்திகள் ஒடுங்குவது போலச் சர்வசுலபமாய்த் தோன்றுகிறது. கடவுளிடத்தில் அன்பு (பக்தி) ஜனிக்கும்போது, புலன்களினாலும் புத்தியினாலும் வரும் அன்பு தானே ஒடுங்கிப் போகிறது. இவ்வன்பு தினந்தோறும் வளர்ந்து பராபக்தியாகிறது. இப்பக்தியின் மூலமாய் ஈசுவரனை அறிபவனுக்கு, விக்கிரகங்கள், யாகாதி கருமங்கள், புத்தகப்படிப்பு, உலகத்தில்

வழங்கும் கொள்கைகள் யாவும் நிரர்த்த மாகின்றன. எவ்விதக் கட்டுப்பாடும் அவனைப் பந்தப்படுத்தாது. மாக்கலம் திடீரென்று காந்தமலையின் அருகில் வருமாயின், அதிலுள்ள இருப்புத்தாள் சட்டமெல்லாம் விட்டுப் பலகைகள் தனித்தனிபிரிந்து தண்ணீரில் மிதக்கும். அதுபோல, கடவுளின் கிருபையாகிற காந்தம், ஜீவனுக்குள்ள கட்டுகளனைத்தையும் நீக்கி, அதைச் சுதந்தரமாக்குகிறது. ஆதலால், இந்த வைராக்கியத்தை அனுசரிப்பதில் ஒரு வித கஷ்டமுமில்லை. தனக்கு இயற்கையாயுள்ள விசுவாசத்தைத் திடப்படுத்திக் கடவுளிடம் செலுத்திப் பெருக்கப் பக்தன் முயற்சி செய்கிறான்.

# பக்தனுக்கு வைராக்கியம் அன்பினாலேயே பிறக்கிறது

உலகில் எங்கும் அன்பு பரவியிருப்பதைப் பார்க்கிறோம். உயர்ந்த குணங்கள் யாவும் அன்பினாலேயே உண்டாகின்றன. இவ்வன்பைத் துன்மார்க்கத்தில் செலுத்துவதனால் துர்க்குணங்கள் விளைகின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் உண்டாகும் அன்பிற்கு எந்த மனோபாவம் காரணமோ, அதுவே அற்பமான காமத்திற்கும் உபகரணமாகிறது. ஒரு தன்மையை உடையதாயினும், விஷயத்திற்கு அனுகுணமாய் அது நன்மையிலும் தீமையிலும் ஓடுகிறது. இவ்வொரே அன்புதான், ஒருவனைத் தன் சொத்துக்களை ஏழைகளுக்குக் கொடுக்கவும், நன்மை செய்யவும், மற்றொருவனைப் பிறர்களைக் கொன்று அவரிடம் இருப்பதை அபகரிக்கவும் தூண்டுகிறது. இவ்விருவர்களில், பின் குறித்தவனுக்குத் தன்னிடம் எவ்வளவு அன்போ, அவ்வளவு அன்பு முதல்வனுக்குப் பிறரிடம் தோன்றுகிறது. முதல்வன் அன்பை விநியோகித்தவிடம் சரியானது. இரண்டாமவனோ அதைக் கெட்டவழியில் செலுத்துகிறான். நமது சமையலுக்கு உதவும் நெருப்பே குழந்தையைச் சுடும். அது நெருப்பின் குற்றமா? அதை உபயோகப்படுத்தும் வழியில் பேதம். ஆதலால், அன்பு என்னும் தன்மை எங்கும் ஒரே பிரகாரமாக உலகத்தில் விளங்குகிறது. அன்பாவது சேர்க்கையில் ஆசை.

இருவர் ஒருவராகப் பாவிக்கும் நடை. பலரும் ஒன்றில் அடங்கும் குணம். பக்தியோக மென்பது அன்பின் உயர்ந்த நிலையை நிரூபிக்கும் சாஸ்திரம். அன்பைச் செலுத்தும் வகையைக் காட்டுகிறது. இவ்வன்பை நாம் எப்படி நடத்தவேண்டும், எந்த வழியில்செலுத்த வேண்டும், எப்படி உபயோகித்தால் உயர்ந்த பயன்கள் விளைந்து, நமக்கு நல்ல கதி வரும் என்பதைத் தெரிவிக்கிறது. ஒன்றையும் துறவென்று சொல்வதில்லை. உயர்ந்த பொருளை விரும்பு என்கிறது. அதனுல் சிறு காமங்கள் தாமே ஒழிகின்றன. "உன்னை என்னுல் வர்ணிக்க முடியாது. நீ எனக்குப் பிரியன் என்பது தான் தெரியும். நீ வெகு அழகுள்ளவன். நீ அழகின் வடிவே" என்ற பெரியோர்கள் வசனம் உள்ளது. பார்க்குமிடத்தில், பக்திசாஸ்திரம் நம்மை அரிதாக என்ன செய்யச்சொல்லுகிறது? ரம்மியமான பொருளைப் பெற வேண்டு மென்று ஒவ்வொருவனுக்கும் தோன்றுகிற அவாவை ஈசுவரனிடத்தில் செலுத்தக் கற்பிக்கிறது. மனிதன் முகத்திலும், ஆகாயத்திலும், நக்ஷத்திரத்திலும், சந்திர பிம்பத்திலும் காணும் அழகு எம்மாத்திரம்? அழகின் எல்லையாகிய கடவுளின் தோற்றத்தில் இது ஏதோ ஒரு மூலை. "அவன் ஒளியில் யாவும் ஜொலிக்கின்றன. அவனது காந்தியினுல்தான் எல்லாவற்றிற்கும் காந்தி உண்டாகிறது." இம்மாதிரியான எண்ணத்தைக் கொண்டால்தான் தனது என்னும் ஆங்காரத்தை மறப்போம். தனது நன்மைக்காக உலகம் இருக்கிறது என்னும் கருத்தைக் கொள்ளாது, காட்சிக்காரன் போல் அசக்த சித்தனுய்,

வைராக்கியம் கொண்டு உலகத்தை நோக்கு. அப்போது ஆசைக்கடல் எவ்விதமாய் மோதுகிற தென்று தெரியும். சிலவேளைகளில் வருத்தங்கள் வரும். சில சமயம் ஓய்ந்து விழவேண்டிவரும். ஆனால் இவையெல்லாம் வழியில் தோன்றும் இடையூறுகளே. உலகத்தாரோடு ஒருவனுய் வசிக்கும் வரையில் இவ்வருத்தங்கள் துன்பம் செய்யும். அவர்களினின்றும் நீங்கித் தனியே நிற்கில், உலகில் பலவாறுய் வளரும் அன்பின் அலைகள் யாவும் அனுராக சாகரனுன கடவுளின்உருவங்களே யென்று நன்ருய்த்தெரியும்.

எந்த விடத்தில் ஆனந்தம் உண்டாகிறதோ, அது மிகவும் தமோகுணம் பொருந்திய தாயினும், அவ்விடத்தில் நித்தியானந்தரான ஈசுவரனது ஓர் அம்சம் வெளியாகிறது. மிக்க இழிவான ஆசையிலும் உத்தமமான திவ்ய விசுவாசத்தின் ஓர் அணுமாத்திரமாயினும் நிற்கிறது. ஸம்ஸ்கிருத பர்ஷையில் கடவுளுக்கு 'ஹரி' என்று ஒரு நாமம் உண்டு. ஹரி என்ருல், எல்லாப்பொருள்களையும் தன்னருகில் இழுத்துக்கொள்பவன் என்பது கருத்து. யோசிக்குமிடத்தில், அவரொருவர்தாம் மனிதர்களுடைய மனத்தைக் கவர உரியபொருள். வாஸ்தவத்தில் ஜீவாத்மாவைச் சுவாதீனப்படுத்த எவரால் முடியும்? அவரொருவராலேயே! ஜீவனற்ற ஜடவஸ்துக்கள் இந்த ஜீவாத்மாவை இழுக்கும் என்று நினைக்கிருயா? அது ஒருக்காலும் முடியாது. ஓர் அழகிய முகத்தைக்கண்டு அதன் பின் ஒருவன் போனுல், கேவலம் அந்த முகவுருவங்கொண்ட சதையா அவனை அபகரிக்கிறது

அல்லவேயல்ல. அந்தச் சதைக்குள் அம்மணிதனை இழுக்கவல்ல ஈசுவரனுடைய அம்சமான ஆசைக்காந்தமிருக்கிறது. அது இழுக்கிறதே யன்றி, வெளியில் தோன்றும் தசையும் தோலும் இழுப்பதில்லை. மூடனுக்கு இது தெரிகிறதில்லை. ஆனால் தெரிந்தோ, தெரியாதோ உள்ளிருக்கும் அந்தக் கடவுள் காந்தத்தினாலே தானும் இழுக்கப்படுகிறான். "எவளும் கணவனை அவன் பொருட்டு விரும்புகிறதில்லை. அவனது உருவத்தினுள் இருக்கும் ஆத்மாவைப்பற்றியே அவனை விரும்புகிறாள்." இந்தத் தத்துவத்தைக் காதல் கொள்ளும் பெண்கள் அறிந்தாலும் அறியா விட்டாலும், வஸ்து ஸ்திதி ஒன்றேயாகும். "எவனும் தன் மனைவியை அவளது ரூபத்தின் பொருட்டு விரும்புவதில்லை. அவளுள்ளே தோன்றும் ஆத்மாவைத்தான் விரும்புகிறான்." இவ்வாறே குழந்தையையும், மற்றும் எப்பொருளையும் அதன் உள்ளேயிருக்கும் கடவுளின் பொருட்டே விரும்புகிறான். கடவுள் ஒரு பெரிய காந்தம். நாம் எல்லோரும் இரும்புப்பொடிகள். ஒவ்வொருவரும் அவரால் இழுக்கப்படுகிறோம். அவரை அடைய வருந்துகிறோம். இப்படி நாம் படும் கஷ்டமெல்லாம் வெறும் சரீர சுகத்திற்காக வன்று. மூடர்களுக்குத் தாங்கள் இன்னது செய்கிறார்கள் என்று தெரிவதில்லை. அவர்களது வாழ்க்கைகளின் பயனும் அப்பெருங்காந்தத்தை அடைவதே. நாம் ஒவ்வொரு ஜன்மத்திலும் படும் பாடுகளும், செய்கைகளும், அப்பெருங்காந்தத்தை அணுகிக் கடைசியில், அதனோடு ஒன்றாகக் கலப்பதற்கே.

பக்தியோகிக்கு இந்த உளவு தெரியும். ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் இவ்வருத்தங்களின் வகை அவனுக்குத்தெரியும். இவ்வித சிரமங்கள் அநேகம் அவன் பட்டு, அவைகளின் கருத்து இன்னதென்பதை யறிந்து, இனி இவ்வித வருத்தத்தைப்படாது மீள மிகவும் விரும்புகிறுன். மனோஹரமான பொருள்கள் அனைத்துக்கும் ஆதாரமாய் நிற்கும் கடவுளை நேர் வழியாகவே அவன் அடையக் கருதுகிறுன். இதுதான் பக்தனது துறவு. கடவுளினிடத்தில் அதிக ஆசை விழுகிறபடியால், இதர வஸ்துக்களில் புத்தி போவதில்லை. ஈசுவரபக்தி இவன் மனத்தில் முழுதும் நிறைந்து, வேறொரு எண்ணம் சேர இடம் தருவதில்லை. பேரின்பக்கடலாகிய கடவுளது அன்புநீர் பாய்ந்தோடி நிறைய, இவன் இருதயத்தில் சிற்றின்பத்தில் அன்புகள் நிற்க இடமில்லாது போகின்றன. அதாவது, பக்தன் கொள்ளும் வைராக்கியம், கடவுளின்பால் வரம்பில்லாத அன்பும், அக்கடவுளல்லாத மற்ற பொருள்களிடத்தில் பற்றின்மையுமே.

இதுதான் பராபக்தி தோன்றுவதற்குப் பூர்வபீடிகை. இவ்விதத் துறவுத்தன்மை வந்ததும், ஆன்மாவின் வழிதிறந்து, அப்பெரும் பக்தி வெள்ளமாய்ப் பெருகும் பதவியை அது நாடுகிறது. இந்தப் பக்தியை உண்டவனே, பிம்பம் முதலிய கருவிகள் வேண்டாம் என்று சொல்லத்தகுந்தவன். அவனே எவ்வுயிரையும் தன்னுயிர்போ லெண்ணும் தபோதனன். பிறர்களுக்கு இது வீண் பேச்சு. அவனொருவனே வேற்றுமைகளை மதியாதவன். பேரன்பு பெருகியிருப்பதனுல், அவன்

மற்றவரை வெறும் மனிதராக அறிவதில்லை. தன் இஷ்ட தெய்வத்தை அவருள் காண்கிறான். ஒவ்வொரு முகத்திலும் அவனுக்கு ஹரி பிரகாசிக்கிறார். சந்திர சூரியர்களிலுள்ள காந்தியும் அப்பெருஞ் சுடரின் தோற்றம்; எங்கெங்கு சௌந்தரியமும், வைபவமும் உள்ளனவோ, அவை யாவும் அவருடையவே என்னும் அறிவுள்ள பக்தர்கள் இவ்வுலகில் இன்னும் இருக்கிறார்கள். இவர்களைப் பாம்பு கடித்தாலும், தமது ஆசைக் காதலன்அனுப்பிய தூதன் வந்தான் என்று சொல்லிக் களிப்பார்கள். இவர்களுக்குத்தான் உலகிலுள்ள எல்லா ஜனங்களும் சகோதரர்கள் என்கிற அறிவு உண்மையாய் உண்டு. இவர்களே அதைப்பற்றிப் பேச அதிகாரமுள்ளவர்கள். இவர்களுக்குக் கோபமே வராது. பகைமை, பொறாமை முதலிய துரெண்ணங்களும் தோன்றுவதில்லை. வெளியில் தெரியும் உருவங்கள் கண்களிலே படாமல், அவ்வுருவங்களி னுள்ளிருக்கும் மெய்ப் பொருளையே பார்க்கும் இவர்களுக்குக் கோபதாபங்கள் எவ்வாறு உதிக்கும்?

---

# பக்தியோகத்தின் எளிமையும் அதன் இரகசியமும்

"இடைவிடாத கவனத்தோடு ஸதாகால யோகம் பூண்டு உன்னையே எவர்கள் உபாஸிக்கிறார்களோ, எவர்கள் உன்னை அக்ஷரமாகவும், அவ்யக்தமாகவும் உபாஸிக்கிறார்களோ,—இவர்களில் உத்தம யோகவித்துக்கள் யார்?" என்று அர்ஜுனன் வினவ, பகவான் பதிலுரைத்ததாவது:—

"எவர்கள், என்பால் மனத்தைச் செலுத்தி, எப்போதும் என்னை நினைத்தவர்களாய், அமர்ந்த ஆவலோடு உபாஸிக்கிறார்களோ, அவர்களே எனது சிறந்த பக்தர்கள்; அவர்களே உத்தம யோகவித்துக்கள். எவர்கள், ஐம்பொறிக்கூட்டத்தை நன்றாய் அடக்கி, எல்லாவற்றையும் சமமாய்ப்பார்த்து, அக்ஷரனும், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாகி நிற்பவனும், அவ்யக்தனும், நினைவுக்கெட்டாதவனும், அசைவற்றவனும், நித்தியனுமாகிய கூடஸ்தனை உபாஸிக்கிறார்களோ, அவர்களும், எல்லாப் பிராணிகளுடைய நன்மையில் ஊக்கங்கொண்டு என்னையே அடைகிறார்கள். ஆனால், அக்ஷரத்தில் மனத்தைச் செலுத்துவோருக்கு வருத்தம் அதிகம். தேகம்படைத்தவர்கள் அந்தப்பாதையில் போய் மீள்வது கடினம். எவர்கள், எல்லாக் கர்மங்களையும் என்னிடம் ஒப்புவித்து, பிறரைத்தொடர்ந்திடாமல் என்னையே நம்புகிறார்களோ, அவர்களை ஜனன மரண சமுத்திரத்தினின்றும் உடனே கைதூக்கி விடுகிறேன்." ஞானயோகம் பக்தியோகம் ஆகிய இரண்டையும் இவ்வசனங்கள் குறிக்கின்றன. இவ்விரண்டு யோகங்களின்

சொரூபங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. ஞானயோகம் மிகச்சிறந்ததே. ஒவ்வொருவனும் தனது புத்தியிஞலேயே சர்வத்தையும் சாதிக்கலாம் என்று எண்ணுகிருன். ஆஞலோ, ஞானயோகத்தில் நின்று நல்லறிவை விடாமலிருத்தல் அரிது. விரைவில் பற்பல விபத்துக்கள் நேரிடும். இவ்வுலகத்திலுள்ள ஜனங்களை இரண்டு வகுப்புக்களாகப் பிரிக்கலாம். உடலைப் பாதுகாப்பதே வாழ்க்கையின் புருஷார்த்தமென்று நம்பி, தம்முடைய லாபத்தையே மேன்மையாகக் கருதும் அசுரவியல்பைச் சார்ந்தவர் ஓர் வகுப்பினர். இன்ெனுருவரோ, அறஞ்செய்து ஆத்மாவை உயர்த்துவதே சரீரத்திஞற்சேரும் சௌகரிய மென்று நினைக்கும் தேவகணத்தை யொட்டினவர். அதர்மத்தில் பாயும் அசுரர்களும் தங்களுக்கனுசரணையாகச் சாஸ்திரம் கூறுவார்கள். ஆதலால், நன்மையை நாடும் நல்லவர்கட்கு உதவி வாய்ப்பதுபோல, தீமையை நாடும் தீயோர்க்கும் ஞானத்திஞல் ஆதாரம் ஏற்படுகிறது. இந்தப் பெரிய அபாயம் ஞானயோகத்தில் விளையும். பக்தியோகமோ பிரயாசமில்லாமல் சுகத்தைச் சுலபமாய்த் தரும். ஞானயோகியைப்போல், அறிவிஞல் தாவித் தனது வாழ்வின் வகைகளைக் கடந்து, பக்தியோகி உயரப் பறப்பதில்லை. ஆதலால் அதப்பாதாளத்தில் வீழ்ந்து வாடுவதுமில்லை. இவ்வித குணமுளதேனும், வினைக்கட்டு முற்றிலும் கழியும் வரையில் ஜீவன் சுதந்தரத்தைப் பெருன். பெரும் பாக்கியத்தைப் பெற்ற ஒரு கோபிகை இருவினைப் பயன்களையும் எவ்வாறு விலக்கிக்கொண்டாள் என்று அடியில் வரும் விஷ்ணுபுராண

வாக்கியமானது விசதமாய்க் காட்டுகின்றது:—“ கடவுளைத் தியானிப்பதனால் விளையும் பேரானந்தத்தை அனுபவித்து, தான்செய்த புண்ணியத்தின் பயனை விலக்கினாள். அவரைப் பிரிந்து தனியாய்த் தவிக்கிறேனே என்னும் துயரத்தில் ஆழ்ந்து, தனது பாவங்களனைத்தையும் தொலைத்தாள். இவ்வாறு ஜகத்திற்குக் காரணமான பரம்பொருளைப் பாவித்து, அந்தக் கோபகன்னிகை, சுவாசமுமின்றி முக்தியடைந்தவள்போலிருந்தாள்.” பக்தியோகத்தால் நாமறியவேண்டிய ரகசியம், என்னவெனில், மனிதனுள் தோன்றும் ராகலீலை கோபதாபம் முதலான எண்ணங்கள் இயற்கையில் பிசகானவையல்ல; அவைகளைப் பக்குவப்படுத்தி, நல்வழியிற் செலுத்தி நலமாக்கவேண்டும். சுகதுக்கங்கள் மனுஷ்யனுக்கு சஹஜமாய் வருகின்றன. பணமில்லையேயென்றும், மற்றச் சிற்றின்பம் கிடைக்க வில்லையேயென்றும் வருத்தப்படும்போது, அவன் அவ்வருத்தத்தைச் சரியான வழியில் செலுத்துவதில்லை. கடவுளைக் காணவில்லையே யென்று வருந்துவானாகில், அப்போது அவ்வருத்தமே அவனது மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. கொஞ்சம் காசு கிடைத்ததென்று சந்தோஷிக்கும்போது, ஆனந்தமுறும் தன்மையைத் தப்புவழியில் செலுத்துகிறோம். உயர்ந்த உத்தேசத்தில் இத்தன்மையைப் பாராட்டினால் அதைவிடப் பேரின்பமென்ன உண்டு? வேறு சிந்தனைகளிலும் இவ்வாறே பக்தன் எதையும் தப்பென்று தள்ளான். அத்தன்மைகளைக் கடவுள் முகமாய்ச் செலுத்தவேண்டும் என்பான்.

---

# பக்தி பிரகாசிக்கும் பிரகாரங்கள்

பக்தியானது அனேக பிரகாரங்களாக இவ்வுலகில் வெளிப்படுகின்றது. முதலில் வணக்கம் உண்டாகிறது. ஆலயங்களிலும், புண்ணிய க்ஷேத்திரங்களிலும் ஜனங்கள் ஏன் பயபக்தியுடன் வணங்குகிறார்கள்? ஏனெனில், கடவுள் அங்கு பூசிக்கப்படுகிறார். அவ்விடங்களில் பகவான் இருக்கிறார் என பாவிக்கப்படுகின்றது. எல்லா நாட்டிலும் ஜனங்கள் ஏன் சமயாசாரியர்களைக் கும்பிடுகிறார்கள்? இவ்வாசாரியர்கள் கடவுளைப்பற்றியே போதிக்கிறபடியால், அவர்களுக்கு அஞ்சலி செய்வது வழக்கமாய் வருகிறது. இந்த வணக்கத்திற்கு அன்பே காரணம். எவர்பால் அன்பு உண்டாவதில்லையோ அவரை வணங்க மனம் வராது. பிறகு, பிரீதி அல்லது விசுவாசம் பிறக்கிறது. புலன்களை இனிப்பிக்கும் பண்டங்களில் எவ்வளவு ஆனந்தம் அடைகிறார்கள்? தமது இந்திரியங்கள் அவாவும் வஸ்துக்களைப்பெற எங்கும் செல்கிறார்கள்; எவ்வித அபாயங்களிலும் நுழைகிறார்கள். இவ்வித விசுவாசத்தைத்தான் பக்தனும் செய்ய வேண்டும். ஆனால் இவன் இதைக் கடவுளினிடம் செலுத்துகிறான். துன்பங்களுக்குள்ளே ரம்மியமான துன்பமொன்றுண்டு; அதாவது விரகம்; ஆசைக்காதலரைப் பிரிந்த துயரம். கடவுளை இன்னும் காணவில்லையே, அறிவதற்குரிய அவ்வொரு புருஷனைப்பாராது தனித்திருக்கிறோமே என்னும் குறை மனமுழுதும்

பாவிப் பெருந்துயரக் கடலில் மூழ்கி, பித்தம் பிடிக்கு மாகில், அம்மனிதர் விரகதாபத்தால் பரிதவிக்கிறார்கள் என்போம். இந்நிலைமையில் அவர்கட்கு வேறெந்தச் சுகத்திலும் சுவை தோன்றாது. காமநோயில் இதை வெகுவாகக் காணலாம். நாயகர்கள் நாயகிகளிடத்தும், நாயகிகள் நாயகரிடத்தும் கங்கிலாக்காதல் கொள்வாராகில், பிறரைக் காணவும் கூசுவார்கள். இவர்கள் ஏன் தொந்தரை செய்கிறார்கள், தூரத்தொலையாரோ என்றும் அருவருப்பார்கள். இப்படியே, "பராபக்தி" தோன்றும் போதும் இவ்வித ஆற்றாமை பிறக்கும். தனது தெய்வத்தைத் தவிர வேறொன்றைப் பற்றிப் பேசுவதும் அருசியாய் விளையும். "அவனை நினை, அவனையே நினை, மற்றவீண் வார்த்தையை மற" என்று முண்டகோபனிஷத்து முழங்குகிறது. அவனைப் புகழ்வார்களை நேயர்களாகவும், மற்றப் பேச்சுக் கொடுப்பவரை விரோதிகளாகவும் பக்தியோகி எண்ணுவான்.

இன்னும் உயர்ந்த நிலையில், கடவுள்பால் பக்தியைச் செய்வதே இவ்வாழ்வின் பயன். பக்தி நிறைவேறும் பொருட்டே பிராணனைக் காப்பாற்ற வேண்டும்; இதுவே அழகான வாழ்வு என்று வசிப்பான். ஒரு நொடியாவது பக்தி மறையுமாகில் அவனுக்கு உயிரே போய்விடும். இப்படி பக்தியின் கரையைக் கண்டு, கடவுளின் அனுக்கிரகத்தைப் பெற்று, அவரது பாதாரவிந்தத்தில் பணிந்து, சகல நிகளக்கட்டுகளும் அவிழ்ந்து, சுத்த சாத்விகனாய்ப் பிரகாசிக்கும்போது, 'ஆண்டவனுக் கடிமையானேன்; அவனுடைமை

யானேன்' (ததீயன்) என்னும் அறிவு வருகிறது. அந்நிலையில் சகல மனோரதங்களும் பூர்த்தியாகின்றன.

இதன் பின்னரும், கடவுளைக் காதல்தீரத் தொழ விரும்பி, அநேக பக்தர்கள் உலக வாழ்க்கையை இச்சிக்கிறார்கள். இதுவே அவர்கட்குப் பிரம்மானந்தம். இந்தக் குற்றேவலை விட்டுவிட அவர்கள் மனங்கொள்ளார்கள். "ராஜனே! எல்லா மனோரதங்களையும் அனுபவித்து ஆசை தீர்ந்து, இதய பந்தங்களை முற்று மொழித்துப் பேரானந்தமடைந்த பெரியோர்களும், ஒன்றும் வேண்டிலராயினும் ஹரியைப் பரமபக்தியுடன் பூசிக்கிறார்கள். அவ்வளவு சிறந்த குணங்கள் குடிகொண்டவர் அந்த ஹரி" எனவும், "தேவர்களும், முமுக்ஷுக்களும், பிரஹ்மவித்துக்களும் அவரைப் பணிகிறார்கள்" என்றும் சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தகைய திறமை பக்திக்குளது. தன்னை மறந்து, தனக்கென்று ஒன்றுமில்லை யென்று உணரும் போது " ததீயதாஸ்திதியைப்" பெறுகின்றான். இவனுக்கு யாவும் சிறந்தனவாகத் தோன்றுகின்றன. தான் தொழும் தெய்வத்தினுடையவைகளென்று, ஐஹிக பதார்த்தங்களையும் பிரீதிவைத்துக் கௌரவிக்கிறான். கந்தையேயாயினும், தனது காதலி கட்டிக் கழித்த தென்று பரபரப்புடன் கையிலெடுத்துக் காமுகன் களிப்பது போல, கடவுளை நேசிக்கும் பக்தியோகி, வையகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் அவருடைய சிருஷ்டியல்லவோ என்று விரும்பிக் குலாவுகிறான்.

# பராபக்தியும், அதன் மூலமாய்த் தோன்றும் ஆத்ம ஸமர்ப்பணமும்

எல்லாவற்றையும் கவரும் ஸமஷ்டியை முதலில் விரும்பாது, பகுத்துத் தோன்றும் வியஷ்டியில் எவ்வாறு அன்பு ஜனிக்கும்? சகலத்திற்கும் ஆதாரமாகிய கடவுளே ஸமஷ்டி; நாம் பார்க்கும் பிரபஞ்சம் வியஷ்டி. அநேககோடி வியஷ்டிகள் அடங்கிய ஸமஷ்டியாகிற ஈசுவரனை அறிந்து விரும்பாமல், இப்பிரபஞ்சத்தினிலுள்ள வஸ்துக்களிடத்தில் அன்பு பாராட்டுவது அசாத்தியமான காரியம். இந்திய வேதாந்திகள் சில்லரையான வியஷ்டியிலே புத்தியைச் செலுத்தித் திருப்தர்களாய் நின்று விடுவதில்லை. இவைகளிலேயே முழு கவனத்தையும் செலுத்திவிடாது இவைகளுக்கெல்லாம் ஆதாரமான பொருளொன்று இருக்க வேண்டுமே யென்று யூகித்து, அதை அறியப் புகுகின்றார்கள். ஆதலால் ஸமஷ்டியை அறிவதிலேயே இந்தியர்களுடைய தர்க்கமும், வேதாந்தமும் நோக்கம் கொள்கின்றன. ஞான யோகத்தை அனுசரிப்பவன், எதனை அறிந்தால் யாவையுமறியலாமோ, அப்படிப்பட்ட மஹத்தை அறிய யத்தனிக்கிறான். பக்தியோகியும், எந்தப்பொருளை நேசிப்பதனால் பிரபஞ்சத்திலுள்ள சராசர வஸ்துக்களிடத்தில் அன்பு பிறக்குமோ, அப்பரம்பொருளை ஸாக்ஷாத்கரிக்க விரும்புகிறான். ஸாங்கிய யோகியோ, எந்தச்சக்தியைச் சார்ந்தால் ஜகம் முழுவதையும் ஆளத் திறமைவருமோ, அத்தகைய வல்லமையுள்ள பிரஹ்மத்தை அடையக்

கருதுகிறான். ஆனதுபற்றி, எக்காலத்திலும், எப்பயிற்சியிலும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் பராபரத்தைத் தேடுவதிலேயே இந்தியர்களின் நோக்கம் இருந்தது.

ஒவ்வொரு வஸ்துவாகப் பொறுக்கி எடுத்து, ஒன்றின் பின்னென்றாக அன்பு பாராட்டி, உலகமனைத்திலுமிருக்கும் வஸ்துக்களிடத்தில் பிரீதி பண்ணுவோம் என்று ஆரம்பித்தால், பலகோடி வருஷங்கள் பிரயாசப்பட்டாலும் பலிக்காதென்று பக்தியோகி விசாரித்துத் தெளிகிறான். ஆதலால், சகலவித விருப்பங்களின் வரம்பும் கடவுளேயென்றும், பக்தர்களும் முக்தர்களும் முமுக்ஷுக்களும் தனித்தனியே விரும்பும் விருப்பங்கள் யாவும் அக்கடவுள்பாலே யென்றும் இந்த ரகசியார்த்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அறிவு உதித்தபின்பே பேரன்பு உண்டாகும். ஸமஷ்டியான பிரஹ்மமே இப்பிரபஞ்சமாகப் பிரிந்து தோன்றுகிறதென்று தெளிந்த பக்தன், அக்கடவுளை விரும்புவதனால் அவருள்ளடங்கிய ஒவ்வொரு பொருளையும் விரும்புகிறான். முதலிற் கடவுளை நேசித்து நிறைந்த பக்தியைச் சம்பாதித்தால், தேசத்தில் அன்பு கொள்வதும், அதற்கு நன்மை செய்யப் புகுவதும் தாமே வரும். இதின்றித் தேசத்திற்கு நன்மையைத்தேடத் திறமையும் வாய்த்தலரிது. "எல்லாம் அவனுடைமை. அவன் எனது நாயகன். அவனையே விரும்புவேன்" என்று பக்தன் எண்ணுவான். இவ்விதம், எல்லாவஸ்துக்களையும் கடவுளினுடைய குழந்தையாகவும், சரீரமாகவும், ரூபமாகவும், நினைக்கிறபடியால் அவனுக்கு யாவும்

பூஜனீயமாகின்றன. பின்பு அவன் எதைத்தான் இம்சிப்பான்? எதைத்தான் அன்புடன் கொண்டாடமாட்டான்? கடவுளிடத்துப் பக்தி நிறைந்ததும் ஜீவகாருண்யம் கட்டாயம் வரும். கடவுளினருகில் செல்லச் செல்ல, எல்லாப் பொருள்களும் அவனுள்ளே அமைந்திருப்பதை உணர்கிறான். அக்கடவுளையே தேடும் அவாவை அடைந்ததும், எங்கணும் அவன் வியாபித்திருப்பதைப் பார்க்கிறான். அவனது இதயமும் வற்றாத சிற்றாறல்போல ஆசைவாரியைச் சுரக்கும். இன்னும் மேம்பாடுடைய ஸ்திதியை அடைவானாகில், ஜகத்திலுள்ள வஸ்துக்களில் ஒன்றுக்கொன்று தோன்றும் சிறு வித்தியாசங்களையும் மறந்து, மனிதர்களையும் தெய்வமாகவே தரிசிப்பான். விலங்குகளும் கீழ்ப்பட்ட பிராணிகளாகத் தோன்றா. அவைகளையும் தெய்வமென்று தொழுவான். புலியைத் துஷ்டமிருகமாக எண்ணமாட்டான்; கடவுளின் அம்சமென்று பணிவான். அசர சரமயமான பிரபஞ்ச மனைத்தையும் பூசிப்பான். "எல்லா வஸ்துக்களிடம் கடவுள் குடியிருப்பதை அறிந்த பண்டிதர்கள் சகல பூதங்களிலும் அசஞ்சலமான பிரீதியைச் செய்கிறார்கள்."

இத்தன்மையுள்ள பக்தி பிறந்த பிறகு, தெய்வமே தஞ்சமென்றும், நேரிடுவனவெல்லாம் நன்மைக்கேயென்றும் மஹாவிசுவாசத்தைக் கொண்டு, துன்பம் வரினும், 'துன்பமே நல்வரவு', துக்கம் சம்பவித்தாலும், 'துக்கமே! என்னிறைவன் சங்கற்பத்தினால் தானே நீயும் வருகிறாய், நல்லது என்னிடம் வாழ்' என்பான். கடிப்பதற்கு மகாநாகம் சீறினாலும் நல்லதென்று

மகிழ்வான். சுகதுக்கங்களைச் சமமாகவெண்ணித், தன்னைத் துன்பம் வாட்டுகிறதே என்கிற தாபமின்றி, ஈசன் செயலென்று, எதையும் நிஷ்டூரமின்றி அனுபவிப்பான்.

பெரும்பான்மையரும் சரீரத்தையே முக்கியமாக எண்ணுகிறார்கள். அவர்கட்குச் சர்வசுகமும் சரீரத்தோடே முடிகிறது. உடலைப் போற்றுவதும், அதற்கு இன்பந்தருமவைகளைத் தேடுவதுமாகிய இந்த மாயப் பிசாசம் நம்மெல்லோரையும் பிடித்தாட்டுகிறது. "கம்பீரமாகப் பேசலாம்; சிறந்த வாதங்களில் பறக்கலாம்; கண்மட்டும் கழுகைப்போல கீழே கிடக்கும் சிற்றின்பமாகிற அழுகிய சவத்தை விட்டு நழுவாது." புலியினின்று தப்பி யாக்கையைக்காக்க ஏன் ஓடவேண்டும்? ஏன் இந்த உடலை வேங்கைக்கு இரையாக்கக் கூடாது? அதனால் அக்கொடுவரி களைதீர்ந்து உள்ளங்குளிருமே! இதைவிட உயர்ந்த த்யாகமு முண்டோ? "தான்" என்பதை முற்றிலும் மறக்கும் நிலையை மனக்கண்ணாலாவது காணவல்லோமல்லோம். தலைச்சுற்றியாடும் அவ்வுச்சியில் யாரோ சிலரே இதுகாறு மேறி இருக்கிறார்கள்! இப்பதத்தையடைந்து, தன்னையும், தன்னுடையதையும் பிறர் பிழைப்பதற்காகப் போக்கத் தயாராகி நின்றாலல்லது எவனும் சிறந்த பக்தனாகமாட்டான். எவ்வளவு ஜாக்கிரதையாக உடலை ரக்ஷித்தாலும், அதை எல்லோருங் கொஞ்சம் முன் பின்னாக எமனுக்கு இரையாக்குகிறோம். என்றைக்காவது இவ்வுடல் விழவேண்டும். அது நிரந்தரமாய் நில்லாது. பிறருக்குழைத்துச் சரீரத்தைத் துறக்கிறவர் அல்லவோ புண்ணியஞ்

செய்தபெரியோர். "செல்வத்தையும், உயிரையும் பரோபகாரத்தில் ஒழிக்க முனிவர்கள் எப்பொழுதும் தயாராயிருப்பார்கள். மேதினியில் மரணமொன்றே நிச்சயமாதலால், தீயதொழிலில் இறப்பதைக் காட்டிலும் நல்வினையில் உடலை மாய்ப்பது மேலானது." ஐம்பது நூறு பிராயம் வாழ்ந்தாலும், பின்பு வருவதென்ன? சேர்க்கையால் பிறக்கும் பொருள்கள் மறுபடி பிரிந்து அழிய வேண்டுவனவே. ஏதோ ஒரு நாள் இவ்வுடல் விழுந்தே தீரும். கௌதமபுத்தர், இயேசு, மஹமது முதலிய லோகாசாரியர்களும், திரிகால ஞானிகளும் இப் பூதலத்தைவிட்டுப் பிரியவில்லையா? "நச்வரமான உலகத்தில் சகலமும் நசித்துப் போவதைக்கண்ட நாம் உள்ள நாளை நன்றாக விநியோகிக்கவேண்டும்." பிறர்களுக்கு நன்மை புரிவதைவிட வேறு எதுதான் உயர்ந்த உபயோகமாகும்? தேகமே ஆத்மாவென்றும், அதை எவ்விதத்தாலும் ரக்ஷித்துக் களிப்பிப்பது கடமை யென்றும் பிரமை பிடித்திருப்பதனாலன்றோ இவ்வுலகத்தில் "தான் தான்" என்கிற பேராசை பெருகியிருக்கிறது. நாமென்பது சரீரமல்லவென்று ஒருவனுக்குத் தெரியுமாகில், அவன் ஒருவரோடும் சண்டைசெய்யக் காரணமே இராது. தன்னுடைமை என்னு மெண்ணமே உண்டாகாது. ஆகையினாலே, பக்தியோகி உலகபதார்த்தத்தம் எதிலும் பற்றுவைக்காமல் மறக்கவேண்டுமென்கிறான். இதுவே மேற்பட்ட ஆத்ம ஸமர்ப்பணம். "உன் ஆணை நடக்கும்" என்னும் வசனத்தின் கருத்து இதுவே. 'வருவது வரட்டும், எல்லாம் நமது நன்மை

க்கே' என்று வசிக்கவேண்டும். நமது குறைகளையும் ஆசைகளையும் கடவுளே சங்கற்பிக்கிறார் என்று மதித்து, நமது யுக்தியாலும் சக்தியாலும் ஜகத்தைப்புரட்டலாமென்று கர்வங்கொண்டு வருந்துவது வீணேயாகும். சிலவேளைகளில் அஹங்காரத்தோடு நாம் செய்யும் முயற்சிகளாலும் நலம் பெறலாம். ஆனால் அதுவும் அவன் திருவுளமே யன்றி நமது முயற்சியின் பெருமையன்று. தனக்கு நலம் வாய்க்கட்டும் என்று விரும்புவதும், அதற்காகக் கருமத்தில் உறைவதும் பரிசுத்தமான பக்தனுக்கு அடாது. "இறைவனே! உனக்காகப் பெரிய ஆலயங்களைக் கட்டுகிறார்கள். நன்கொடைகளை அளிக்கிறார்கள். நானோ ஏழை; ஒன்றுமில்லாதவன். எனதாகிய இவ்வுடலை நினது பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். என்னை மறுக்காமல் காப்பாற்றும், ஐயனே!" என்று இவ்விதமான பிரார்த்தனைகளையே பக்தன் மனமாரச் செய்வான். இவ்வன்பின் இன்பத்தைத் திளைக்கும் அவனுக்கு, தன்னையே பகவானுக்கு அர்ப்பிப்பது செல்வம், பிரதாபம், புகழ், போகம் இவைகளைவிடப் பலமடங்குபெரியது. அவன் அடையும் சாந்தியை அளவிடமுடியாது. அது விலையில்லாமாணிக்கம். ஐஹிகவஸ்துக்களில் ருசியில்லாததனால், அவனுக்குப் பிரதிகூலமாக ஒன்றும் புலப்படுவதில்லை. பாசம் விலகி, சராசரமனைத்தையும் காத்து நடத்தும் கடவுள்பால் அளவிறந்த நட்புப் பேறொன்றே மிகுந்திருக்கும். கடவுளிடம் தோன்றும் இந்த அன்பு ஆத்மாவைக் கட்டுவதில்லை! அன்றியும் எல்லாப் பாசங்களையும் விலக்கும்.

# பராபக்தியும் பரமஞானமும் ஒன்றே

உபநிஷத்துக்கள் பரம், அபரம் என்ற இருவகை ஞானங்களை உபதேசிக்கின்றன. இந்தப் பரமஞானத்திற்கும், பக்தன் புகழும் பராபக்திக்கும் வித்தியாசமில்லை. முண்டகோபநிஷத்தில் இவ்வாறு கூறப்படுகிறது:—“பரம் (உயர்ந்தது), அபரம் (தாழ்ந்தது) என்ற இருவகையான ஞானத்தைச் சம்பாதிக்கவேண்டும் என்று பிரஹ்மத்தை அறிந்த பெரியோர்கள் கூறுகிறார்கள். அதில் தாழ்ந்தஞானமாவது, ரிக், ஸாமம், யஜுஸ், அதர்வமென்னும் வேதங்கள் நான்கு; சிக்ஷா அல்லது ஸ்வர உச்சாரணங்களைச் சீர்திருத்தும் சாஸ்திரம்; கல்பம் அல்லது வேள்விமுறைகளை விதிக்கும் நூல்; இலக்கணம்; நிருக்தம், அதாவது பதபதார்த்தங்களைப் போதிக்கும் சாஸ்திரம்; சந்தஸ், அதாவது யாப்பியல், ஜோதிஷம் ஆகிய வேத வேதாந்தங்களைக் கற்றல். உயர்ந்தஞானமாவது, அக்ஷரமாகிய பிரஹ்மத்தை அறிதல்.” இதனால் பிரஹ்மத்தை அறிவதே உயர்ந்த ஞானமென்று வெளியாகிறது. பராபக்தியின் சொரூபத்தைத் தேவிபாகவதம் அடியில் வருமாறு கூறுகிறது:—“ஒரு கலயத்தினின்று மற்றொன்றில் ஊற்றும்போது, இடைவிடாமல் ஒரே தாரையாய் எண்ணெய் விழுவதுபோல, மனமானது சஞ்சலமற்று, ஒரே முகமாகப் பரமாத்மாவைத் தியானிக்குமானால், அதுதான் பரா (உயர்ந்த) பக்தி.” அவ்விதம் அசைவுமறைவின்றி, உறுதியோடு மனமும் புத்தியும் கடவுளடியில் தங்கிப் பரிவுறுமாகில் அதுவே அவர்பால்

மனிதனுற் செய்யவல்ல அன்பினுடைய எல்லை. மற்ற அன்புகளெல்லாம் இப்பராபக்தியைச் சாதிக்கக் காரணங்கள். இந்தப் பராபக்தியைத்தான் பரிவு தோன்றின பின்பு விளையுமென்கிருர்கள். ஒப்பற்ற மாட்சிமை மிகுந்த இந்தப் பக்தி மனிதனுடைய மனத்தில் உதித்ததும், அவன் கடவுளையே சந்ததமும் நினைப்பான் ; வேறு எதிலும் ஞாபகம் வையான். அவனது ஆத்மாவும் சுத்த சாத்துவிகத்தைப்பெற்று, பஞ்ச பூதங்களுடைய சேர்க்கையினுல் வந்த பந்தங்களைப் போக்கிச் சர்வ சுதந்திர மாகிறது. இத்தகைய பெருமை பொருந்தினவனே கடவுளைத் தனது மானஸ பீடத்தில் இருத்திப் பூசிக்க வல்லவன். விக்கிரகம், நூல்கள், விதிகள் யாவும் அவனுக்குச் சிறிதும் உபகாரத்தைத் தரத் திறமையற்று அனுவசியமாகின்றன. இவ்வித பக்தியைக் கொள்வது எளிதன்று.

திரும்பி ஆசை வைப்பவரிடத்தே ஆசை வைப்பதும், அவ்வாறில்லாதவரை உதாஸீனஞ் செய்வதும் உலக நடையில் வழக்கமாக இருக்கின்றன. சில மகான்கள் மாத்திரம் பதிலுக் காசை காட்டாதவர்பாலும் நட்பு கொள்வார்கள். இத்தகைய அன்பை, விட்டில் பூச்சி நெருப்பில் வைக்கும் மோகத்திற்கு உவமையாகச் சொல்லலாம். விட்டில் நெருப்பைக் கண்டு, மாழ்கி, அதில் விழுந்து எரிகிறது. இவ்வாறு மோகிப்பது அந்தப் பூச்சியின் சுபாவம். வியாஜத்தைத் தேடாமலும், பயனைப் பாராமலும் பரவு கொள்வதே இம்மாநிலத்தில் நாம் பார்க்கும் அன்புகளின் சிகரம். இதையே மறுமைக்குரிய விஷயங்களிற் செலுத்தினுல், அது கடைசியில் பராபக்திக்குக் கொணர்ந்து விடுகிறது.

# பக்தியின் த்ரிகோணம்

மூன்று முனைகள் கூடி ஒரு த்ரிகோணம் ஆவது போல, மூன்று அங்கங்கள் ஒருங்கு சேர்ந்து பக்தி ஒளிபெறுகிறது. இம்மூன்றும் இன்றி மெய்யன்பு நில்லாது. இவைகளுள் முதலாவதங்கம் விலைவிரும்பாமை. கைம்மாற்றைக்கருதிச் செய்தால் அது உண்மையான அன்பாகாது. அதுவும் ஒரு வர்த்தகமாம். 'கடவுளைத் தொழுவதனுல் இந்தப் பயனைப் பெறலாம், அந்த லாபம் லபிக்கும்' என்னும் எண்ணம் உள்ளவரையில், அவர்பால் ஒருவருக்கு நிஜமான விசுவாசம் நிலையாது. இதைத்தா, அதைத்தா வென்று வேண்டிக்கொண்டே கடவுளைத் தொழுவார்கள். அந்த வரங்கள் கிடைக்காவிடில், கட்டாயம் பூஜையை நிறுத்தி விடுவார்கள். பக்தனே, ஒரு பயனையும் கருதாது, கடவுளை விரும்பிப் பணிகிறுன். முன்பொருகாலத்தில், ஓரரசன் வனத்திற் சென்று ஒருமுனிவரைக் கண்டான். சிறிது நேரம் சம்பாஷணை செய்ததும், அவருடைய கல்வியையும், ஒழுக்கத்தையும் கண்டு மகிழ்ந்து, அம்முனிவரைத் தன்னிடம் ஏதாவது பரிசில் பெறவேண்டும் என்று பிரார்த்தித்தான். அத்தவசித் தலைவரோ, "காட்டிலுள்ள கந்த-மூலங்கள் உண்ணப்போதும்; மலையருவிகளின் தண்ணீர் குடிக்கப்போதும் ; மரவுரிகள் தரிக்கப் போதும்; குகைகள் இருக்கப்போதும். நான் ஏன் ஒருவரிடம் கை நீட்டி வாங்குவேன்?" என்று மறுத்தார். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற வேந்தன், "ஐயா! என்னுடன் நகருக்கேகி, எனது அகத்தில் சின்

ளுள் தங்கி, என் கையினின்று எதையாவது பெற்று வாழ்த்துவீராகில் எனக்குச் சீர்மை மிகும்" என்று சொல்லிப் பலமுறை வருந்தி அழைத்தான். பிறகு, அம்மறையவரும் இணங்கி மன்னனுடன் ஊர் சென்ருர். அரசனும், அம்முனிவரைத் தனது மணிமண்டபத்தில் இருத்தி, அவரை உபசரிக்கு முன்னம், வழக்கம்போல இஷ்ட தெய்வத்தைப் பூசிக்க ஆரம்பித்தான். "இறைவனே! மக்கட் பேற்றையும், செல்வச் சிறப்பையும், நாட்டு வளத்தையும், சரீர சுகத்தையும் பெருகச் செய்வீராக" என்று அவ்வேந்தன் வேண்டுவதைக் கேட்ட மஹரிஷி, மெல்ல ஆசனத்தை விட்டெழுந்து, வெளியிற் செல்லத் தொடங்கினர். இதைக் கண்ணுற்ற அரசனும் திகைத்துப் பின்னரோடி, 'ஐயா! ஒன்றையும் பெருமற் செல்கின்றீரே' என்று கூவ முனிவரும், "எளியோய்! நான் எளியவரிடம் தானம் வாங்குவதில்லை. பிச்சை புகும் நீ எனக்கு என்ன தருவாய்? உன்னைப்போன்ற ஏழைகளை வதைத்துப் பணம் பறிக்க நான் மூடனல்லேன். போ, என்பின் வராதே" என்று அதட்டிச் சென்ருர். இந்தக் கதையினல், வரங்களை வேண்டித் தெய்வத்தின்பால் பக்தி பண்ணுவோருக்கும், தெய்வத்தின் வனப்பைக்கண்டே நேசிப்பவர்களுக்கும், உள்ள வாசி விசதமாகிறது. எவ்வித விருப்பத்தைக் கொள்வதும் வாஸ்தவபக்திக்குத் தகாது. மோக்ஷம் வேண்டுமென்று யாசிப்பதும் அவ்வுயர் நிலையைத் தாழ்த்தும். பொற்புடைய பெருங்காட்சியைக் கண்டு சாமானியன் மகிழ்வதுபோலப் பக்தனுக்கு அன்பு பிறக்கிறது. அக்காட்சியினின்று லாபத்தை விரு

ம்புகிறோமா? 'அக்காட்சியைத் தரும் பொருளும் நம்மை ஏதாவது கேட்கிறதா? இல்லை. ஆயினும் அதைக் கண்டவுடனே, இன்னதென்று சொல்லுதற்கரிய பேரானந்தத்தை அடைந்து, சாந்தி மேலிட்டுச் சற்று நேரம் மெய்மறந்து நிற்கிறோமல்லவா? பக்தியின் தன்மையும் இவ்விதமே. இதுவே அதன் முதலங்கம். ஒன்றையும் இரக்காமல் மனத்தைக் கடவுளுக்கு ஈதல்வேண்டும்.

இரண்டாவது அங்கம், பயமின்மை. என்ன தீங்கை விளைவிப்பாரோவென்று நடுங்கி, அதற்காகக் கடவுளிடம் பக்திசெய்பவர்கள் மானிடருள் கடைப்பட்டவர்கள். தண்டனைக்கு அஞ்சி அவரைத் தொழுகிறார்கள். ஒரு கையில் சாட்டையையும், மற்றொன்றிற் செங்கோலையும் பிடித்துத் தன்னுடைய ஆணையைத் தவறி நடப்போரைக் கொல்லக் காத்திருக்கும் கொடுங்கோன் மன்னன் அக்கடவுள் என்று அவர்களெண்ணம். இவ்வாறு பயத்தோடு பூசித்தல் அவமானகரம். அச்சமுள்ளபோது நட்பு எங்கிருந்து வரும்? அன்பு பயத்தை அடியோடு ஓட்டும். நாய் குரைத்தாலே வீட்டிற்குள் ஓடிப்பதுங்கும் பெண்களும் தமது குழந்தையை நடத்தித் தெருவில் போம்போது சிங்கம் பாய்ந்தாலும் அச்சிங்கத்தின் வாயிற் புகுந்து போர் புரிவார்கள். முன்னிருந்த பயம் எங்கு சென்றது? மைந்தன்மீதுவைத்த ஆசை அவ்வச்சத்தை வென்றது. தாம் வேறு, அயலார் வேறென்று பிரித்துத் தமது சுகமே முக்கியமென்று எண்ணும் சிறுமையினால் இவ்வச்சம் உண்டாகிறது. மடியில் கனமிருந்தால் வழி

யில் பயம். தான் மிகவும் எளியவன்; தன்னை ஒரு பொருட்டாக எண்ணித் தடுப்பாரில்லை என்னும் சிந்தை மிகுந்தால் பயந்தோன்றக் காரணமே இராது. பயம் சிறிதேனும் உள்ள வரையில் அன்பிற்கு இடமில்லை. உண்மைப் பக்தர்கள் கடவுளைக்கண்டு அஞ்சார். "கடவுளது திருநாமத்தை வீணில் வழங்காதே" என்னும் விதியைக் கேட்க வாஸ்தவ பக்தன் நகைப்பான். பக்தி யோகத்தில் அபசாரமேது? கடவுளது நாமத்தை வகிக்க வகிக்க நன்மையே நாடுமன்றோ? அவர்பால் வைத்த ஆசை ஒன்றே அவரது பெயரைச் சொல்லச் செய்யும்.

மூன்றாவது அங்கம், போட்டிப்பாராமை; அதாவது நாம் விரும்பும் தெய்வத்திற்கு வேறொன்றும் ஈடில்லை யென்ற கொள்கை. நட்புக்கழகு நேயனை நிறை கொள்ளல். அயலார்க்குத் தீயதாகத் தோன்றினும், தான் மெச்சுவதே சிறந்ததென்று நினைப்பது இப்புவியில் வழக்கமல்லவா? தாழ்ந்தவர் மீதிலும் உண்மையான அன்பு வைக்கலாம். சிறந்தவரிடத்திலேயே இன்னொருவனுக்கு ஆசை பிறக்கலாம். இவ்விருவகை அன்புகளிலும், அவனவன் தன்னுடையதே உயர்ந்ததென்று சொல்வான். அன்பு வைப்பதற்குக் கடவுள் ஒருவரே சிறந்த பாத்திரம். பண்டிதன், பாமரன், புண்ணியன், புல்லியன், புருஷன், ஸ்திரீ, கற்றவன், கல்லாதவன், ஸம்ஸ்காரத்தைப் பெற்றவன், பெறாதவன் எல்லார்க்கும் கடவுளே கதி. அழகிற் சிறப்போ, வலிமையின் மேன்மையோ, அதிமானுஷத் தன்மையோ, எதை யோசித்தாலும் ஈசுவரனையே குறிக்கிறது.

இத்தகைய கற்பனைகளை யாவரும் செய்கிறார்கள். இவைகளை அப்பியாசத்தில் அனுபவிப்பதற்கே பாடுபடுகிறார்கள். நம்மினத்தில் ஓங்கும் பலவகைச் சங்கங்களிலும், சிற்சில கற்பனைகளைச் சாதிக்கத்தானே முயற்சி செய்கிறார்கள். உள்ளத்தில் உதிக்குஞ் சிந்தனை வெளியில் வேலையாகத் தோன்றத்துடிக்கும். கற்பனையைக் கருமமாக்கவேண்டு மென்கிற ஆசைதான் ஒவ்வொருவனையும் வேலைகளில் தூண்டுகிறது. பல பிறப்புகளில் வருந்தி வருந்திக் கடைசியில், தன்னெண்ணம் போலத் தரணியில் வாய்க்காது என்னும் நல்லறிவு தோய்ந்து, தன்னிலே தானுய் அயர்ந்து, தான் கொண்ட பாவனையைத் தியானத்திலேயே ஸாக்ஷாத்கரித்துப் பக்தி யோகி மெய்த்திடுகிறான். தன்னந்தனிப் பெருமை வாய்ந்த இந்தப்பாவனை மற்றைச் சிறிய சிந்தனைகளைக் கவருகின்றது. காமிக்குக் கூனியும் அரம்பை. குரூபியைக் கட்டிக்கொண்டு அலைகிறானே யென்று பிறர் பரிகாசம் செய்தாலும், காமுகனுக்கு ரம்பை என்றே நினைவு. குரூபமே அவன் கண்களிற் படுவதில்லை. ஏனெனில், நாம் ஒருவரிடம் அன்பு கொண்டால் அவரே, நம் அன்பிற்கு இலக்ஷியமாக இருப்பதாகப் பாவனை கொள்கிறோம். நல்லது! உலகத்தார் செய்யும் அன்பு எத்தன்மை யுடையது? பரம பக்தன் பாராட்டும் பராபக்தியாகுமோ? அல்லவேயல்ல. சாமானியர்கள், தமக்குள் காணப்படும் உயர்ந்த குணங்களைப் பிறர் மேல் ஏற்றிக் கொண்டாடுகிறார்கள். ஆதலால்தான், இம்சையில் ருசிகொண்ட குரூரகர்மங்கள் தமது தெய்வத்தையும், காவு வாங்கி இரத்தத்தை இச்சிக்கும்

குணத்தையுடையதாக நினைக்கிறார்கள். அதுவே அவர் கருத்திற் சிறந்த குணம். இது காரணம் பற்றியே, தூயவர் தொழுந்தெய்வம் மிக்க தூய்மை நிறைந்ததாக இருக்கும். மற்றவர்களுடைய தெய்வத்திற்கும், அதற்கும் அதிக வேற்றுமையும் காணப்படும்.

---

# பக்திக்கு இலக்காகும் ஈசன் தனக்குத்தானே அத்தாட்சி

மேற்சொன்ன விதம் பேராசையையும், பிரதி பிரயோஜனத்தில் நோக்கத்தையும், பயத்தையும் ஒழித்த பக்தனுடைய எண்ணம் எவ்விதமிருக்கும்? கடவுள் முன்னிலையிலும் அவன், "எனக்குள்ளதை யெல்லாம் உமக்கு அர்ப்பித்தேன்; கைம்மாறு ஒன்றும் வேண்டேன்; பார்க்குமிடத்து எனதென்று அற்பமுமில்லை" என்பான். இந்தப் பக்தியே பரிபூர்ணமானது. அதற்குக் கரையில்லை; களங்கமுமில்லை. அது பரிசுத்தமாகப் பரவுகின்றது. அதைப் பெருக்கப் பிரதீகம், போதனை முதலிய வெளிக்கருவிகள் வேண்டா. மற்றச் சிற்றறிவினர் செய்யும் பூசைகளெல்லாம் இப்பராபக்தியைச்சாரும் பாதையிலுள்ள மதில்கள். ஒவ்வொரு வஸ்துவாகப் பொறுக்கி, அது தன்னபிப்பிராயத்திற்கு ஒத்துவருகிறதா வென்று பரீக்ஷித்துக் குறையிருப்பதைக்கண்டு, பயனில்லை யென்று தள்ளித்தள்ளி, உலகத்திலுள்ள பதார்த்தங்களில் தான் ஊகிக்கும் நற்குணங்களை முற்றும் தேடுவது வீணானதை யென்று நிச்சயித்து, முடிவில் தனது கற்பனைகளின் முடிவான எல்லையைத் தன்னுள்ளத்திலேயே கேவலம் மனோபாவனையாகப் பக்தன் அனுபவிக்கிறான். அதுவே அவனுக்கு உண்மையான தோற்றமாகிறது. இந்த ஸ்திதியை அடைந்த பக்தன், "கடவுள் இருக்கிறாரென்பதற்கு ருஜுவுண்டா? அவர் எங்குமிருப்பார் என்பதும், எல்

லாம்வல்லவர் என்பதும் நிஜமா?" என்று ஆசங்கை பண்ணுவதில்லை. தான் விரும்பும் இறைவர் அவரே என்னும் உணர்ச்சியே அவனுக்குப் போதும். சுயம் பிரகாசமாகி அவர் அவனெதிரில் தோன்றுகிறார். காதல் மிகுந்தவன், தன் ஆசைக்காதலி மெய்யாக உயி ருடன் இருக்கிறாள் என்று நம்பச் சாக்ஷியைத் தேடுவ தில்லை. மற்ற மதங்களிற் சொல்லும் தண்டனைக் கட வுளை விசுவாசிக்கப் பல திட்டாந்தங்கள் வேண்டும். அத்தகைய தெய்வங்களைப் பக்தன் சற்றேனும் நினைக்க மாட்டான். அவனுக்கு அனுராக மூர்த்தியாகவே கட வுள் விளங்குகிறார். எல்லா உயிர்களிலும் அவரே நிறைந்திருப்பதைக் கண்டு ஆனந்த பரவசமாகி, "ஒருத் தியும் தனது கணவனை, அவனுருவத்திற்கும் குணத் திற்குமாக விரும்புவதில்லை; அவனுள் பிரகாசிக்கும் பரமாத்மாவை நோக்கியே விரும்புகிறாள். ஒருவனும் தனது மனைவியை, அவளுருவத்திற்கும், குணத்திற்கு மாக விரும்புவதில்லை. அவளுக்குள் தோன்றும் ஈச னது மூர்த்தியைப் பற்றியே விரும்புகிறான்" என்று கூத்தாடுவான்.

சுயலாபத்தை இச்சித்தே யாவரும் எந்த வேலைக ளிலும் நுழைகிறார்கள் என்று சிலர் விளம்புவர். அதுவும் இப்பராபக்தியின் ஓரம்சமே; ஆனால் சிற்றின் பத்தைப் பற்றுகிறது. சர்வ வ்யாபியான கடவு ளுடைய மூர்த்தியில் நாமும் அடங்கினவரென்று உண ரும்போது, நம்முடைய அன்பும் எல்லாப் பொருள்களை யும் பற்றும். அந்த விச்வரூபம் வேறு, நாம் வேறென்று எண்ணங்கொண்டால், நம்முடைய அன்பும் குறுகி,

சில வஸ்துக்களை மட்டும் பற்றியிருக்கும். ஆதலால், நம்முள் ஜனிக்கும் அன்பைக் குறுக்குவது தப்பு. பிரபஞ்சத்தில் தோன்றுகின்ற பொருள்களெல்லாம் கடவுளினின்றே பிறக்கிறபடியால், எல்லா வஸ்துக்களும் நமது விசுவாசத்திற்கு உரியவைகளே. விச்வரூபியான கடவுளை உணர்ந்த மாத்திரத்தில், மற்றைச் சிறு தேவதைகள், மதங்கள், நூல்கள், கோட்பாடுகள் எல்லாம் அர்த்தமின்றி வியர்த்தமாகின்றன. சகல மலங்களும் நீங்கி, பரிசுத்தனாகி, பக்தி யென்னும் அமுதவெள்ளம் இதயத்தில் ஊறும்போது, கடவுள் அன்பிற்கு உரியவரென்னும் எண்ணம் ஒன்றே மிகுந்து, மற்றவைகளை அஸாரங்கள் என்று பக்தன் தள்ளுகிறான். அவன் கடவுளைத் தரிசிக்கக் கோவில்களில் நுழையான். அவர் இல்லாத இடம் இல்லையென்று அறிந்தவனன்றோ அம் மஹா புருஷன். ஆலயத்திற் குள்ளேபோல, வெளியிலும் அவர் வியாபித்திருப்பதைப் பார்க்கிறான். யோகிகள் செய்யும் நற்கருமங்களிலும், துடுக்கர் தொடுக்கும் இடுக்கண்களிலும், அவரது செயலையே காண்கிறான். தன்னுடைய இதயத்தில் சுயம்பிரகாசமான பரஞ்சோதி ஜொலிக்கிறபடியால், அவ்வொளியின் மகிமையினால் எல்லாப் பொருள்களிலும் அக்கடவுளே நிறைந்திருப்பதைச் சங்கையறக் காண்கிறான். இவ்வளவு ப்ரபாவமுள்ளது பராபக்தியென்பது.

# மானிடர் தெய்வபக்தியை வர்ணிக்கும் வகைகள்

இந்தப் பராபக்தியை மானுஷபாஷையில் குறையற வர்ணிப்பது அசாத்தியம். எவ்வளவு நுட்பமான மனோபாவனைக்கும் எட்டாத பெருமையுளது அந்தப் பக்தியின் தன்மை. ஆயினும், பக்தி யோகத்தைப் பற்றிய பெரியோர்கள், தம்மால் இயன்றமட்டில், இவ்வன்பின் வகைகளைச் சாமானியர்களும் அறியும் வண்ணம் எளிய வசனங்களில் சொல்லியிருக்கிறார்கள். மனிதர்கள் தம் சாதாரண வாழ்க்கையில் செய்யும் அன்புகளையே சுட்டிக்காட்டி, அத்யாத்மகமான பக்தியையும் குறித்திருக்கிறார்கள். அத்யாத்ம விஷயங்களையும், மானுஷ பாவனையை ஒட்டிச் சொன்னால் மட்டுமே மனிதன் அறிவான். பரிபூரணமான பரம் பொருளையும், குறைவு மிகுந்த நம்முடைய பாஷையிலேதானே நாம் கற்கவும், கற்பிக்கவும் வல்லோம். ஆதலால், பாமரன் கொள்ளும் காம வெகுளிகளைக் காட்டியே பக்தர்கள் கடவுளடியிற் செய்யும் பக்தியையும், பூசை வகைகளையும் வர்ணித்திருக்கிறார்கள்.

"சாந்தம்" என்பது பக்தியில் கடைசித் தரமானது. உத்கடாவஸ்தையின்றியும், சாதாரணவிசுவாசத்தை அதிகரித்தும், மேலுக்கென்றில்லாமல் கடவுளை ஒருவன் பூசித்தால், அது சாந்த பக்தி எனப்படுகிறது. உலகத்தில் சிலர் மெள்ளவே நடக்கப் பிரியப்

படுவார்கள். சிலர் காற்றைப்போல் விரைந்து ஓடுவார்கள். சாந்தபக்தன் முதலில் சொல்லியவரை ஒத்தவன்; அவசரமின்றி நிதானத்தோடு இருப்பான். இதற்கு மேலானது "தாஸ்யம்" என்பது; ஆசையுள்ள அடிமை வேலைக்காரன் எஜமானனிடத்தில் வைக்கும் விருப்பம். இதற்கும் மேம்பட்டது "ஸக்யம்" என்பது; அதாவது நட்பு. இந்தப் பக்தியைச் செய்பவன் தெய்வத்தைத் தோழனாகக் கருதுவான். சிநேகிதன் தனக்கு ஸமானஸ்கந்தன்; அந்தரங்கமான குறைகளையும் அவனோடு சொல்லலாம்; அக்குற்றங்களுக்காகத் தன்னை அவன் இகழான், வேண்டுமான உதவியையும் செய்வான் என்று நம்புவதுபோலக் கடவுளையும் நம்பிப் பரிவுடன் பணிவான். பக்கத்திலிருந்து எப்போதும் பாதுகாக்கும் உயிர்த்துணைவனைப்போலக் கடவுளையும் எண்ணி, தன் கதையை முற்றும் ஒளிக்காமல் அவரிடம் ஒப்புவித்து நம்பிக்கையும் அடைக்கலமும் அடைகிறான். அவரையும் விளையாட்டுத் தோழனாகக் கருதுகிறான். ஆழ்ந்து நோக்கின் கடவுளுக்கு இப்பிரபஞ்சமும் விநோதமன்றோ? குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடுவதுபோல, பகவானும் லீலைக்காகவே ஜகத்தைச் சிருஷ்டிக்கிறார். "அவர் பரிபூரணர்; அவாப்த ஸமஸ்தகாமர்; ஒருகுறையும் இல்லாதவர் ஏன் உலகத்தைப் படைக்கவேண்டும்? குறையை நிறைவேற்றுவதற்குத்தானே வியாபாரத்தில் புகுகிறோம். எவன் வேலையாளியோ, அவன் குறையுள்ளவன் என்று அர்த்தமாகிறதல்லவோ? பரிபூரணரான பிரானும் ஏன் ஸதாகாலமும் வேலையில் ஊன்றி வையகத்தைப் படைக்

கிறார்? அவருக்கு அபேக்ஷை என்ன? நம்மைப்போல் ஏதோ லாபத்தை இச்சித்தே அவரும் உலகங்களை உண்டாக்குகிறார்'' என்று சொல்வது வெறுங் கட்டுக் கதையே யன்றி உண்மையாகாது. கேவலம் வேடிக்கையே அவர்க்கு இவ்வுலகம். ஆதலால், பக்தனும் அவரை விளையாட்டுத் தோழனைப்போல் விரும்பி ஆனந்திக்கிறான். ஏழ்மை வாய்த்தாலும், அதை விளையாட்டாக நினைத்து, சிந்தையில் கவலையின்றி அனுபவிக்கிறான். பணம் படைத்தாலும், அதிக சந்தோஷம் கொள்ளாமல் விளையாட்டைப்போல் பாராட்டுவான். கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவ்வாறே. சுகம் வரின் இன்னும் மிக்க விநோதமே. தெய்வத்தைத் தோழனாகக் கொண்டு, நாமெல்லோரும் இவ்வுலக வாழ்வாகிற பெருவிளையாட்டில் அமர்ந்திருக்கிறோம். ஒரு பிரளயமானதும் இது முடிகிறது. பிறகு, கொஞ்சம் ஓய்வு. அப்புறம் மறுபடி உலகங்கள் சிருஷ்டிக்கப்பட்டு, வேடிக்கையும் ஆரம்பித்து நடக்கும். இவ்விதமாகச் சம்சார சக்கிரம் சுழன்று வருகிறது. இந்த தத்துவத்தை மறந்தாலே கஷ்டநிஷ்டூரங்கள் ஏற்பட்டு, மனத்திற் பெரும் கவலைப்பாறை ஊன்றி வருத்துகிறது. மாறி மாறி வரும் இன்ப துன்பங்கள் க்ஷணபங்குரங்கள்; எப்பொழுதும் நிலையாக நில்லாதவை; பகவான் ஆடும் இவ்விளையாட்டில் நாம் கருவிகளாக நின்று உதவுகிறோம்; ஒன்றும் நிரந்தா மல்லவென்று அறிவு மிகுந்ததும், துக்கமென்பது தொலைந்துவிடும். ஆகையால், ஒவ்வோர் அணுவிலும் அவரது அற்புத லீலையைக் காணவேண்டும். மண்டலத்தைப் படைத்

தும், மதிகதிர்வர்களை ஆகாயத்தில் நடத்தியும், மானிடர், மிருகம், செடிகளையும் அசைத்தும் அவர் இங்கு பெருங் கூத்தாடுகிறார். அவராடும் சதுரங்கத்தில் பிரமன் முதலான உயிர்த்திரளெல்லாம் காய்களாக நிற்கும். அவரவரை அவரவர் நிலத்திலிருத்திப் பிறகு மாற்றியும் ஆடுகிறார். தெரிந்தோ, தெரியாமலோ, நாமெல்லோரும் இந்த ஆட்டத்தில் நடமாடுகிறோம். அவர் கையிலெடுக்கும் காய்களென்று நினைக்கும் போதே எவ்வளவு ஆனந்த முண்டாகிறது ?

இதற்கும் மேற்பட்ட பக்தி "வாத்ஸல்யம்" என்பது. அதாவது தெய்வத்தைத் தந்தையைப்போல் தொழுவதை விட்டுப், பிள்ளையைப்போல் மெச்சிப் பரிவு கொள்ளுதல். இது கேட்கச் சிலர்க்குப் புதிதாகப் படும். ஆயினும், கடவுள் வல்லமை மிக்கவர் என்னும் சிந்தனையை அடியோடு மறப்பதற்கு இதுவே உதவும் உபகரணம். வல்லமையை நினைக்கும்போது பயமும் கூடத்தோன்றும். திகிற்படுதல் அன்போடு ஒவ்வாது. வணக்கமும், இணக்கமும் நன்னெறியை வளர்த்திட அவசியங்களே யாயினும், இந்நெறி நிரம்பிடைந்து, சாந்த பக்தியையும் கடந்து கொஞ்சம் பக்திவெறியின் உருசியை அருந்தினவன், நூல்களையும், முறைகளையும் அபேக்ஷிப்பதில்லை. கடவுளைச் சர்வ சக்தியுள்ளவரென்றும் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயக ரென்றும் தேவாதி தேவரென்றும் புகழ்வானல்லன். அவன் இக்குணங்களைச்சட்டை செய்வதுமில்லை. பயத்திற்குக் காரணமாகிய சக்திகளை மறந்து, கடவுளையும் குழந்தையைப் போல் அதிகப்பிரேமையோடு பார்க்கிறான். தாய்தந்

தையர்க்குத் தமது பாலனிடத்தில் பயம் உண்டாகாது. அவர்கள் அவனை வணங்கவும் ஏதுவில்லை. அவனிடத்தினின்று லாபத்தையும் விரும்பார். பாலகனுனவன் எப்போதும் தாய் தந்தையரிடம் நன்மையைப் பெறுவானேயல்லாது, அவர்கட்குத் தருவானல்லன். அவர்களும் அவன்மேல் வைத்த வாஞ்சையினுல், தமது உயிரைப் பலமுறையும் அவனுக்காகக் கொடுப்பார்கள். அவ்வொரு சிறுவனைக் காக்கப் பலரையும் மாய்த்திடுவார்கள். அதுபோலவே, கடவுளிடத்திலும் அகண்டமான பக்ஷத்தைச் செய்யவேண்டும். கடவுள் பூதலத்தில் அவதரிக்கிறுர் என்னும் நம்பிக்கை கொள்ளும் ஜனங்களிடத்தில் தான் இந்த "வாத்ஸல்ய" பக்தி தோன்றிச் சிறக்கும். மஹம்மதியர்கள் இதை நெஞ்சால் நினைக்கவும் நடுநடுங்குவார்கள். கிறிஸ்தவர்களும், இந்துக்களுமே இதைச் சுலபமாய் அறிந்து மெச்சுவார்கள். ஏனெனில், இவர்கள் இளமைப் பருவத்தில் தெள்ளிய கிறிஸ்துவையும், கிருஷ்ணனையும் தெய்வமாகத் தொழுகிறுர்கள். இந்திய மங்கையர்கள், கண்ணனுடைய அன்னைகள் தாங்களென்று எண்ணி மகிழ்வார்கள். அவ்வாறே, கிறிஸ்தவமடவாரும் இயேசுவைச் சேயைப் போல் பாவிக்கலாம். இந்தத்தோற்றம் அவர்கட்கும் வாய்க்குமாகில், தெய்வத்தைப் பெற்ற பிள்ளையைப்போல் காதலித்தலின் வனப்பை மேல்நாட்டார்களும் உணர்வார்கள். பக்தியின் அதிசயத்தாலே கடவுள்பால் திகிலும், மதிப்பும் வாங்கும்.

இதைவிடச் சிறந்த பக்தி ஒன்று உண்டு; அதாவது "மதுர" பக்தி; தித்திக்கும் அன்பு. இதுவே

மனிதர் களறிவுக் கெட்டினவைகளுள் உயர்ந்தது. ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் பாவிக்கும் காம வெகுளியே உலகத்தில் தென்படும் எல்லாவித அன்பி லும் பெரிது. இந்த ஆவேசம் மிகுந்தால், அங்கம் புளகித்து, பித்துப்பிடித்துத் தன்னையே மறந்து, இயல்பையுமிழந்து, மனிதனைப் பேய்போலவும் அமரன் போலவும் நடிக்கச்செய்யும். இந்நிலைமையில் தெய் வத்தினிடத்தில் அவன் பதிபாவனையைப் பண்ணு வான். "ஜகத்துளா ரெல்லோரும் பெண் பாலர்போல அப்புருஷோத்தமனுடைய ஆதரவிலே வாழ்கிறார்கள். அவரொருவரையே புவனத்தில் புருஷரெனத்தகும்" என்று பக்தன் இயம்புவான். ஆதலால், புருஷன் ஸ்திரீ யினிடம் செய்யும் பிரீதியையும், ஸ்திரீ புருஷன்பால் கொள்ளும் மயலையும் கடவுளை நோக்கிச் செய்யவேண் டும். மற்றச் சிற்றின்பப் பொருள்களில் தோயும் அன்புகள் யாவும் அக்கடவுளையே உத்தேசிக்கும். அன் பென்னும் பெரிய நதி அக்கருணைக் கடலையே நோக்கி ஓடுகிறது. இந்த ரகசியத்தை அறியாத சிற்றறிவோர் பொம்மை போன்ற சிறிய மனிதரைத் தம்மன்பிற்கு ஆட்களாக்கித் தயங்குகிறார்கள். பிள்ளையின் மேல் தோன்றும் வாத்ஸல்யம் அச்சிறுவடிவைக் குறித்த தன்று. கண் மூடியாய், அதை மாத்திரமே கண்டு நின்றால், நெஞ்சு புண்ணாகித் துயரச்சேற்றில் புதைய வேண்டும். இந்த வாதனை மூலமாகச் சிறுசீவன்களில் அன்பு வைத்தால் இவ்விதமே துயர் உறவேண்டும் என்னும் வெறுப்பு பிறக்கும். ஆதலால், என்றும் அழியாத நிலையாகி, மாற்றமுமில்லாது ஓங்கி நிற்கும்

பரம்பொருளை ஆசைக்கிலக்காக்கி, ஏற்ற மிறக்கமில்லாத அவரது பேரருட் கடலிலே மூழ்கி மகிழவேண்டும். ஆசைகளைச் சரியான வழியில் செலுத்தவேண்டும். ஆழாழிபோல் அளவில்லாத பேரன்பு பூரித்த கடவுளையே சாட்டி அவைகள் நிற்கவேண்டும். மலைச்சாரல்களினின்றும் ஓடிவிழும் நீர்த்துளிகள், திரண்ட ஆறுகளிலும், ஓடைகளிலும் பாய்ந்தாலும், அங்கேயே தங்காமல் ஓடியோடி சமுத்திரத்திற் கலத்தல்போல், நம்முடைய ஆசை நேசங்களும் அந்தத்திலே அப்பெருமானையே நாடி ஓயும். கோபங்கொள்ள வேண்டுமானாலும் அவரையே கோபித்தல் நலம். நண்பனாகவும், காதல் மிகுந்த காந்தனாகவும் உபசரிக்கும் அவரைவிட்டு வேறு எவரைத்தான் கோபிக்கத் துணிவுவரும். நரனுவான் எவனும் சினந்தால் பொறுக்க மாட்டான்; திரும்பி நம்மையும் கடிந்து பேசுவான். ஆதலால், காருண்யமூர்த்தியாகிய அக்கடவுளையே நண்ணி, "என்னருகில் அணுகாயோ; இங்ஙனம் என்னைத் தனியே தவிக்க விட்டு எங்கே ஒளித்தாய்?" என்று சினங்கொள்ளலாம். அவரைத் தவிர வேறு எப்பொருளில் காதல் உதிக்கும்? மண்ணாற் செய்த மனித யாக்கையில் என்ன சுகந்தான் இருக்கிறது? வடியாத பேரின்ப ஸாரத்தை யன்றோ நாம் எங்கும் தேடி அலைகிறோம். அவ்வானந்தக்கட்டிதானும் அப்பெருமான் ஒருவரே காண். நமது ஆவேச வாசைகளை அவரிடமே போக்க வேண்டும். அவையும் அவருக்காக வென்றே வந்தவை. தப்பித் தாழ்ந்த பொருள்களில் பாய்ந்தால், அவை தீயவை

களாக முடிகின்றன. அவரையே குறித்துச் செய்தால், கடைப்பட்ட காமமோகங்களும் சிறப்பை அடைகின்றன. கருத்தாலும், உடலாலும் செய்யும் கருமமனைத்துக்கும் கடவுளே கதி (ஏகாயனம்). ஆதலால், அவரையே எண்ணி நண்ணிடல் அவசியம். அழகிலுருவமேயாகி, சிறப்பின் சிறப்பாய்த் துலங்கும் அவரை விரும்பாது, நமதுள்ளம் எவரைத்தான் விரும்பி ஏங்கும்? அவரை விட்டு, மற்ற எதைத்தான் இவ்வுலககோடிகளில் அழகென்று சொல்லலாம்? அவரல்லாது, மற்றெவர்தான் இவ்வையகத்தில் காதல் வைக்க உரிய கணவராவார்? அன்பு பூண மற்ற எதுதான் அவரைவிடத் தக்கதாகும்? ஆதலால், அவரே நமக்கு நாதரென்றும், நண்பரென்றும் சிந்தனை செய்திடுவோமே.

இது காரணங்கொண்டே, தெய்வபக்தி முதிர்ந்த சான்றோரும் அந்தப் பக்தியைப் பாடும்போது, மானிடர்பால் தோன்றும் அன்பின் அவஸ்தைகளைச் சொல்லும் சொற்களையே போதுமானவை என்று அங்கீகரித்திருக்கிறார்கள். மூடர்கள் இதை அறியார்கள்; அறியவும் திறமையற்றவர். வெளிக்கண்ணால் பார்க்கிறவர்கள் இம்மூடர்கள். மனக்கண்மூடிப் பேரிருளில் தடுமாறுவார்கள். தெய்வ விசுவாசத்தின் ஆவேசவேகங்களை எவ்வண்ணம் அறிய வல்லார்கள்? "ஐயா! உன் வாயால் ஒரு முத்தம் தந்தருள். அவ்வொரு முத்தந்தனை உண்டவர்க்கு உன்னாசை மேன்மேலும் பெருகி, கவலையெல்லா மொழிந்து, அவர் உலகையும் மறந்து நிற்பார் அந்தோ!" என்று கோபிகாஸ்திரீகள் கதறினர்

கள். ஆதலால், பக்தரை உன்மத்தராகச் செய்து, நானை யும் அமரனுக்கவல்ல அப்பேரின்ப வமுதத்தை அருந்த முயன்றிடல்வேண்டும். இந்தச் சுகவாரித் துறையில் திளைத்திடுவோருக்கு அண்ட பகிரண்டமெலாம் அவ் வின்பக் கடலிலே அழுந்தி முழுகிப்போகின்றன.

கணவனும் மனைவியும் பாராட்டும் அன்பின் வேக மும் சில பக்தர்களுக்குப் போதாமல், கட்டழகி சோர புருஷனிடம் காட்டும் காதலையும் உவமை இடுவார்கள். நெறிதப்பினதாயிற்றே இந்தக் காதல் என்பது அவர் களுக்கு விஷயமன்று. அதன் வெறியையும், வேகத் தையுமே அவர்கள் புகழ்வார்கள். தடை அதிகமாய் நேரும் பொழுதே ஆசைக்கும் வேகம் மிகும். தம்பதி கள் அனுபவிக்கும் அன்பிற்குத் தடையே கிடையாது. ஆகையால் அன்னை, தந்தை, கணவர்களுக்குத் தெரி யாமல் ரகசியமாய்த் தன்னிஷ்ட புருஷனிடம் மயல் கொள்ளும் பெண்பாலை உதாரணமாகவும் சொல்லுகிறார் கள். ஸ்ரீமத் பாகவதத்தை உரைத்த சுகப்பிரம்மரிஷி யும், வைகுந்தவாசியான நாராயணனே கண்ணனாக அவதரித்தார் என்னும் திவ்ய ஞானத்தை உணர்ந்த கோபிகள், அக்கண்ணன்பால் பண்ணின வரம்பிலாத அன்பு வெள்ளத்தை மெச்சிக் கூறுகிறார். பிருந்தா வனத்தின் புதர்களில் அவ்வாய்ச்சியர்கள் எவ்வாறு கண்ணனை மருவினார்கள்; அவன் ஊதும் வேணுநாதம் செவியிற் பட்டதுமே, வீட்டிலுள்ள வேலைகளையும், பற்றுகளையும் துறந்து, எவ்வளவு ஆவலோடு அவ னிருக்குமிடம் சென்றார்கள் என்னும் விந்தையை நம் நாவால் உரைக்க முடியாது.

ஐயோ! மனிதர்காள்! வாயினுல்மட்டும் தெய்வ பக்தி சிறந்ததென்று புகழ்கிறீர்கள். பொய்யான உலக வின்பத்தில் பரபரப்பை விடமாட்டீர்கள்! நிசமான நேசமுளதோ உங்களுக்கு? "ராமன் இருக்கும் இடத்தில் காமனுக்கு இடமில்லை. காமன் கவர்ந்தவிடத்தில் ராமன் நுழைபானே." ஒளியும் இருளும் போல ஒரு தலத்தில் இவர்கள் தங்கார்கள்.

# நிகமனம்

இவ்வுயர் நிலைமை அடையும் தருணத்தில் வேத சாஸ்திரங்களைப் பொருட்டாக நினையார்கள். சுதந்திரம், மோக்ஷம், நிர்வாணம், எதையும் அலக்ஷியமாக உதறித் தள்ளுவார்கள். இப்பேரின்ப வமுதத்தை உண்ணும்போது யார்தான் மோக்ஷத்தை இச்சிப்பார்கள்? "செல்வமும், சுற்றமும், வடிவழகும், கல்விச் சிறப்பும், சுயேச்சா விஹாரமும் ஒன்றும் வேண்டேன். ஆண்டவனே! பலபிறப்பும் எடுத்து, நின் பாதமலரையே நண்ணி வாழ்க என்று அருள் புரியும்; "சர்க்கரையைத் தின்பேன், சர்க்கரையே ஆக விரும்பேன்" என்பான் பராபக்திபூண்ட பெரியோன். "அவரே யான் என நன்றாய் அறிவேன். ஆயினும், அவரை நேசித்து ஆனந்திக்கும்பொருட்டு அவரைப் பிரிந்து தனித்து எதிரே நிற்பேன்" என்பான். தாம் விரும்பும்பொருளை அனுபவிப்பதற்காக, கைவிலங்கு கால் விலங்கையும் பொறுப்பார்கள் அன்றோ? பக்தி பூண்டவன், தானும் பக்தியைச்செய்து, தன்னையும் பகவான் அனுகூலமாக அனுக்கிரகிக்கட்டும் என்று கருதுவானேயல்லாது, மற்றெந்தச் சுவையையும் பெரிதாகக் கருதமாட்டான். ஆற்றின் ஓட்டத்திற்கு விரோதமாக மேட்டில் அலையடித்து மோதுவதுபோல, இந்த தெய்வ பக்தியும் உலக நடைக்கு எதிராகப்பாயும். உலகம் அவனைப் பித்தனென்று பேசும். எனக்குத் தெரிந்த மஹா புருஷர் ஒருவர் உண்டு. அவரையும் உலகத்தார் பித்தரென்றே சொல்வார்கள். அவரோ புன்னகை

யுடன், "நண்பர்காள்! உலகமுழுவதும் பித்தர்மடமே. சிலர் காமத்தில் ஊறி வெறிபிடித்து அலைகிறார்கள். சிலர் கீர்த்தியை விரும்பியும், சிலர் பணத்தை வேண்டியும், சிலர் சுவர்க்கத்தை எண்ணியும், சிலர் மோக்ஷத்தை அபேக்ஷித்தும், எல்லோரும் பித்துப்பிடித்துத் திரிகிறார்கள். இங்கு நானும் ஒரு பித்தன். கடவுளை வேண்டி அலைகிறேன். உங்களுக்குப் பணத்திற் பித்தமானால், எனக்குத் தெய்வத்திற் பித்தம். என்னைப் போலவே நீங்களும் பித்தர்கள். எல்லாவற்றையும் விட என்னுடைய பைத்தியமே மேல் என்று எனக்கு எண்ணம்" என்று பதிலுரைப்பார். இத்தகைய வேகமிகுந்த வெறியே சிறந்த பக்தியாகும். இதன்முன் மற்றவையெல்லாம் மறைந்து விடுகின்றன. இந்த ஆவேசத்தை அடைந்த பெரியோரே, கடவுளின் கருணாகடாக்ஷத்தையும், நிரந்தரமான நிஷ்களங்க சுகத்தையும் இடைவிடாது அனுபவிப்பார்கள். இந்தப் பக்தி வெறியே உலகநோயைத் தீர்க்கத் திறமையுள்ளது.

பக்தியோகாப்பியாசத்தில் எல்லோரும் துவைதிகளாகவே ஆரம்பிக்கவேண்டும். கடவுள் தனி, தான் தனி என்னும் அபிப்பிராயம் முதலில் மேலிடுகிறது. பிறகு பக்தியானது இடையிற்புக, மனிதனும் கடவுளை அணுகி, அவரும் இவனருகில் வருகிறார். உலகவாழ்விற் செய்யும் உறவு முறைகளை அவர்பாலும் பாராட்டி, அவரைத் தந்தையாகவும், அன்னையாகவும், மைந்தனாகவும், உயிர்த்தோழனாகவும், எஜமானனாகவும், நாயகனாகவும் அனுபவிக்கிறான். இந்த முறைகளும் நன்கு இணங்கி, அனுபூதியும் செழிப்படைந்து, பக்தியின்

எல்லையைக்காணும் தருணத்தில், அவரே தான் என்னும் "ஸோஹம்" புத்தி உண்டாகிறது. ஆரம்பத்தில் அவரவர் தத்தமிடத்தே ஆசைவைக்கிறோம். தம் மோடேயே நிற்பதனால் இந்த ஆசை, அன்பென்னும் உயர்ந்த குணத்தையும் இகழச்செய்கிறது. கடைசியில், "தான்" என்னும் இச்சிறிய ஜீவன், எல்லாவற்றிலும் உள்ள பரமாத்மாவில் ஓரணுமாத்திரம் என்னும் ஞானதீபப்பேரொளி வீசும் போது மனிதத்தன்மை முற்றிலும் நீங்கி, ஜீவனும் சுயம்பிரகாசமாக விளங்குகிறான். அப்போது, இதயத்தில் இருந்த கல்மஷங்களும் வீணாசைகளும் ஒழிந்து பக்தியென்றும், பக்தியைச் செய்வோனென்றும், பக்திகு இலக்காகும் பரம்பொருளென்றும், எல்லாமொன்றே யென்னும் மெய்யுணர்ச்சியைப் பெறுகிறான்.

# ஸ்ரீராமகிருஷ்ண மடம்

## நோக்கங்கள்

1. ஆத்ம விடுதலைக்காகவும் தேச நலத்துக்காகவும் உழைப்பதற்கென உலகவாழ்க்கையை விடுத்துத் தங்கள் உடல்பொருளாவி யனைத்தும் தத்தம் செய்து முன்வரும் இளைஞர்களுக்குத் தக்க பயிற்சி யளித்து, நிஷ்காம கர்மம், பக்தி, யோகம், ஞானம் முதலிய வழிகளில் பழக்குவித்தல்.

2. பயிற்சிபெற்ற பிரசாரகர்களைக்கொண்டு இந்தியாவிலும் இதர நாடுகளிலும் சர்வ சமய சமரஸத்தைப் பரவச் செய்து சகோதரத் தன்மையை வளர்த்தல்.

3. உலகிற்றோன்றிய மக்களெல்லோரிடமும் இறைவன் உறைகின்றான் எனக்கொண்டு அவர்களுடைய வறுமை பிணி முதலிய கஷ்டங்களை நீக்கவும், எல்லோருக்கும் ஒழுக்கம், அறிவு, ஆத்ம ஞானம் முதலியவற்றை யளிக்க முயலுதல்.

---

உலக விஷயங்களில் ஆசை குறையும் அளவுக்கு ஈசுவர பக்தி அதிகரிக்கும். —ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸர்.

"நானோர் இந்தியன்; ஒவ்வொரு இந்தியனும் எனது சகோதரன்" என்று பறைசாற்று. "அனைத்து இந்தியன் அறிவில்லாத இந்தியன், ஏழை இந்தியன் பிராம்மண இந்தியன், பறைய இந்தியன்—ஒவ்வொருவனும் எனது சகோதரனே. இந்திய மண்ணே எனக்கு உயர்ந்த சொர்க்கமாவது; இந்தியாவின் நன்மையே என்னுடைய நன்மை" என்று கூறுக.

ஏழை, கல்லாதவன், அறிவிலி, பிணியாளன்—இவர்களே உனது தெய்வம் ஆகட்டும். இவர்களிடத்துத் தொண்டு செய்வதே மேலான புண்ணியம் என்பதை அறி.

என்றும் சுயபலத்துடன் நின்று இறப்பாயாக; பாபம் என்பதொன்று உளதாயின், அது பலஹீனமே; பலஹீனமே பாபம்; அதுவே சாவு. ஆதலால், எல்லாப் பலஹீனத்தையும் ஒழி. —சுவாமி விவேகாநந்தர்.

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

அவதார புருஷர்களான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களின் அரிய உபதேசங்களையும் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல கட்டுரைகளையும் கொண்டு வெளிவரும் ஒரு தமிழ் பத்திரிகை. மாதந்தோறும் வெளிவருகிறது.

வருட சந்தா உள்நாடு. ரூ. 3. வெளிநாடு ரூ. 4.

## பக்தி புகட்டும் நூல்கள்

| | ரூ. | அ. | பை. | விஜயம் சந்தாதாரர்க்கு. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 1003 உபதேசமொழிகள் | 1 | 6 | 0 | 1 | 4 | 0 |
| ஷெடி காலிகோ பைண்டு ... | 1 | 12 | 0 | 1 | 10 | 0 |
| குருதேவர் வாக்கியம் ... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| கர்மயோகம் ... | 0 | 12 | 0 | 0 | 10 | 0 |
| சிகாகோ பிரசங்கம் ... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| விவேகாநந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 | 0 | 0 | 6 | 0 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை | 0 | 12 | 0 | 0 | 10 | 0 |
| பக்தி மார்க்கம் ... | 0 | 5 | 0 | 0 | 4 | 0 |
| முத்தி நெறி ... | 0 | 2 | 0 | 0 | 2 | 0 |
| தற்கால இந்தியாவுக்குக் கொண்டுவந்த செய்தி ... | 0 | 4 | 0 | 0 | 3 | 6 |
| வேதாந்தத்தின் கோட்பாடுகளும் கருத்துக்களும் ... | 0 | 3 | 0 | 0 | 2 | 0 |
| எனது போர் முறை ... | 0 | 3 | 0 | 0 | 3 | 0 |
| நடராஜ வடிவம்; தில்லைத் திருநடனம் ... | 0 | 2 | 0 | 0 | 1 | 6 |
| தனக்குத்தானே உதவியும் ஆத்மார்ப்பணமும் ... | 0 | 1 | 6 | 0 | 1 | 0 |

ஸ்ரீராமகிருஷ்ண வசனாமிருதம்—எழுதிக்கேட்கவும்.

மானேஜர்:—

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.